படைப்பு
எழுத்தின் இணைப்பு
ஊற்று-7 | நதி-7 | நவம்பர் 2024 | திங்களிதழ்
ISSN: 2582-4015


# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்
www.padaippu.com



‘சிறுவயதிலிருந்து நிழல் போல என்னைத் தொடர்ந்துவரும் தனிமைதான் நான் எழுதுவதற்குக் காரணம்..’

## கவிஞர் மனுஷியுடனான நேர்காணல்




தடதடக்கும் திரைக்கதை

– கவிஜி



வெற்றியின் பரிமாணமும் பரிநாமமும்

– ஆதிரன்



தமிழ் நிலத்து வீர மங்கையர்கள்

– தி. கலையரசி

படைப்பு தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-7 | நதி-7 | நவம்பர் 2024

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர்:
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர்:
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு:
**சகா (சலீம் கான்)**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நிருபர்:
**க.சோ.திருமாவளவன்**

நிருபர்கள் குழு:
**முனைவர் கோ.நித்தியா**
**தீபிகா நடராஜன்**

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு:
**ஆர்.பிரகாஷ்**

ஓவியக் கலைஞர்கள்:
**திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்**
**அழ.ரஜினிகாந்தன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி:
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர், கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு - 607002.
**admin@padaippu.com**
***73388 97788 / 73388 47788***



நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.


## உள்ளே...


- **தலையங்கம்** - ப. 04
- **'சிறுவயதிலிருந்து நிழல் போல என்னைத் தொடர்ந்துவரும் தனிமைதான் நான் எழுதுவதற்குக் காரணம்..'** – கவிஞர் மனுஷியுடனான நேர்காணல் - ப. 05
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை** – மு.முருகேஷ் - ப. 15
- **தடதடக்கும் திரைக்கதை** – கவிஜி - ப. 22
- **வெற்றியின் பரிமாணமும் பரிநாமமும்** – ஆதிரன் - ப. 33
- **நுட்பமான பெண்ணிய வலிகளை நிலவெனச் சுமந்திருக்கும் கூடை** – ஹரிணி - ப. 38
- **தமிழ் நிலத்து வீர மங்கையர்கள்** – தி.கலையரசி - ப. 42
- **வாழ்வியல் தடங்களான கதைகள்** – விஜயராணி மீனாட்சி - ப. 47
- **மழைக்கஞ்சி** – பெ. ரவீந்திரன் - ப. 53
- **அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..** – கடிதங்கள் - ப. 57

## சிறுகதைகள்


- கண் பேசும் வார்த்தை
  - குடந்தை அனிதா - ப. 26
- பற்றுக்கோடு
  - கனகா பாலன் - ப. 49


## கவிதைகள்


- பிரபுசங்கர் க - ப. 31
- மா.காளிதாஸ் - ப. 32
- மணி அமரன் - ப. 45
- கிறிஸ்டினா அருள்மொழி - ப. 46
- ரகுநாத் வ - ப. 62
- ஜெ.பிரான்சிஸ் கிருபா - ப. 63





**Facilities**

- *Capacity 90 - 100 (Persons)*
- *AC Hall with Audio system*
- *POP with Profile lights*
- *Tea / Coffee snacks place*
- *Projector*

படைப்பு அரங்கம்
# 3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,
கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024

+91 73388 97788, 73388 47788

# தலையங்கம்

வணக்கம். படைப்பு 'தகவு' எழுபத்தொன்பதாவது இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

யுவபுரஸ்கார் விருது பெற்றிருக்கும் கவிஞர் மனுஷியுடனான நேர்காணல் இவ்இதழில் இடம்பெற்றுள்ளது. கவியுலக நுழைவு, நாடக அனுபவங்கள், வாசிப்புகள், எழுதும் அனுபவங்கள், எழுத்தாளர் பிரபஞ்சன் மீதான அன்பு, பெற்ற பாராட்டுகள், விமர்சனங்கள் எனப் பலவிதமான பகிர்வுகளாக நேர்காணல் அமைந்துள்ளது.

வானவில் வண்ண மின்னல் இரண்டாம் பகுதி தொடங்கியிருக்கிறது. வெற்றி என்னும் கருத்தாக்கம் ஆழமாக ஆய்வு செய்யப்படுகிறது. வெற்றி குறித்த தத்துவக் கருத்துக்களை இவ்இதழ்ப் பகுதி அலசிக் கூறியுள்ளது. உலக சினிமா பகுதியில் 'தி குட் தி பேட் அண்ட் தி அக்லி' திரைப்படம் அலசப்பட்டுள்ளது. புதையல் தேடியதான ஒரு பயணக் கதையில் திரைக்கதையின் ஜாலம் எப்படி வென்றிருக்கிறது எனக் கட்டுரை சொல்கிறது.

கவிதைக்குள் கலந்திருக்கும் கதை பகுதியில் கவிஞர் வெண்ணிலா குறித்துப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சிற்றிதழின் இணையாசிரியராக அறிமுகமானதில் இருந்து பல்வேறு வகைமைகளில் படைப்புகளை வெளியிடும் எழுத்தாளராக விருதுகள் பல பெற்று உயர்ந்திருக்கும் நிலையைக் கட்டுரையாளர் சுட்டுகிறார். பெண்களின் வலியைப் பேசும் அவரது கவிதைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

'கண் பேசும் வார்த்தை' சிறுகதை மனிதர்களின் பார்வைக் கோணங்களில் தென்படும் மாற்றங்களைப் பதிவு செய்துள்ளது. இந்த உலகம் ஒவ்வொரு மனிதரின் பார்வைக்கேற்ப அவ்விதமே பிரதிபலிக்கும். அது புரியாமல் தன் பார்வையின்படி பிறரை விமர்சிக்கும் மனிதர்களே அதிகம். அப்படி ஒரு மனநிலை இக்கதையில் சித்திரிக்கப்பட்டுள்ளது. 'பற்றுக்கோடு' சிறுகதை ஒரு பெண்ணின் வாழ்க்கைப் பயணத்தின் போக்கைக் கூறுகிறது. வாழ்வு அவளைத் தொடர்ச்சியாகத் துண்டாடிக்கொண்டிருக்க, தன்னைப் பற்றிப் பகிர்ந்துகொள்கிற விதமாய்க் கதை அமைந்திருக்கிறது.

மழைக்கஞ்சி கட்டுரை தமிழர்களின் பண்பாட்டுக் கூறினை விளக்கி எழுதப்பட்டுள்ளது. வறட்சிக் காலத்தில் மக்கள் நிகழ்த்திய ஒரு சடங்கு குறித்த பதிவாக அமைந்துள்ளது. நிலாக்கூடை என்னும் கவிதை நூலுக்கான விமர்சனம் இடம்பெற்றுள்ளது. வாழ்வின் தருணங்கள் கவிதைகளாக்கப்பட்டிருக்கும் நூலில் பெரும்பான்மையும் பெண்ணியப் பதிவுகள் இடம்பெற்றிருக்கும் நிலை கூறப்பட்டிருக்கின்றது.

கவிஞர் விக்ரமாதித்யனுக்கு எழுபதுகளிலும் எண்பதுகளிலும் கவிஞர் மீரா எழுதியுள்ள கடிதங்கள் இதழில் இடம்பெற்றுள்ளது.

கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் என நிறைந்திருக்கும் இந்த மாதத் தகவின் அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

– ஆசிரியர்.

வீரசோழன்
க.சோ.திருமாவளவன்



‘சிறுவயதிலிருந்து நிழல் போல என்னைத் தொடர்ந்துவரும் தனிமைதான் நான் எழுதுவதற்குக் காரணம்..’

# கவிஞர் மனுஷியுடனான நேர்காணல்

நவீன இலக்கிய உலகில் பெண்களுக்கான கனவுகள், உணர்வுகள், அவர்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகள் எனப் பெண்ணுலகத்தைத் தனது கவிதைகள் வாயிலாகப் பிரதிபலித்துவரும் யுவபுரஸ்கார் விருதாளர் கவிஞர் மனுஷி அவர்களுடனான நேர்காணல்...

**நீங்கள் படைப்புலகத்திற்குள் எப்படி வந்தீர்கள்? அதற்கான திறப்பு எப்படி நிகழ்ந்தது?**

அது ஒரு தற்செயல் நிகழ்வுதான். என்னுடைய குடும்பத்தில் யாருக்கும் இலக்கிய வாசிப்பு கிடையாது. விவசாயப் பின்புலம் கொண்ட ஒரு குடும்பப் பின்னணியில், கிராமத்துச் சூழலில் பிறந்து பள்ளிப் படிப்பை முடித்து, கல்லூரி சேர வேண்டும் எனும்போது விருப்பப்பட்டுத் தமிழ் இலக்கியத்தை முதன்மைப் பாடமாகத் தேர்வு செய்தேன். சிறு வயது முதலே கதைகள் கேட்பதிலும், கதைகள் வாசிப்பதிலும் கொஞ்சம் ஆர்வம் இருந்தது. தமிழ் இலக்கிய மாணவியாகக் கல்லூரிக்குள் நுழைந்தபோது சிறுவர் கதைகள் தாண்டி வாசிக்கப் பெரிய உலகமே இருப்பதை நூலகத்தில் பார்த்தேன். வாசிப்பதைத் தாண்டி அப்போது எனக்குப் பெரிய பொழுதுபோக்கு கிடையாது. நிறைய வாசித்தேன். அதுபோக, யாரிடமாவது மனம் விட்டுப் பேச வேண்டும் எனும்போது என்னுடைய தோழிக்குக் கடிதம் எழுதுவேன். என் அம்மாவுக்கும் கடிதங்கள் எழுதுவேன். எனது மனவோட்டங்களையும், சொல்ல முடியாத துயரங்களையும் டைரியில் எழுதிவைப்பேன். அப்படி எழுதும்போது எனக்குள் இருக்கும் துயரம் பாதியாகக்

குறைவதை உணர்ந்திருக்கிறேன். பின்னாளில் அதுதான் கவிதை உலகத்திற்குள் என்னை அழைத்து வந்திருக்கிறது என நினைக்கிறேன்.

**பாரதி, தாகூரை ஒப்பிட்டு முனைவர் பட்டத்திற்காக நீங்கள் மேற்கொண்ட ஆய்வு எந்த நிலையில் உள்ளது? இப்படியான தலைப்பைத் தேர்வு செய்ததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா?**

முனைவர் பட்ட ஆய்வுக்காக முதலில் நான் தேர்வு செய்தது தொன்மவியல் பார்வையில் நவீன இலக்கியங்களை அணுகுவது குறித்துத்தான். குறிப்பிட்ட சில தொன்மக் கதாபாத்திரங்கள், தொன்மக் கதைகள் நவீன இலக்கியங்களில் ஏன் மறுபடைப்பாக்கம் ஆகின்றன என்பது என் ஆய்வாக இருந்தது. ஒருமுறை, எங்கள் தமிழ்த்துறையில் ஆய்வு மாணவர்கள் அனைவரும் அவரவர்களுடைய ஆய்வுத் தலைப்புகளைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவிப்பு வந்தது. அப்போது அதே தலைப்பில் என்னுடைய சீனியர் அண்ணா ஒருவர் ஆய்வு மேற்கொண்டு முடிக்கும் தருவாயில் இருந்தார். நான் அப்போதுதான் சேர்ந்து சில மாதங்கள் கடந்திருந்தன. ஒரே தலைப்பில் இருவர் ஆய்வு செய்யக்கூடாது எனும் பல்கலைக்கழக விதியின்படி உடனடியாக நான் தலைப்பை மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. அந்தச் சமயத்தில் என்னுடைய நெறியாளருடன் கலந்து பேசினேன். இலங்கை விமர்சகர் க.கைலாசபதி அவர்கள் இருமகாகவிகள் என்ற தலைப்பில் பாரதியாரையும் தாகூரையும் ஒப்பிட்டுப் புத்தகம் எழுதியிருக்கிறார். அது மட்டுமில்லாமல் தொ.மு.சி. ரகுநாதன் அவர்கள் கங்கையும் காவிரியும் என்னும் தலைப்பில் இருவரையும் ஒப்பீடு செய்திருக்கிறார். அந்த இரண்டு புத்தகங்களும் தாகூர் பாரதி என்ற இரண்டு மகாகவிகளின் வாழ்க்கை ஒப்பீடுகளாக இருந்தன. தாகூரும் பாரதியும் சமகாலக் கவிஞர்கள் என்பதால், வெறும் ஒப்பீடாக இல்லாமல், தாக்கக் கோட்பாடு அடிப்படையில் ஆய்வைச் செய்யலாம் என முடிவு செய்தேன்.

**உங்களுக்கு நாடகத்தில் நடிக்கும் வாய்ப்பு எப்படி கிடைத்தது? நீங்கள் நடித்ததில் உங்களுக்குப் பிடித்த கதாபாத்திரம் எது? நீங்கள் நடித்த நாடகத்தில் உங்களுக்குப் பெரிதும் வரவேற்பு கிடைத்த நாடகம் எது?**

புதுவைப் பல்கலைக்கழகத்தில் முதுகலை மாணவியாகச் சேர்ந்தபோது அந்த வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இங்கே ஒரு முறை இருக்கிறது. ஒவ்வொரு செமஸ்டரிலும் சாஃப்ட்கோர் என்று ஒரு பாடம் இருக்கும். அதாவது நாம் எந்தத் துறையில் சேர்ந்தாலும் ஒவ்வொரு செமஸ்டருக்கும் ஒரேயொரு பாடத்தை வேறொரு துறையில் எடுத்துப் படிக்க வேண்டும். பொதுவாக, தமிழ்த்துறை மாணவர்கள் நாடகத்துறையில் ஏதாவது ஒரு பாடத்தைத் தேர்வு செய்வார்கள். ஆங்கிலத் துறையிலோ, இந்தி, பிரெஞ்சு, சமஸ்கிருதம் போன்ற துறைகளிலோ பாடங்கள் பெரும்பாலும் ஆங்கிலத்தில் இருக்கும் அல்லது இந்தியில் இருக்கும். இரண்டுமே தகராறு என்பதாலும், நாடகத்துறை கொஞ்சம் தமிழ் இலக்கியத்தோடு தொடர்புடையது என்பதாலும் நாடகத்துறையைத்தான் நாடுவார்கள்.

அப்படித்தான் நாடகத்துறையில் எனக்கு அறிமுகம் கிடைத்தது. அதற்கு முன்பு எனக்குத் தெரிந்ததெல்லாம் கிராமத்தில் திருவிழா சமயத்தில் பார்த்த தெருக்கூத்துகள் மட்டும்தான். நாடகத்துறைக்கு வந்தபிறகு தெருக்கூத்து என்பதே ஒரு பாடமாக இருப்பது தெரிந்தது. நடிப்புக் கலை, நாடக இயக்கம், இசை, அரங்க வடிவமைப்பு, நாடகத்திற்கான ஒப்பனை எனப் பல விடயங்களை அங்கே தெரிந்துகொண்டேன். நாடகத்துறை மாணவர்களுக்குத் தேர்வு என்பதே நாடகத்தை இயக்குவது, நடிப்பது சார்ந்ததாக இருக்கும். அப்போது நாடகத்துறையில் மாணவிகள் குறைவு. ஒரே ஒரு அக்காதான். மற்ற எல்லாரும் ஆண்கள். ஆண்களின் ராஜ்ஜியமாக நாடகத்துறை இருந்தது. அதனால் சாஃப்ட்கோர் படிக்க வரும் பிற துறை மாணவிகளை நடிக்கப் பயன்படுத்திக்கொள்வார்கள். அப்படித்



தமிழ்த்துறையிலிருந்த எனக்கு நடிக்க வாய்ப்பு கிடைத்தது.

மேடைப் பேச்சு எனக்குப் பள்ளிப் பருவத்திலிருந்தே பழக்கமான ஒன்று. மாவட்ட அளவில் முதல் பரிசெல்லாம் வாங்கியிருக்கிறேன். ஆனால் மேடையில் நடிக்க வேண்டும் எனும்போது பயம், கூச்சம் எல்லாம் இருந்தது. முதல் இரண்டு மூன்று நாடகங்களில் வசனங்களை மறந்து சொதப்பியதெல்லாம் உண்டு. போகப் போகக் கொஞ்சம் கற்றுக்கொண்டேன். எம்.ஏ. பயின்ற இரண்டு வருடங்களில் சொல்லிக்கொள்ளும்படியாகச் சில நாடகங்களில் நடித்தேன். பினுக்குமார் என்ற நாடகத்துறையின் சீனியர் அண்ணா ஒருவர் வலி என்ற சிறுகதையை நாடகமாக இயக்கினார். இராமாயணக் கதையின் இறுதிப் பகுதியை மையமாகக் கொண்ட கதை அது. அயோத்தியில் ராமனின் பட்டாபிஷேகம் முடிந்த பிறகு, ஊரில் யாரோ சொன்னதற்காகச் சீதை மீது சந்தேகம் கொண்டு காட்டில் விட்டுவரச் சொல்வதிலிருந்து அந்தக் கதை தொடங்கும். அதில் சீதையாக நடிக்க வேண்டுமென என்னைக் கேட்டார். முதலில் தயங்கிப் பின்னர் என்னால் முடிந்த அளவு செய்கிறேன் என ஒப்புக்கொண்டேன். நிறைய ரிகர்சல். ஆனாலும் உள்ளூர பயமும் பதற்றமும். ஏனென்றால் சுமார் அரை மணி நேர நாடகத்தில் ஒரேயொரு கதாபாத்திரம்தான். அது நான். ஒருவழியாக நடித்து முடித்தேன். நாடகம் முடிந்தபிறகு சில வினாடிகள் அரங்கத்தில் கனத்த மௌனம். பிறகு பெரிய கைத்தட்டல்கள். நாடக ஒளியமைப்பாளர் செ.ரவீந்திரன் சார், குணசேகரன் சார் என நாடகத்துறைப் பேராசிரியர்கள், நாடகத்தைப் பார்த்த பார்வையாளர்கள், அன்றைக்குச் சிறப்பு அழைப்பாளர்களாக வந்திருந்தவர்கள்



அனைவரும் பாராட்டினார்கள். மறக்க முடியாத தருணம் அது. அதன்பிறகு பாண்டிச்சேரியில் யாழ் அரங்கத்தின் மூலமாக இப்போது பல நாடகங்களை நிகழ்த்திக்கொண்டிருக்கும் கோபி அண்ணாவின் இயக்கத்தில் சிகப்புக் கண்ணாடி என்னும் நாடகத்தில் ஒரு கதாபாத்திரத்தில் நடித்தேன். அதன்பிறகு ஏனோ அது எனக்கான பாதை இல்லை என்பதை முடிவு செய்து கவிதையைப் பிடித்துக்கொண்டேன்.

**நீங்கள் எழுதுவதற்கும் உங்கள் எழுத்திற்கும் அடித்தளமாக அமைந்தவை எவை? எப்போதிருந்து உங்கள் எழுத்துப் பயணம் துவங்கியது?**

சிறுவயதிலிருந்து நிழல் போல என்னைத் தொடர்ந்துவரும் தனிமைதான் நான் எழுதுவதற்குக் காரணம். சிறு வயதில் என் அம்மாவின் மரணத்திற்குப் பிறகு அவர் இல்லாத வெற்றிடத்தை நிரப்பிக்கொள்ள கவிதைதான் எனக்கான துணையாக இருந்தது.

பி.ஏ. படிக்கும்போதிருந்தே கவிதை என்று அப்போதிருந்த புரிதலில் எழுதியிருக்கிறேன். கவிதைப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகள் கூட வாங்கியிருக்கிறேன். இப்போது கேட்டால் அதெல்லாம் கவிதை என்று சொல்லவே முடியாது. இங்கே ஒரு பழக்கம் இருக்கிறது, நீட்டி எழுதுவதை மடக்கி மடக்கி எழுதினால் அது கவிதையாகிவிடும் என்று. பிறந்தநாள் வாழ்த்து, திருமண வாழ்த்து என எல்லாத்துக்கும் கவிதையாகத்தான் எழுதுவேன் என்று ஒரு மனநிலை நம் தமிழ்ச் சமூகத்தில் இருக்கிறது. நீங்கள் யாரைச் சந்தித்தாலும் நானும் கூட கவிதை எழுதுவேன், எழுதியிருக்கிறேன் என்ற வார்த்தையை அதிகமாகக் கேட்டிருப்பீர்கள். தமிழ் மொழியின் பெரும் பலம் அதுதான் என நினைக்கிறேன். இரண்டாயிரம் வருடமாகக் கவிதைதானே நம் மொழியின் அடையாளம்.

நான் எம்.ஏ. மாணவியாக இருந்தபோது கவிதை குறித்த ஒரு திறப்பு ஏற்பட்டது. நான் நவீனக் கவிதைகளை வாசிக்கத் தொடங்கிய காலம் அது. நவீன இலக்கியம் எனக்கு அறிமுகமாகியிருந்த தருணம் கூட. வார்த்தைகளை மடக்கி எழுதுவது கவிதை அல்ல என்பது புரியத் தொடங்கியது. அதன்பிறகு என் மனதின் குரலாகக் கவிதையை எழுதத் தொடங்கினேன்.

**உங்களுக்குச் சமூகம் சார்ந்து சொல்வதற்கும் எழுதுவதற்கும் கவிதை, சிறுகதை இரண்டில் எது இலகுவானதாக இருப்பதாக உணர்கிறீர்கள்?**

சிறுகதையைப் பொறுத்தவரை இன்னும் தீவிரமாகப் பயணிக்கவில்லை என நினைக்கிறேன். இப்போதைக்குக் கவிதை எனக்குப் பக்கபலமாக இருக்கிறது. இதுவரை எழுதிய அனுபவத்தில் இருந்து சொல்ல வேண்டுமெனில் எந்த இலக்கிய வடிவத்தைத் தேர்ந்தெடுப்பது என்பது எழுதுபவரின் கைகளில் இல்லை என்றுதான் நினைக்கிறேன். கவிதையாக எழுத முயன்று, அதில் ஏதோ ஒரு போதாமை இருப்பதாக உணர்ந்து, சில மாதங்களுக்குப் பிறகு அதைச் சிறுகதையாக எழுதினேன். வடிவத்தைத் தீர்மானிப்பது அந்தக் கருதான்.

**உங்கள் கவிதைத் தொகுப்பிற்குக் கிடைத்த மறக்க முடியாத பாராட்டு எது? எதனால் அந்தப் பாராட்டு எல்லாவற்றையும் விட உங்களுக்குத் தனித்துவமாகத் தெரிகிறது?**

எழுத்தாளர் பிரபஞ்சன் அவர்கள், அவரது முகநூல் பக்கத்தில் என் கவிதைகள் குறித்துப் பாராட்டி எழுதியிருந்தது மறக்க முடியாத பெருமைக்குரிய அங்கீகாரம். அவரது கதைகளின் தீவிர வாசகி நான். ஆனால் அதுவரை அவரிடம் பேசியதில்லை. எப்போதுமே எழுத்தாளர்களைத் தூரத்திலிருந்து பார்த்துவிட்டுக் கடந்து சென்றுவிடுவேன். நானாகப் போய் அறிமுகப்படுத்திக்கொண்டு பேசுவதற்குத் தயக்கம். இந்த நிலையில் சாரிடமிருந்து வந்த பாராட்டு அவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது. அவரிடம் அழகான நட்பு அந்தக் கணத்திலிருந்து உருவானது. அதேபோல வெங்கட் சாமிநாதன் சார் கணையாழியில் என் கவிதைகள் குறித்து எழுதியிருந்த அறிமுகமும் எனக்கு மறக்க முடியாத அங்கீகாரம். எழுத்தின் வழியாக நான் வியந்து பார்த்த ஆளுமைகள் என் கவிதைகள் குறித்துப் பாராட்டி எழுதியதைப் படித்தபோது அவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது.

**உங்களைப் புதுப்பித்துக்கொள்ள உதவும் வாசிப்புகள், பிடித்த நூல்கள் என்று எவற்றைக் கூறுவீர்கள்?**

என்னைப் புதுப்பித்துக்கொள்ள விரும்பினால் பயணம் செய்வேன். வாசிப்பு எனக்குப் புதிய புதிய உலகங்களை, வாழ்க்கையை, மனிதர்களை அறிமுகம் செய்வது போலவே பயணங்களும் எனக்கு நிறைய கற்றுத் தருகின்றன.

பிடித்த நூல்கள் என்றால் நிறைய இருக்கின்றன. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமெனில், பிரபஞ்சன் சிறுகதைகள், எஸ்.ரா. கதைகள், செகாவ் கதைகள், வெண்ணிற இரவுகள் நாவல், குட்டி இளவரசன் நாவல், சித்தார்த்தன் நாவல், ரூமி கவிதைகள் - இப்படி வாசிப்பதுண்டு.

**நவீன இலக்கியத்தைப் பொறுத்தவரை பெண்கள் எழுதுவதற்கான களங்கள் நிறைய இருக்கின்றனவா?**

பெண்கள் எழுதுவதற்கான களங்கள் ஏராளமாக இருக்கின்றன.

அதிலும் குறிப்பாக, வாழ்க்கை குறித்தான மதிப்பீடுகள், உறவுகள், குடும்ப அமைப்புகள், திருமண உறவுகள், பண்பாட்டு மதிப்பீடுகள் எல்லாமே மாறியிருக்கின்றன. ஆனாலும் கூட, காலம் காலமாகப் பெண்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளும் அவர்களுக்கான சிக்கல்களும், பெண்களின் கனவுகளும் இன்னும் அதிகமாகவே இருக்கின்றன. ஒவ்வொருவருக்கும் இந்த வாழ்க்கை தரும் அனுபவங்கள் எல்லாம் கதைகளாக, கவிதைகளாக எழுதப்படுவதற்கான விதை. என் வாழ்க்கை அனுபவம், சமூகத்தை நான் பார்க்கின்ற பார்வை இன்னொருவருடைய வாழ்க்கை அனுபவம் மற்றும் பார்வையிலிருந்து வித்தியாசமானது. அதனால் படைப்புக்கான களங்கள் பரந்து விரிந்திருக்கின்றன.

சமூக வலைதளங்கள் எழுதுவதற்கான வெளியை விரிவுபடுத்தியிருப்பதால் நிறைய பெண்கள் எழுத வந்திருக்கிறார்கள். அதைப்

பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறது. எழுதித் தீராதவை இவ்வாழ்வின் அனுபவங்கள்.

**நவீன இலக்கிய உலகில் பெண்களுக்கான கனவுகள், அவர்களின் உணர்வுகள், அவர்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளைக் கவிதைகள் வாயிலாகத் தொடர்ந்து பிரதிபலித்துவருகிறீர்கள்..**

என் கனவுகளால் நான் வழிநடத்தப் படுகிறேன். அதுவே என் கவிதைகளில் வெளிப்படுகிறது என நினைக்கிறேன்.

**பல இடங்களில் பிரபஞ்சன் குறித்து உரையாடுகிறீர்கள். பிரபஞ்சனுக்கும் உங்களுக்கும் இடையேயான படைப்புப் பகிர்தல் எப்படியாக இருந்தது?**

இந்தப் பிரபஞ்சம் எனக்கு வரமாய்த் தந்த பரிசு என்றுதான் சொல்ல வேண்டும். மனிதர்கள் மீதான அவநம்பிக்கையும், வாழ்க்கை மீதான எதிர்மறை எண்ணங்களும் நிறைந்திருந்த எனக்கு, வாழ்க்கை அத்தனை மோசமானது இல்லை, அது குழந்தையின் ஸ்பரிசத்தைப் போல அழகானதும்தான் என்பதைச் சொல்லித் தருவதற்காகவே அவரது நட்பு எனக்குக் கிடைத்தது என்று நினைக்கிறேன். ஒரு தந்தையைப் போலப் பாசம் காட்டவும், ஒரு குருவைப் போல வழிநடத்தவும் செய்தார். எப்போது சந்தித்தாலும் புதுசா என்ன புத்தகம் படிச்சிங்க.. என்ன எழுதினிங்க என்று கேட்பார். அவரிடம் சொல்வதற்காகவே நிறைய வாசித்தேன். அவர் வாசித்த புத்தகங்கள் குறித்து நிறைய பேசுவார். புத்தகங்களைக் கொடுத்து வாசிக்கச் சொல்வார். அந்தச் சமயத்தில் எல்லாம் எனது ஆசிரியர் அவர் என்று தோன்றும். நான் வருகிறேன் என்று சொன்னால் எனக்காக இனிப்புகளும் பிஸ்கட்டுகளும் வாங்கி வைத்துக் காத்திருப்பார். விடுதியில் இருந்து வீடு திரும்பும் மகளுக்காகக் காத்திருக்கும் அப்பாவை நினைவுபடுத்துவார். ஐந்து வருட நட்புதான் என்றாலும் கூட என் வாழ்வின் பொக்கிஷம் அவரது நினைவுகள்.

**உங்கள் கவிதைகள் வாயிலாக வாசகனுக்கு எதைக் கடத்த வேண்டுமென்று நினைக்கிறீர்கள்?**

எதிர்மறை எண்ணங்களிலிருந்து விலகி, வாழ்க்கையின் அழகைப் பார்க்கின்ற பக்குவத்தைக் கடத்தினால் அதுவே போதும்.

**கவிதைகள் உள்ளிட்ட படைப்புகள் ஓர் அரசியல் செயல்பாடு என்ற வாதம் நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டுவருகிறது. படைப்பு என்பது நேர்த்திக்காக மட்டுமே என்ற வாதமும் சமீபத்தில் கூடுதலாக முன்வைக்கப்படுகிறது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

படைப்பு என்பது வெறும் நேர்த்திக்காக மட்டுமே என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதேசமயம், பிரச்சாரமாக இருப்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது. கலைத்தன்மையோடு அரசியல் செயல்பாடுதான் படைப்பு என நினைக்கிறேன். அதிலும் குறிப்பாக, பெண்கள் எழுத வருவது முக்கியமான அரசியல் செயல்பாடு.

**நீங்கள் அறியாத நேரம் பார்த்து யாரென்று அறியாத நபர் உங்கள் படைப்பை எங்காவது சிலாகித்துப் பேசியதைப் பார்த்த அனுபவம் உண்டா?**

நிறைய இருக்கிறது. கவிதைகளை வாசித்து, ரசித்து, எப்போதாவது தற்செயலாய்ச் சந்திக்கும்போது அவர்கள் பகிரும் சொற்கள் பெரும் உற்சாகத்தை, மன நிறைவைத் தரும். இப்படி நிறைய தோழிகளை, தங்கைகளை, தம்பிகளை, நண்பர்களை என் கவிதை எனக்குக் கொடுத்திருக்கிறது.

சமீபமாக ஒரு விடயத்தைக் கவனிக்கிறேன். இன்ஸ்டாகிராமில் சில ஐடிகளில் கவிதைகளைப் பகிர்ந்து, ஐடியைப் பின்தொடர்பவர்களுக்கு அறிமுகம் செய்கிறார்கள். அந்தக் கவிதைகள் அதிக அளவிலும் சென்று சேர்கின்றன. அந்த இன்ஸ்டாகிராம் நண்பர்களுக்கு எந்த இலக்கியக் குழு அரசியலும் இல்லை. அவர்கள் தங்களுக்குப் பிடித்த கவிஞர்களின் கவிதைகள், எழுத்தாளர்களின் வரிகள் இவற்றைப் பகிர்கிறார்கள். இதை ஒரு ஆரோக்கியமான முன்னெடுப்பாகப் பார்க்கிறேன்.



**கவிதைகள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற சட்டகம் உள்ளதா? கவிதைக்கு என்று தனித்த மொழிநடை உள்ளதா?**

அப்படி எந்தச் சட்டமும், சட்டகமும் இருக்க முடியாது. இருக்கத் தேவையில்லை. என்னளவில் கவிதை என்பது ஆன்மாவின் குரலாக வெளிவர வேண்டும். மனதின் மொழியாக இருக்க வேண்டும். அவ்வளவுதான்.

**நீங்கள் யுவபுரஸ்கார் விருது பெற்றபோது சிலர் கடுமையாக விமர்சனம் வைத்தார்கள். அதனை எப்படி எதிர்கொண்டீர்கள்? ஒவ்வொரு முறையும் இப்படியான விருது அறிவிக்கும்போதும் விமர்சனங்கள் எழுப்பப்படுகின்றனவே.. அதற்குப்பின் அரசியல் ஏதாவது உண்டா?**

விமர்சனம் செய்த அந்தச் ‘சிலரின்’ வார்த்தைகளை விடவும், என்னைக் கொண்டாடிப் பாராட்டிய பலரது வார்த்தைகளும் வாழ்த்துக்களும் எனக்கு முக்கியமாகப் பட்டன. நெகட்டிவ் விமர்சனங்களுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருப்பது தேவையற்ற வேலை என்பது என் நிலைப்பாடு. படைப்பு சார்ந்து முன்வைக்கப்படும் விமர்சனம் என்றால் அதை எடுத்துக்கொள்ளலாம். தனிப்பட்ட வன்மத்தை வெளிப்படுத்தும் விமர்சனம் என்றால் வீட்டுக்கு வெளியில் செருப்பைக் கழற்றி விடுவது போல விட்டுவிட வேண்டும். தலையில் கிரீடம் போல் வைத்துக்கொள்ளக் கூடாது.



எந்த எழுத்தாளருக்கு விருது அறிவிக்கப் பட்டாலும் சமூக வலைதளத்தில் விமர்சனங்கள் எழுவது வருத்தமளிக்கிறது. தன்னைப் போல் ஒரு சக எழுத்தாளரின் எழுத்து அங்கீகரிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள மனமில்லையா எனத் தெரியவில்லை. விருது அறிவிக்கப்படுவதற்கு முன்பு வரை அதைப் பற்றிப் பேசாமல், கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டு, விருது அறிவிக்கப்பட்டவுடன் அந்தப் படைப்பையும் எழுத்தாளரையும் எதிர்மறையாக விமர்சிப்பது இப்போதெல்லாம் ஒரு ட்ரெண்ட் ஆகிவிட்டது. என்னளவில் ஒரு படைப்புக்குக் கிடைக்கும் விருது, அங்கீகாரம் (அது சிறியதோ, பெரியதோ) போன்றவற்றை இரண்டாயிரம் ஆண்டுகாலமாக இலக்கிய அடையாளத்தோடும் விழுமியத்தோடும் செம்மாந்து நிற்கும் தமிழ் மொழிக்குக் கிடைக்கும் அங்கீகாரமாகத்தான் பார்க்கிறேன்.

**தொடர்ந்து நீங்கள் வாசித்துக்கொண்டிருக்கும் எழுத்தாளர்கள் யார்? தனித்த காரணங்கள் ஏதாவது இருந்தால் சொல்லலாம்.**

தொடர்ச்சியாக வாசித்துக்கொண்டே இருக்கிறேன். சொல்லப்போனால் அது என் வாழ்க்கையின் அன்றாடச் செயல்பாடுகளில் ஒன்று. சமீபத்தில் மீபா.சம்பத் எழுதிய விபினந்த சக்கரம் என்ற நாவல் வாசித்தேன். ஹெர்மன் ஹெஸ்ஸேவின் சித்தார்த்தா நாவலின் சாயலொத்த ஒரு நல்ல வாசிப்பனுபவம் கொண்ட நாவல் அது. இன்னும் வாசிக்க நிறைய நாவல்களும் கதைகளும் கவிதைகளும் இருக்கின்றன. இந்த எழுத்தாளரைத்தான் தொடர்ந்து வாசிக்க வேண்டும் என்றெல்லாம் எந்த வரையறையும் இல்லை.

**எளிய சொற்களுக்குள் பெருந்துயர் ஒளித்துக் கவிதை ரகசியங்களை மொழியாக்குவதில் உங்கள் எழுத்து தீவிரமாக இயங்குவதைப் பற்றிக் கூறுங்கள்.**

சொற்களை இறுக்கமாகக் கையாள்வதில் எனக்கு உடன்பாடில்லை. எளிய சொற்கள் என்று எதை நாம் சொல்கிறோம்.. எல்லோருக்கும் புரிகிற

வகையில் எழுதப்படுவதை நாம் அப்படிச் சொல்கிறோமா? அப்படியென்றால் நான் எழுதுவது வாசிப்பவர்களுக்குப் புரிய வேண்டும்தானே... எளிய சொற்களின் வழியாக நான் சொல்ல விரும்பும் அனுபவத்தை, உணர்வைச் சொல்லிவிட முடியும் எனில் நான் அதைத்தான் கவிதையாக்குகிறேன். படிமம், குறியீடு, இருண்மை.. இப்படி வார்த்தை ஜாலங்களின் மேல் எனக்கு நம்பிக்கை இல்லை. இந்தப் படிப்பினை எனக்குப் பாரதியாரிடம் இருந்துதான் வந்தது. பாரதியாரின் கவிதைக் கோட்பாடு எல்லோருக்கும் புரிகிற மொழியில் எழுத வேண்டும். அதை நான் செய்ய முயற்சித்துக்கொண்டே இருக்கிறேன்.

**பொதுவாக, உங்கள் கவிதை அநீதியிழைக்கப்பட்ட பெண்கள் பற்றியும் சமகாலப் பெண்வெளியை அகழ்ந்தும் படைப்பாகிவிடுகிறது. அப்படிப் படைப்பாக்குவதில் சிரமம் உள்ளதா?**

சிரமம் என்று எதுவுமில்லை. ஆனால், என்னைச் சுற்றி நடக்கிற எல்லாவற்றையும் என்னால் கவிதையாக்கிவிட முடியுமா என்றால் அப்படியில்லை. ஒரு செய்தியைப் படித்துவிட்டு, அதற்காகக் கவிதை எழுதிவிட வேண்டும் என்று ஒருபோதும் நான் நினைத்ததில்லை. அதேபோல எல்லாவற்றையும் கவிதையாக ஆக்கிவிட வேண்டும் என்ற எண்ணத்தோடும் இந்தச் சமூகத்தைப் பார்க்கவில்லை. என்னுள் ஆழமாகத் தாக்கத்தை உண்டாக்கி, மனதிலிருந்து அந்தக் கவிதைக்கான வரிகள் வந்து நிற்கும்போது அதை எழுதுகிறேன்.

**வீட்டில் வளர்க்கப்படும் செல்லப்பிராணிகள் மீது அளப்பரிய அன்பு வைத்திருக்கிறீர்கள். அதற்குத் தனிப்பட்ட காரணம் ஏதாவது உள்ளதா?**

பிற உயிர்களை நேசிப்பதற்குத் தனிப்பட்ட காரணம் ஏதாவது இருக்க வேண்டுமா என்ன? ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான வாழ்க்கை முறை இருக்கும். குழந்தைகளை நேசிப்பதைப் போலத்தான் என் வீட்டில் உள்ள நாய், பூனைகளை





நான் நேசிக்கிறேன். மனிதர்கள் காட்டும் அன்பை விடவும் தூய்மையான அன்பைச் செல்லப்பிராணிகள் எனக்குத் தருகிறார்கள். என் குடும்பம் என்றால் இவர்கள்தான். நான் தனிமையை உணராமல் ஒரு பறவை போல் மகிழ்ச்சியாகச் சிறகடித்துப் பறந்து செல்வதற்கான எனர்ஜியை என் வீட்டுச் செல்லங்கள்தான் எனக்குத் தருகிறார்கள். என் வீட்டில் என்னோடு வாழும் இவர்கள் மட்டுமல்ல. எந்த ஊருக்குப் போனாலும் பேருந்துக்காகக் காத்திருக்கும்போது, நடந்து செல்லும்போது, தேநீர்க் கடை அல்லது உணவகத்தின் வாசலில் என்னைத் தேடி வந்து முகர்ந்து பார்த்து, என் ஸ்பரிசத்தைப் பெற்றுக்கொண்டு அவர்களின் அன்பை வாலாட்டியோ, காலுரசியோ அவர்கள் வெளிப்படுத்திக்கொண்டே இருக்கிறார்கள். அந்த அன்பு ஒரு தனி சுகம்.

நான் பயணங்கள் செல்லும்போது வீடு திரும்புவதற்கான காரணம் ஏதாவது இருக்கும் என்றால் எனக்காக இவர்கள் காத்திருப்பார்கள் என்ற எண்ணம் மட்டும். நான் வசிக்கும் இடத்தை ஒரு வீடாக உணரச் செய்வதும் இவர்கள்தான். ஒருவேளை நான் என் நாய்க்குட்டிகளோடும் பூனைக்குட்டிகளோடும் பூச்செடிகளோடும் இல்லாமல் தனி மனுசியாய் வாழ நேர்ந்தால் வீடு என்பதைத் துறந்து ஒரு தேசாந்திரி போல் பயணிப்பேன். நான் வீடு திரும்புவதற்கான காரணம் இவர்களின் காத்திருப்பும் அன்புமே. ■

தொடர் - 39

மு.முருகேஷ்



# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

'என்றென்றும் நான் சிற்றிதழ்களின் காதலன்' என்று சொல்வது வெறும் வார்த்தைகளல்ல.. என் மனதிலிருந்து எழும் சத்தியமான உண்மையது. எவ்விதப் பின்புலமும் இல்லாத எளிய குடும்பத்தில் பிறந்தவன் நான். சிறுவயதிலிருந்தே புத்தகங்கள் வாசிப்பதில் ஆர்வம்கொண்ட எனக்குள், எழுத வேண்டுமென்கிற எண்ணமும் எழுந்தது.

எண்பதுகளில் வணிக இதழ்களில் எழுதுவது என்பதெல்லாம் மிகப் பெரிய விஷயமாக இருந்தது. இன்னும் சொல்ல வேண்டுமானால் அந்த இதழ்களுக்குப் படைப்புகளை அனுப்புவது எப்படி என்றுகூடத் தெரிந்திராத காலமது.

எங்கள் பகுதியிலிருந்து வெளிவந்த, நான் பிறந்த மாவட்டத்திலிருந்து வெளியான சிற்றிதழ்களில்தான் முதன்முதலாக நான் எழுதத் தொடங்கினேன். பார்வை, அமைதி, தாழம்பூ ஆகிய இதழ்களே என் எழுத்துக்களை முதன்முதலாகப் பிரசுரித்த இதழ்கள்.

எழுதத் தொடங்கிய சில ஆண்டுகளிலேயே நானும் சில நண்பர்களும் சேர்ந்து 'விடியல்' எனும் இதழினைத் தொடங்கினோம். புதுக்கோட்டை மாவட்டத்திற்குள்ளேயே அறிமுகமான என்னை, தமிழக அளவில் அறிமுகம் செய்தது 'விடியல்' இதழே. அந்த இதழின் வழியாகவே தமிழகம் முழுவதுமிருந்தும் வெளியான பல சிற்றிதழ்கள் என் வாசலுக்கு வரவாகின.

துளி (சேலம்), தாராமதி (கோவை), சுந்தர சுகன் (தஞ்சை), வாரமுரசு (சிவகாசி), கவிதை உறவு (சென்னை), காகிதம் (கடலூர்), வெண்ணிலா (மதுரை), முத்து சிப்பி (திருச்சி),

பொய்யா விளக்கு (திண்டுக்கல்), கேப்பியார் (களியக்காவிளை) என ஒவ்வொரு மாதமும் முப்பதுக்கும் மேற்பட்ட சிற்றிதழ்களாவது என் பார்வைக்கு வரும். அனைத்து இதழ்களையும் படிப்பேன். நேரமொதுக்கி விமர்சனக் கடிதமும் எழுதுவேன். என் படைப்புகளையும் தவறாமல் அனுப்பிவைப்பேன். மாத ஊதியம் கிடைத்ததும் முறை வைத்து வரிசையாக இதழ்களுக்கு எனது சந்தாவையும் அனுப்பிவைப்பேன்.

என் படைப்புகள் வராத சிற்றிதழ்களே இல்லை என்று சொல்லலாம். எந்தச் சிற்றிதழின் முகவரி கிடைத்தாலும், உடனே ஒரு அஞ்சலட்டை எழுதி, அந்த இதழுடன் நட்பு கொண்டுவிடுவேன். அப்படியாகத்தான், வந்தவாசியிலிருந்து கையெழுத்திலேயே நகலச்சு இதழாக வந்த 'பூங்குயில்' இதழுக்கும் ஒரு கடிதமெழுதினேன். அதன் ஆசிரியர், கவிஞர் டி.எல்.சிவகுமார் பதில் மடலிட்டார். அடுத்த ஓரிரு வாரத்தில் 'பூங்குயில்' இதழையும் அனுப்பிவைத்தார். நானும் என் கவிதைகளைப் 'பூங்குயிலுக்கு' அனுப்பினேன்.

என் எழுத்துப் பயணத்தில் மட்டுமல்ல; என் வாழ்க்கைப் பயணத்திலும் வந்தவாசி எனும் ஊர் இணைந்திருக்கப்போவதற்கான தொடக்கமது என்பதை அப்போது நானறியேன்.

'பூங்குயில்' இதழின் இணையாசிரியர் அ.வெண்ணிலா என்றிருந்தது. அவரும் இதழில் எழுதுவார். வழக்கமான கவிதைகளைப் போலில்லாமல் வசன வீச்சில் வாஞ்சையாக எழுதும் அ.வெண்ணிலாவின் படைப்புகளை ரசித்துப் படிப்பேன்.

'நதி ஒன்று; கரை இரண்டு' எனும் தொடர் 'பூங்குயில்' இதழில் தொடர்ந்து வெளிவந்தது. டி.எல்.சிவகுமாரும், அ.வெண்ணிலாவும் எழுதும் கவிதைத் தொடரது. நானும் 'தரை தொடாத காற்று' எனும் ஹைக்கூ அந்தாதித் தொடரை 20 இதழ் வரை தொடர்ந்து எழுதினேன். சிவாவின் கவிதைகள் ஊசிப்பட்டாசு போல் தெறிப்பாக இருக்கும். வெண்ணிலாவின் கவிதைகளோ தென்றலெனத் தழுவிச் செல்லும். கீழ்நந்தியம்பாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிவந்த அ.வெண்ணிலா, அவ்வப்போது 'பூங்குயில்' இதழில் மட்டுமே எழுதிவந்தார்.

'பூங்குயில்' இதழின் ஆண்டு விழாக்களில் பங்கேற்க, வந்தவாசிக்குச் செல்வேன். பழைய டைரியொன்றில் எழுதிவைத்திருந்த கவிதைகளை வெண்ணிலா என்னிடம் படிக்கக் கொடுத்தார். ஒரு கவிதை எனக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. அவரின் அனுமதியோடு தீக்கதிர் நாளிதழின் 'வண்ணக்கதிர்' பகுதிக்கு அனுப்பிவைத்தேன். அடுத்த வாரமே அக்கவிதை பிரசுரமானது.

'எட்டாம் வகுப்பு படிக்கையிலேயே
சுமதிக்குக் கல்யாணம் நடந்துடுச்சி.
படித்துக்கொண்டே
கோவிலில் குறி சொன்ன
பச்சையம்மா அக்காவுக்குப்
பத்தாம் வகுப்பிலேயே கல்யாணம்.

இறுதி வகுப்பு முடிந்து
மேல்படிப்புக்குப் போனதே
நாங்க நாலஞ்சி பேர்தான்.

அப்பவே சுமதியோட பையன்
எல்.கே.ஜி.யில் சேர்ந்துட்டான்.

வேலைக்குப் போயும்
இன்னும் ஏன் இப்படியே..
பார்வையிலேயே கழுத்தைத்
துழாவுகிறார்கள் தோழிகள்
எனக்கும் ஆகிப் போகலாம்
இன்னும் சீக்கிரத்தில்.

கணக்குத் தீர்த்துக்
கடந்துபோகும் வாழ்க்கை

அடுத்த சந்திப்பில்
அவரவர் முகங்களை
அவரவர் குழந்தைகளில்
தேடிக் கொண்டிருப்போம்.'

திருமண வாழ்க்கையென்பது ஒரு பெண்ணின் இரண்டாவது



வாழ்க்கையாக மாறிப்போகும் நிலையில், மணமாகிப்போவதன் பிரிவு வலியை, சுயம் தொலைந்துபோகிற அவஸ்தையைப் பிரதிபலிக்கும் அ.வெண்ணிலாவின் இந்தக் கவிதைக்கு ஏராளமான பாராட்டுக்கள் கிடைத்தன. அதற்குப் பிறகு கடந்த கால்நூற்றாண்டுக் காலங்களில் கணையாழி, குமுதம், ஆனந்த விகடன் உள்ளிட்ட இதழ்களில் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவலெனத் தொடர்ந்து எழுதி, இன்றைக்குத் தனக்கென ஒரு வாசகப் பரப்பினை உருவாக்கியுள்ளார் அ.வெண்ணிலா.

ஒன்றுபட்ட வடாற்காடு மாவட்டத்திலுள்ள (தற்போது திருவண்ணாமலை மாவட்டம்) வந்தவாசியை அடுத்த அம்மையப்பட்டு கிராமத்தில் 1971ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10ஆம் தேதியன்று சி.அம்பலவாணன் - வசந்தா தம்பதியினரின் ஒரே மகளாகப் பிறந்தவர் அ.வெண்ணிலா. நெசவுத்தொழில் செய்துவந்த அம்பலவாணன், திராவிட இயக்கச் சிந்தனைகளின் மீது மிகுந்த ஈடுபாடு உடையவர். திராவிடர் கழகத்தை விட்டுப் பிரிந்து பேரறிஞர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கியபோது, அண்ணாவின் ஆதரவாளராக மாறி, அம்மையப்பட்டில் தி.மு.க. கிளையைத் தொடங்கி, தான் இறக்கும் வரையிலும் அதன் செயலாளராக இருந்தார்.

தந்தையாரின் ‘முரசொலி’ வாசிப்பும், திராவிட இயக்க நூல்களின் வாசிப்பும் புத்தக வாசிப்பின்மீது வெண்ணிலாவுக்கும் ஆர்வத்தைத் தூண்டியது. ஐந்தாம் வகுப்பு வரை அம்மையப்பட்டு ஊ.ஒ.நடுநிலைப்பள்ளியில் படித்தவர், பிறகு வந்தவாசி பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்து படித்தார். பத்தாம் வகுப்பு முடித்ததுமே அன்றைய ஆசிரியர் பயிற்சியில் சேர்ந்து படித்து, தனது 19ஆவது வயதிலேயே அரசுப் பள்ளி ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார்.

தி.ஜானகிராமன், பாலகுமாரன், கி.ராஜநாராயணன், கந்தர்வன், பிரபஞ்சன்,

வண்ணநிலவன் எனத் தொடர்ந்து வாசித்து வந்தவர், தனது நண்பர் டி.எல்.சிவகுமார் நடத்திவந்த 'பூங்குயில்' இதழில் எழுதத் தொடங்கினார். அப்போதே 'வந்தை பாரதித்தோழி' எனும் புனைபெயரில் 'தினமணி' நாளிதழில் கட்டுரைகளையும் எழுதினார்.

'பட்டுப்பூச்சிகளைத் தொலைத்த ஒரு பொழுதில்..' எனும் முதல் சிறுகதையே 'கணையாழி' இதழில் வெளியாகி, அந்த மாதத்தின் சிறந்த சிறுகதையாகத் தேர்வுசெய்யப்பட்டு, 'இலக்கியச் சிந்தனை' பரிசினைப் பெற்றது.

1998 ஏப்ரல் 4 அன்று அ.வெண்ணிலா எழுதிய கவிதைகளும், அவரது இணையர் எழுதிய கவிதைகளும் சேர்ந்து அவர்களது மணநாளுக்கு முதல் நாளில், 'என் மனசை உன் தூரிகைத் தொட்டு..' எனும் நூலாக வெளிவந்தது.

'ஈரப் பிசுப்போடு ஒரு நிமிடம்
உட்கார்ந்து இருப்பீர்களா?

ரத்தப் பெருக்கோடும்
உறங்க வேண்டியிருக்கு.
மனதை மட்டும் தூக்கிக்கொண்டு
அலைகிறீர்கள்தானே?

கட்டுகள் ஒழிந்து என்றாவது
விட முடிந்திருக்கிறதா இந்த உடலை?

தளர்ந்துபோனால்
தாங்க மடி வேண்டும்தானே?

அடிவயிற்றில்
பிரபஞ்ச பூதத்தின்
மூலாதார அவஸ்தையோடு

பிறப்பின் வாசம்
உடலெங்கும் பரவி நிற்க

ரத்தம் தோய்ந்த ஆடைகளோடும்
நடுங்கும் கால்களோடும்
சாய்ந்துகொள்ளத் துழாவுகிறோம்.

'தொடாதே.. தள்ளி நில்'
என்கிறாள் அம்மாவும்
எறும்புக்கும் நாய்க்கும்
எப்படியோ இந்த அவஸ்தை.'

மண விழாவில் வெளியிடப்பட்ட நூலில் இடம்பெற்ற இக்கவிதை, பெண்களின் மாதாந்திர வலியைப் பேசிய விதம் பலரையும் ஈர்த்தது. பலராலும் பாராட்டப்பெற்றது. பல இதழ்களில் மறுபிரசுரமும் ஆனது. தொடர்ந்து தமிழ்க் கவிதையில் தனது காத்திரமான பங்களிப்பை அளிக்கத் தொடங்கினார் அ.வெண்ணிலா.

'வெண்ணிலாவுக்கு இதுதான் முதற்தொகுப்பு. முற்றிலும் நவீன காலப் பெண்ணாகவும், நவீன காலக் கவிஞராகவும் இந்தக் கவிதைத் தொகுப்பிற்குப்பின் அறியப்படப் போகிறார்' என்று நூலின் முன்னுரையில் கவிஞர் கந்தர்வன் எழுதிய வரிகள், வெகுசீக்கிரத்திலேயே மெய்ப்படத் தொடங்கியது.

2001இல் அ.வெண்ணிலாவின் கவிதைகள் 'தமிழினி' பதிப்பகத்தின் வழியாக 'நீரிலலையும் முகம்' எனும் முதல் கவிதை நூலாக வெளியானது. இதுவரை பத்துக்கும் மேற்பட்ட பதிப்புகளைக் கண்ட இந்நூல், கவிதை உறவு, தேவமகள் அறக்கட்டளை, சிற்பி இலக்கிய விருது, தமுஎச கவிதை நூல் விருது என எட்டுக்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றுள்ளது.

கவிஞரது முதல் கவிதை நூலில் இடம்பெற்ற சில கவிதைகள், இன்றளவும் தமிழ்க் கவிதையின் ஆகச் சிறந்த கவிதைகளாகப் பல ஆய்வரங்குகளிலும், கட்டுரைகளிலும் மேற்கோளாகச் சுட்டப்பெறுகின்றன.

'முத்தத்தில் துவங்கி
முத்தத்தில் முடியும்
தாம்பத்ய உறவு
எத்தனை பேருக்கு வாய்க்கிறது?
யாரும் சொல்லாமலேயே
கற்றுக்கொள்கிறார்கள்
அலுத்துத் தூங்குவதற்கான
உடற்பயிற்சியாக.'

ஆணுக்கும் பெண்ணுக்குமான ஊடலின் உறவை உள்ளார்ந்த அர்த்தத்துடன் உணரவைக்கும் வரிகளாக நம்மைக் கவனப்படுத்துகிற கவிதையிது.

‘மணமிக்க
பூச்சூடிக் கொள்கிறேன்

கூடுதலாய்
முகப்பவுடரும்

புடவைக்குக்கூட
வாசனை திரவியம்
பூசி வைத்துள்ளேன்

வியர்வையைக்
கழுவிக் கழுவி
சுத்தமாய் வைத்திருப்பதாய்
நினைத்துக் கொள்கிறேன்
என்னை

அத்தனையையும் மீறி
ஆடைகளுக்குள்ளிருந்து
தாயின் வாசம்
சொட்டுச் சொட்டாய்
கோப்புகளில் இறங்குகிறது

அவசரமாய்
அலுவலகக் கழிப்பறையில் நுழைந்து
பீச்சி விடப்படும் பாலில் தெறிக்கிறது
பசியைத் தின்று அலறும்
குழந்தையின் அழுகுரல்.’

பணிக்குச் செல்லும் பெண்கள், பேற்றின் வலியோடு சேர்ந்த பெருவலியாக, குழந்தைக்குத் தாய்ப்பால் கூட கொடுக்க முடியாமல் அலுவலகத்திற்குச் சென்று படுகிற துயரத்தை மிக நுட்பமாகப் பதிவுசெய்கிறது இக்கவிதை.

‘மிதியடிச் சத்தத்தை
மிதப்படுத்து
அழைப்பு மணியோ
கதவு தட்டலோ
யோசித்து – பின்
மெதுவாய் எழுப்பு

‘யார் வீட்ல’ என
கேட்கும்முன்
குரலை
மென்மையாக்கு

நீ நுழையும்
எந்த வீட்டினுள்ளும் – ஒரு
குழந்தை தூங்கிக் கொண்டிருக்கலாம்.’

‘ஆனந்த விகடன்’ வார இதழில் வெளியான வெண்ணிலாவின் இந்தக் கவிதை, குழந்தைகள் இருக்கிற வீடுகளுக்குச் செல்லும்போதெல்லாம் நம் மனதில் இருக்கும்படியான தேர்ந்த வார்த்தைகளைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

எதையும் அதிர்ந்த குரலில் பேசாமல், அதே நேரத்தில் அழுத்தமாகவும், கருத்தியல் தளத்திலான சமூகப் புரிதலுடனும் பேசுபவை அ.வெண்ணிலாவின் படைப்புகள் என்பதற்கான எடுத்துக்காட்டுகளாகப் பலவற்றைப் பட்டியலிடலாம். என்றாலும் ஒன்றை மட்டுமே எடுத்துக்காட்டாகச் சுட்டலாமெனில் இந்தவொரு கவிதை போதுமே..!

‘உள்ளே வீசப்படும்
செய்தித்தாளை
அப்பாவிடம் கொடுக்கவும்
கீரை விற்பவள் வந்தால்
அம்மாவைக் கூப்பிடவும்
கற்றுக் கொள்கிறது குழந்தை
யாரும் கற்றுத் தராமலேயே.’

அ.வெண்ணிலாவின் கவிதைகள் ஆதியில் சொற்கள் இருந்தன (2002), இசைக்குறிப்புகள் நிறையும் மைதானம் (2005), கனவைப் போலொரு மரணம் (2007), இரவு வரைந்த ஓவியம் (2010), துரோகத்தின் நிழல் (2011), படுகடர் தண்டாக் காதல் (2024) ஆகிய நூல்களாகவும், தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள் எரியத் துவங்கும் கடல் (2014) எனும் தொகுப்பாகவும் வெளிவந்துள்ளன.

பட்டுப்பூச்சிகளைத் தொலைத்த ஒரு பொழுதில்.. (2005), பிருந்தாவும் இளம் பருவத்து ஆண்களும் (2012), இந்திர நீலம் (2020), கண்ணம்மாக்கள் மரிப்பதில்லை (2023) ஆகிய 4 சிறுகதை நூல்களையும், கங்காபுரம் (2018), சாலாம்புரி (2020), நீரதிகாரம் (2023) ஆகிய 3 நாவல்களையும், பெண் எழுதும் காலம், தேர்தலின் அரசியல், அறுபடும் யாழின் நரம்புகள், ததும்பி வழியும் மௌனம், மரணம் ஒரு கலை, எங்கிருந்து தொடங்குவது, பேரன்பு ஒளிரும் சிற்றகல் ஆகிய ஏழு கட்டுரை




நூல்களையும் எழுதியுள்ளார் அ.வெண்ணிலா. திருமணத்திற்கு முன்பாக தனது இணையருக்கு எழுதிய கடிதங்களடங்கிய 'கனவிருந்த கூடு' எனும் நூலொன்றையும் வெளியிட்டுள்ளார்.

சாகித்திய அகாதெமிக்காக உலகெங்குமுள்ள 55 தமிழ்ப் பெண் கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து 'கனவும் விடியும்' (2018) எனும் தொகுப்பு நூலையும், 'மீதமிருக்கும் சொற்கள்' எனும் தலைப்பில் 1930 முதல் 2014 வரையிலான 84 ஆண்டுகாலப் பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளையும் தொகுத்துள்ளார். மேலும், 'தேவதாசிகளின் கலைத்திறனும் ஆளுமையும்' குறித்து ஆய்வு செய்து, முனைவர் பட்டம் பெற்றதோடு, அந்த ஆய்வினை 'தேவதாசிகள் கலையே வாழ்வாக..' எனும் நூலாகவும் வெளியிட்டுள்ளார். சிறப்புமிக்க தமிழாளுமைகளைச் சந்தித்து, அவர்களை நேர்காணல் செய்து 'நிகழ்முகம்' எனும் நூலாக்கியுள்ளார். ஓவியர் டிராட்ஸ்கி மருது குறித்து 'காலத்தின் திரைச்சீலை' எனும் தொகுப்பு நூலையும் பதிப்பித்துள்ளார்.

கவிஞர், சிறுகதையாளர், கட்டுரையாளர், நாவலாசிரியர், பள்ளி ஆசிரியர், கள ஆய்வாளர், வரலாற்றுத் தொகுப்பாளர் எனப் பன்முகக் களங்களிலும் செயலாற்றிவரும் அ.வெண்ணிலா, தனது எழுத்துக்களிலும் செயல்பாடுகளிலும் பெண்ணியம் சார்ந்த கருத்துக்களை முன்னெடுப்பதோடு, தனக்கான தனித்துவ மொழிநடையில் எழுதிவருவது சிறப்புக்குரியதாகும். ஆங்கிலம், மலையாளம், இந்தி, தெலுங்கு உள்ளிட்ட பல மொழிகளிலும் இவரது பல படைப்புகள் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரி அளவிலான பாடத்திட்டங்களில் இவரது நூல்கள் பாடமாகவும் வைக்கப்பட்டுள்ளன. 2009-2010ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் புதிதாக வடிவமைக்கப்பட்ட சமச்சீர் கல்வி பாடத்திட்டக் குழுவில் ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றி, புதிய பாடப்புத்தகங்களை உருவாக்குவதில் மிக முக்கியப் பங்காற்றியுள்ளார். கதை சொல்லி,

புத்தகம் பேசுது இதழ்களின் ஆசிரியர் குழுவிலும் இருந்து செயலாற்றியுள்ளார்.

எழுத்தாளரும் இந்திய ஆட்சிப்பணி அதிகாரியுமான டாக்டர் மு.ராஜேந்திரன் உடன் இணைந்து 'வந்தவாசிப் போர் - 250' எனும் நூல், 'இந்திய சரித்திரக் களஞ்சியம் (ப.சிவனடி - 8 தொகுதிகள்)' எனும் வரலாற்று நூல்கள், 'ஆனந்தரங்கப் பிள்ளை தினப்படி சேதிக் குறிப்பு (12 தொகுதிகள்)' ஆகியவற்றோடு, 'கம்பலை முதல்..' எனும் கட்டுரை நூலையும் எழுதியுள்ளார்.

'உத்ரா' எனும் திரைப்படத்தில் பாடலாசிரியராகவும், 'சகுந்தலாவின் காதலன்' எனும் திரைப்படத்தில் வசனகர்த்தாவாகவும் துணை இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார்.

தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த கவிதை (2007) மற்றும் சிறந்த நாவலுக்கான (2018) பரிசுகளையும், 2021இல் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராயம் வழங்கிய 'புதுமைப்பித்தன் படைப்பிலக்கிய விருது', 2022இல் 'கலைஞர் பொற்கிழி விருது', அவள் விகடன் இதழ் வழங்கிய 'இலக்கிய விருது', 2024இல் நியூஸ் 18 தொலைக்காட்சி வழங்கிய சிறந்த இலக்கியப் படைப்பாளிக்கான 'மகுடம் விருது' உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

கவிதை, கதை, நாவல் எனப் பல படைப்புத் தளங்களிலும் மிகுந்த ஆர்வத்தோடு எழுதிவரும் அ.வெண்ணிலாவின் பல கதைகளுக்குள் கவிதை இருப்பதைப்போலவே, பல கவிதைகளுக்குள்ளும் கதைகள் இருக்கின்றன. 'இசைக்குறிப்புகள் நிறையும் மைதானம்' நூலிலுள்ள எல்லாக் கவிதைகளுமே கதைக்கான உள்ளடக்கத்தைக் கொண்டவை. அதேபோல், 'என் தந்தைக்கும் உன் தந்தைக்கும்' எனும் நீள்கவிதை, சமகால அரசியலைக் கவிதைக்குள் பொதித்திருக்கும் கதைக்கவிதை என்பேன்.

'நித்யா ஒரு பூனைக்குட்டியாகிறாள்' எனும் குறுங்கவிதைக்குள் அழகிய கதைகளுமிருக்கின்றன. அதிலொன்று;

'மூன்று பூனைக் குட்டிகள் வேண்டி
நானும் நித்யாவும்
நெருக்கமானோம்

பூனைக் குட்டிகளைப் பிடித்து
மடியில் தூக்கி வைப்பேன் என
நித்யா என்னைச் சுற்றி வந்தாள்

பூனைக்கு என்ன புவா வேணும்
பூனைக்கு எப்ப பசிக்கும்
பூனை எப்படி பாச்சி குடிக்கும்
அம்மா பூனை எப்ப வெளிய போவும்
எனக்கும் தெரியாத பதில்களுக்காக
என்னைக் கேள்விகளால் நிரப்பினாள்

பூனைக் குட்டிகள் வேண்டி
நித்யா என்னை நெருங்கிவர
விரோதத்துடன்
என்னைப் பார்த்துக் கொண்டிருந்தது
அம்மாப் பூனை

ஒரு சுபமுகூர்த்த வேளையில்
அம்மாப் பூனையுடன்
குட்டிப் பூனைகள்
வெளியேறின
அறையை விட்டு

பூனைக் குட்டிகளைத் தேடிவந்த
நித்யாவிற்கு
சொல்வதற்குப் பதில் இல்லாததால்
பால்மடி புதைத்துக்கொண்டேன்
அவளை ஒரு பூனைக் குட்டியாக்கி.'

இந்த வாழ்க்கையென்பது கூட ஒரு பூனைக்குட்டியைப் போன்றதே. ஆனாலும், பயந்து ஒளிந்துகொள்ளாமல், நேராய் நின்று வாழ்வை எதிர்கொள்ளும் திறனை நமக்குக் கற்றுக்கொடுப்பவை இலக்கியங்களே. அத்தகைய இலக்கிய ஆக்கங்களைப் படைக்கும் அ.வெண்ணிலாவும், தமிழிலக்கிய வானத்தில் இன்னொரு நிலவாக என்றும் ஒளிர்ந்துகொண்டே இருப்பார்.

- இன்னும் வரும்

■

கவிஜி




# தடதடக்கும் திரைக்கதை

**திரைப்படம்** : The Good the Bad and the Ugly

குதிரையும் தொப்பியும் தோகை விரிக்க.. பாலைவனமும் பரந்து விரிந்த தூரமும் வானம் சமைக்க.. சொல்லொணாக் கிளர்ச்சிக்குள் படம் ஓடத் தொடங்குகிறது. குதிரைகளின் குளம்படிச் சத்தமும் பாலைவனப் பின்னணியில் தொடுவான யுத்தமும் இந்த சினிமாவை உலக சினிமாவாக ஆக்குகிறது. எப்போதோ நாம் பார்த்த ஜெய்சங்கரின் படங்கள் நமக்கு நினைவுக்கு வராமல் இல்லை. ஆனாலும், காட்சி செதுக்குதலில் நிகழ்ந்திருக்கும் அற்புதம் தனிச்சிறப்பு.

செஜியோ லியோனின் "தி குட் தி பேட் அண்ட் தி அக்லி."

படம் பார்க்கப் பார்க்க நாமும் ஒரு குதிரையில் அவர்களுடன் பயணிக்கத் தொடங்குகிறோம்.

ஒரு நல்லவன், ஒரு கெட்டவன், ஒரு மோசமானவன். மூன்று பேர். ஒரு புதையல். அதைத் தேடி ஒரு பயணம். இதுதான் கதை. ஆனால் திரைக்கதை, சிதறடிக்கும் தோட்டாக்கள். கெட்டவனின் அறிமுகக் காட்சி, மோசமானவனின் அறிமுகக் காட்சி, பிறகு நல்லவனின் அறிமுகக் காட்சி. இந்தப் படம் எப்படி இருக்கப்போகிறது என்ற எதிர்பார்ப்பைப் பரபரவென ஏற்படுத்திவிடுகின்றன. மூவரின் குணாதிசயங்களையும் நமக்குக் கடத்தும் திரைக்கதை தெளிவான ஓட்டம்.

துப்பாக்கி இல்லாத கவ்பாய் சினிமாக்கள் எப்படி சுவாரஸ்யமாக இருக்கும்.. இதிலும் நிறைய துப்பாக்கிகள். துப்பாக்கிகள் பேசும் சங்கதிகள் ஏராளம். துப்பாக்கி கொண்ட கைக்கும் அது இல்லாத கைக்கும் இடையே இருக்கும் வித்தியாசம் வாழ்வுக்கும் சாவுக்குமான இடைவெளி. தோட்டாக்களின்

அடர்த்தி நிறைந்த இறுக்கம் எப்போது விடுபடும் என்பது நொடிக்கு நொடி மாறும் விரல்களின் வித்தையில் இருக்கிறது. எந்த விரலுக்கு எத்தனை வேகமோ அது கொண்ட துப்பாக்கிக்கு அத்தனை உயிர்ப்பு. அடுத்தடுத்து நிகழும் சம்பவங்களின் சுவாரஸ்யத்துக்குக் குதிரைகளின் குளம்படிச் சத்தம் குதூகலம் என்றால், அவ்வப்போது பின்னணியில் ஒரு மலை போல மெல்ல எழுந்து ஓர் அலைபோல அறைந்து அமிழும் இசை.. ஸ்தூலம்.

படம் ஆரம்பிக்கும்போதே இதயத்தைத் துளைக்கும் அந்த இசையின் சீற்றம்.. இனம் புரியாத இன்பத்தை நமக்குள் பிளக்கிறது. இசை “என்னியோ மார்க்கோனி”. ட்ரண்ட் செட்டிங் இசை. இதிலிருந்து அல்லது இதே போல அல்லது கொஞ்சம் சாயலோடு அல்லது இதே தீமோடு அதன் பிறகு உலகம் முழுக்க இப்போது வரை இந்த இசை கசிந்துகொண்டிருப்பதுதான் இதன் செவி சேர் சிறப்பு.

நல்லவனுக்கும் கெட்டவனுக்கும் இடையே மோசமானவன் வந்து வந்து போகும் காட்சிகளில் யாருக்கு என்ன பலமோ யாருக்கு என்ன சூழலோ அது கொண்டு அமையும் அடுத்தடுத்த நொடிகள் என்று நொடிக்கு நொடி வெடி வைத்தது போலத்தான் புதையலைத் தேடிச் செல்லும் இந்தப் பயணம்.

தேவைக்கு ஒருவருக்கொருவர் உதவிக்கொள்வதும் தேவை தீர்ந்ததும் வெட்டிவிட்டுச் சிட்டாய்ப் பறந்துவிடுவதும் முதல் சில காட்சிகளிலேயே நமக்குத் தெரிந்துவிடுகிறது. குதிரையில் அமர்ந்தபடியே தூக்கிலிடப்படும் காட்சி. தேடப்படும் குற்றவாளியைத் தேடுவோரிடம் ஒப்படைத்து விட்டு அதற்கான சன்மானத்தை வாங்கிக் கொண்டு போவது போலச் சென்றுவிட்டு, குற்றவாளி தூக்கில் தொங்க விடப்பட்ட பிறகு, தூரத்தில் மறைந்திருக்கும் நல்லவன், கழுத்தை இறுக்கித் தொங்கும் கயிற்றைக் குறி பார்த்துச் சுட்டுக் கெட்டவனைக் காப்பாற்றி, பிறகு இருவரும் கிடைத்த சன்மானத்தைப் பிரித்துக்கொள்வதில்.. இப்படி உயிரைப் பணயம் வைத்து இவர்கள் ஆடும் ஆட்டம் அதகளம். நல்லவனுக்கும் மோசமானவனுக்கும் இடையே ஏற்படும் தொழில் முறை அக்ரீமெண்ட், அது தொட்டு நிகழும் உரையாடல்கள், அதில் இருக்கும் நகைச்சுவை எனப் போகிற போக்கில் தூவிச் செல்லும் யதார்த்தத் தத்துவங்கள் அட போட வைக்கும்.

உயிரைப் பணயம் வைத்துத் தொங்கறது நான், அதனால எனக்குத்தான் அதிகப் பணம் என்று மோசமானவனும்; சரியான நேரத்தில் உன்னைக் காப்பாற்றிவிடும் தனக்குத்தான் அதிகப் பணம் என்று நல்லவனும் சண்டையிட்டு அதனால் ஏற்படும் பிரிவு. கொண்டுபோய் நடு பாலைவனத்தில் விட்டுச் சென்றுவிடும் காட்சி. பிறகு அதே காட்சி பின்னொரு சூழலில் நல்லவனுக்கு ஏற்படுகையில், அய்யயோ.. பாலைவனம் பாறைவனமாக சுடும். ஒரு வாய் தண்ணீருக்கு நல்லவன் படும் பாடு, பார்க்கும் நமக்குத் தாவு தீர்ந்துவிடும். மெல்ல மெல்ல உயிரின் வலியை உணரும் நொடிகளும் அந்தப் பாலைவனத் தகிப்பும் திரை தாண்டி நம் மீது தெறிக்கும். வெப்பத்தின் விளைவில் உடலில் நீர்ச்சத்து இல்லாமல் நிறம் மாறும்போதும் உடலில் தோல் உரிந்து புண் ஆகும்போதும் ஒவ்வொரு காலடிக்கும் உயிர் புதைந்து புதைந்து எழுவதை மூச்சைப் பிடித்துக்கொண்டுதான் பார்க்க முடியும்.

ஒருவனிடம் இருந்து தப்பித்தால் இன்னொருவன் அவனை விட கொடூரமாகக் காரியங்களை நிகழ்த்துவான். நாயகன் நிஜமாகவே போராட வேண்டி இருக்கிறது. நல்லவனுக்குத்தான் நாள் முழுக்க சுமை. மோசமானவனுக்குத் திகில் மட்டும்தான். கெட்டவன் உருவாக்கும் நாளுக்கு ஓநாயின் பற்கள். அதில் ஓயாத வெறி. ‘ஏஞ்சல் ஐஸ்’ பாத்திரத்தின் வில்லத்தனம் வேர் வரைக்கும் மிரட்டி எடுக்கும்.

ஒரு காட்சி.. துப்பாக்கிக் கடையில் துப்பாக்கியை எடுத்து விலை என்ன என்று கேட்கும்போது கடைக்காரர் ஒரு விலை சொல்கிறார். சற்று துப்பாக்கியை அப்படி இப்படி பார்த்துவிட்டு, தோட்டாக்கள்

வாங்கிப் பொருத்திவிட்டுத் துப்பாக்கியைக் கடைக்காரர் முன்னால் நீட்டி, இப்போ என்ன விலை என்று கேட்கிறார்.

கண்கள் வெளியே வந்துவிடும் அளவுக்குப் பார்த்த கடைக்காரர் தோள்களைக் குலுக்கி, ஃப்ரீ எனச் சொல்லும்போது நம்மால் கை தட்டாமல் இருக்க முடியாது. இப்படி கிளாசிக் ஷாட்ஸ் ஆங்காங்கே அடித்துத் துவம்சம் செய்வதால்தான் இத்தனை காலத்துக்குப் பிறகும் இந்தப் படம் கிளாசிக் மூவியில் இருக்கிறது. இந்தத் தலைப்பு எங்கும் எப்போதும் தேவைப்படுகிற ஒன்றாக இருக்கிறது.

துப்பாக்கிகள் பொதுவானவை. யார் சுட்டாலும் சுடும். அதற்கு எதிரே இருப்பவர் யாரென்று தெரியாது. யாரின் கையில் இருக்கிறோம் என்றும் தெரியாது. அதன் வேலை தொட்டால் வெடிக்கும். வெடித்தால் உயிர் குடிக்கும். காட்சிகள் போல விரல்களின் விழிகளில் இருக்கிறது நல்லதும் கெட்டதும். யார் முந்திக்கொள்வது என்பதில்தான் அவரவரின் உயிர் இருக்கிறது. மைக்ரோ நொடி வித்தியாசத்தில் தன்னைக் காத்துக்கொள்வதும் எதிரியை வீழ்த்திவிடுவதும் நிகழும் வேகத்துள்தான் வாழ்வின் மிச்சம். மற்றபடி கண் சிமிட்டும் நேரத்தில் கவனமில்லாத எந்த உயிரும் எதிரே நிற்பதில்லை. பலமில்லாத உடலுக்கு முந்தைய நொடிதான் எமன்.

புரவியின் தோற்றமும் வேகமும் எப்போதும் எல்லோரும் ஆச்சரியப்படுகின்ற விஷயம். நம்மை அறியாமல் நாம் சிலாகித்துவிடும் தருணங்கள் குதிரைகளின் ஓட்ட நேரங்கள். புழுதி கிளப்பிக்கொண்டு காற்றில் பறக்கும் அந்தக் காட்சிகளின் வழியே நம் கண்கள் தடக் தடக் என அடித்துக்கொள்வதைப் படம் நெடுக நாம் உணர்கிறோம். குதிரையை விரும்பாதோர் யார் இருக்க முடியும். அது தூர தேசத்தைக் கிட்ட கொண்டுவரும் குளம்படிச் சித்திரம். பெரும் வியப்பின் தூசுகளைக் கண் முன்னே கலையாக்கும் அற்புதக் கடிவாளத்தின் சிறகு.

புதையலுக்குக் கொண்டு செல்லும் கதை, திரைக்கதையில் தடதடக்க வைக்கிறது திரையை.



ஒவ்வொரு காட்சிக்குள்ளும் வெயிலிலிருந்து தலை காக்கும் தொப்பிகளும் உடலைப் போர்த்தியிருக்கும் போர்வைகளும் கத்தி நீண்டிருக்கும் ஷூக்களும் முரட்டு பெல் பாட்ட பேண்ட்டுகளும் அதில் துப்பாக்கி செருகி வைக்க கத்தி செருகி வைக்க எனச் செய்யப்பட்டிருக்கும் தோல் வேலைப்பாடுகளும்.. அது ஒரு தனி தோற்ற மயக்கத்தை ஏற்படுத்தும்.

மோசமானவன் காமெடியில் கலக்கும்போது கெட்டவனின் செய்கைகள் வயிற்றைக் கலக்கிவிடும் என்பதற்குப் பல காட்சிகள் உதாரணம். மோசமானவனின் ஸ்டைல்.. பிற்காலத்தில் ரஜினிகாந்த் எனும் நடிகரின் ஸ்டைலுக்கு முன்னோடியாக இருக்கப்போகிறது என்று அப்போது யாரும் உணர்ந்திருக்க முடியாது.

வாயில் சிகர் வைத்துக்கொண்டே இருக்கும் நல்லவனின் உடல்மொழி, பாவனை, ஸ்டைல், துப்பாக்கி இயக்கம், லாவகம் எல்லாமே தரமான சம்பவங்களுக்கு உத்திரவாதம்.

பாலைவன மேடுகளைக் காட்டும் முதல் காட்சியிலேயே பிரேமுக்குள் வரும் முகம் அத்தனை க்ளோசில் இருக்க, தொப்பியும் அதன் தீர்க்கமுமாக.. அடுத்து நடக்கப்போகும் பெரும் சம்பவத்தின் துளித்துளி சேகரிப்பு நம்மை நெற்றி அசைக்க விடாது. கல்லறைகள் சூழ நிகழும் இறுதிக்காட்சி, இடி மின்னல் பெருமழைக்குச் சமம். புதையல் இருக்கும் கல்லறையைத் தேடும்போது வேகம் கூடித் திரை கிழித்து நாம் உள்ளே போக வாய்ப்பிருக்கிறது. கண்கள் பார்க்கப் பார்க்க மௌனம் கூடக் கூட எந்தத் துப்பாக்கி எப்போது வெடிக்கும் என்ற பரபர.. காட்சிக்குக் காட்சி கிளாசிக். நகரங்களின் வடிவமும் மக்களின் தோரணைகளும் ஆடைகளும் அவர்களின் அன்றாடங்களும் குதிரைகளும் அவற்றின் வனப்பும் ஒவ்வொரு காட்சியையும் செதுக்கி இருக்கும் திரைக்கதையும் ஒருபோதும் சலிக்காத ஒரு படம். எப்போது பார்த்தாலும் அப்போது பார்க்கும் திருப்தி ஒவ்வொரு முறையும் அப்படியே இருக்கிறது.

தனித்தனிப் புள்ளியில் இருந்து எழும்பும் முக்கோணங்கள் நேருக்கு நேர்



சந்தித்துக்கொள்ளும் நேரம்தான் இந்த முழுப்படமும். முதல் பத்து நிமிடங்கள் இசை இல்லாமல் நடக்கும் காட்சிகள் கண்டிப்பாகக் கண்கள் சிமிட்ட விடாது. பரந்த பொட்டல்வனத்தில் நிகழும் ஒவ்வொரு சம்பவமும் பார்க்கப் பார்க்கப் பரவசம். இசையும் காட்சி அமைப்பும் கனக்கச்சிதமாய் ஒன்றுகூடும்போதெல்லாம் விசில் பறக்கும் வினாடிகள் நமக்கு. இதயத்தைக் கீறும் கீச்சொலி படம் முடிந்த பிறகும் செவிக்குள் சிறகடிக்கும்.

இருக்கையின் நுனி கூட விசிலடிக்கும். உலகம் மறக்கும் செயல்.. திரைக்குள் நிகழ்கிறது.

திரைப்படம் : The Good the Bad and the Ugly

மொழி : English

இயக்கம் : Sergio Leone

ஆண்டு: *1966*

■

சிறுகதை

குடந்தை அனிதா



# கண் பேசும் வார்த்தை

மின்சார ரயில் கிளம்பும் முன் சரியான நேரத்திற்கு "பீச் ஸ்டேஷன்" வந்துவிட நினைத்த சோனா.. சென்னை நெரிசலை சமாளிக்கத் தெரியாமல் காணும் திசையெல்லாம் கண் அருகே இத்தனை மனிதர்களைக் கண்டு சற்று மிரண்டுதான் போனாள்.

'விபத்துக் காப்பீடு' வழக்கு தொடர்பாக வக்கீல் ஒருவரை ஹைகோர்ட்டில் பார்த்துப் பேசிவிட்டு வீடு திரும்ப 'பீச் ஸ்டேஷன்' வந்தவள், இந்தச் செங்கல்பட்டு ரயிலை விட்டால் இனி அடுத்த ரயில் வர அரைமணி நேரமாவது காத்திருக்க வேண்டுமே என்ற கவலையோடு.. ஸ்டேஷன் வரத் தாமதமாகிவிட்ட பதட்டத்தில் "பணம் எண்ணும் இயந்திரத்தில்" சிக்கிக்கொண்டது போல 'சல்' என்று ஒரு திசையிலிருந்து மறுதிசைக்கு மக்கள் தள்ளும் வேகத்திற்குத் தகுந்தவாறு நகர்ந்துகொண்டிருந்தாள்.

மின்சார ரயில் கிளம்ப 'சிக்னல்' கிடைத்ததும் தனக்கேயுரிய பாணியில் நெட்டி முறித்து 'ஆ' என்ற சத்தம் கொடுத்தது.

சோனா அருகே வர வர ரயில் கிளம்பிவிட்டது. 'மீனா வேற வீட்ல தனியா இருப்பா' என்ற பதட்டமும் சேர்ந்துகொள்ள வந்த அவசரத்தில் ஓட்டமும் நடையுமாக எப்படியோ விற்பனையாளர்களுக்கான (வென்டார்ஸ்) கம்பார்ட்மெண்ட்டில் ஏறிவிட்டாள்.

அந்தக் கம்பார்ட்மெண்ட் மெட்ரோ ரயில் போலப் பயணிகள் பக்கவாட்டில் நேர் எதிர் எதிரே உட்காரும்படி வியாபாரிகள் சாமானை வைப்பதற்கு வசதியாக இடையில் கம்பிகள் இல்லாமல் இருந்ததை இன்றுதான் பார்க்கிறாள். இதுவரை இரண்டு மூன்று தடவை அப்பாவுடன் வந்து சென்றதுதான் ரயில் அனுபவம். மற்றபடி நான்கு சுவரும், மீனாவும், சப்பாத்திக்கட்டையும், அடுப்பு மேல் இருக்கும் தாவாவும் மட்டுமே பார்த்துப் பழகிய கண்களுக்கு இன்று இத்தனை அசையும் உயிர்களைப் பார்க்கும் வேலை அதிசயமாகியிருந்தது.

பயணிகள் வியாபாரிகள் நிறைந்து இருக்க அவளுக்கு உட்கார இடம் கிடைத்தது.

அருகில் இரண்டு குழந்தைகளுடன் ஒரு தம்பதியினர். எதிரே சில பயணிகள். அதில் வித்தியாசமாக ஒரு பெண் ஃப்ரீ ஹேர் விட்டு ஸ்டைலான மூக்குக் கண்ணாடியும் ஜீன்ஸும் அதற்குப் பொருத்தமே இல்லாமல் லூசாக ஒரு டீசர்ட்டும் அணிந்திருந்தது பார்த்த மாத்திரத்தில் எரிச்சலை ஏற்படுத்தியது சோனாவிற்கு.

பாவாடை தாவணி புடவை தவிர இதுவரை நைட்டி கூட அணிந்ததில்லை சோனா. அதுகூட அவள் எரிச்சலுக்குக் காரணமாக இருக்கலாம்.

அந்தப் பெண்ணின் தோளில் சாய்ந்திருந்த பையனோ காலர் வைத்த சட்டைக்கு அரைக்கால் டௌசர் அணிந்து அந்தப் பெண்ணின் கையைப் பிடித்தபடி அமர்ந்திருந்தது இன்னும் எரிச்சலை ஏற்படுத்தியது. சோனாவிற்குத் தர்மசங்கடமாகவும் இருந்தது. தனக்குத் தெரிந்த மனிதர்களின் பழக்கவழக்கத்திற்கு மாறாகக் காணும் அனைவரும் அவளுக்கு வித்தியாசமாகத் தெரிந்தார்கள்.

மீண்டும் அவர்களையே கண் ஏறிட்டுப் பார்க்க பொது இடத்தில் எப்படி பிகேவ் செய்ய வேண்டும் என்ற அறிவே இருக்காதா? இத்தனை மக்கள் கூடும் இடத்தில் எப்படி இங்கிதமே இல்லாமல் ஒருவரை ஒருவர் அணைத்தபடி அமர முடிகிறது இவர்களால்.

"ச்சீ மானங்கெட்ட பிள்ளைகள்."

இவர்களை என்னன்னு சொல்லி வீட்டில் வளர்ப்பார்களோ தெரியல.. வந்த அவசரத்தில் இந்தக் கம்பார்ட்மெண்ட்டில் ஏறுனதுல கண்ட கர்மாந்திரம் எல்லாம் பார்க்க வேண்டி இருக்கு என்று தன்னைத்தானே நொந்துகொண்டாள் சோனா.

ஆனால் அத்தனை ஆட்களுக்கு மத்தியில் ஆண்கள் எவரும் அந்த இருவரையும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. அவரவர் பாட்டு கேட்டுக்கொண்டு ஃபோன் பேசிக்கொண்டு.. தான் இறங்கும் இடம் வரும்வரை இனி இந்த நிமிடம் போனால் அடுத்த நிமிடம் கிடைக்காதே என்ற ரீதியில் இருந்தார்கள்.

சேட்பட், நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம் வரை கூட கூட்டம் மிதமாகத்தான் இருந்தது. மாம்பலம் ரயில் நிலையம் வந்ததோ இல்லையோ, அத்தனை மக்கள் மழை நாளில் இடம் தேடும் எறும்புக் கூட்டமாய் அடித்துப் பிடித்து ஏறிக்கொண்டிருக்க, 'அந்தப் பையனும் பொண்ணும் எப்புடி அப்படியே உக்காந்து இருக்குதுங்களோ.. காதலிக்க வேற இடமா இல்லை... பொது இடத்தில் எப்படி ஒரு ஆணும் பெண்ணும் இவ்வளவு நெருக்கமாக வெட்கமே இல்லாமல் அங்க அவயங்களை உரசிக்கொண்டு உட்கார முடிகிறது' என்று அதிர்ச்சியும் வியப்புமாக சோனா பார்த்துக்கொண்டிருக்கும்போதே... ஜீன்ஸ் பேண்ட் பெண் தோளில் சாய்ந்துபடுத்திருந்தான் அவன். அவளோ அவன் தலையைக் கோதிக்கொண்டு இருந்தாள்.

இனி அவர்களைப் பார்க்கக்கூடாது என்று அவள் அருகில் இருந்த ஒருவரைப் பார்த்து இவர் எப்போது? எங்கே? ஏறினார் என்று யோசித்தாள். 'இங்கிதம்' என்றால் அவரவர் பார்வையில் எது என்று புரியாது, சோனாவும் இங்கிதம் இல்லாமல்தான் ஒவ்வொருவரையும் பார்த்து 'இது சரியில்லை', 'டிசிப்ளின் இல்லை' என்ற ரீதியில் குறை கண்டுபிடித்துக்கொண்டு நேரத்தைக் கடத்தினாள். அருகில் இருந்த குழந்தை என்ன நினைத்ததோ சோனாவைப்

பார்த்து அழத் தொடங்கியது. ‘இந்தோ இந்தோ.. இன்னும் கொஞ்ச தூரம்தான். இப்போ எறங்கிடலாம்’ என்று கணவனும் மனைவியும் சமாதானப்படுத்திக்கொண்டு இருந்தார்கள். அந்தக் குழந்தைக்கு என்ன அசௌகரியமோ தெரியவில்லை, தொண்டை கிழிய அழுதுகொண்டு இருந்தது. மற்றொரு பிள்ளை செல்போனில் மூழ்கியிருக்க, எதிர் திசையில் இருந்தவரோ யாரிடமோ போனில் பேசத்தொடங்கியிருந்தார். அவர் முன் ‘பெரிய பெட்டி’ இருந்தது. வெளிநாடு போகிறார் போல.

“சரி சரி, அழாத. நம்ம புள்ளைங்களுக்காகத்தான எல்லாம்னு மனச தேத்திக்க. எனக்கு மட்டும் கவலை இல்லையா? இப்புடி அழுதுக்கிட்டே இருந்த, ஃபோன கட் பண்ணிடுவேன்” என்றவர், நான்கு ஸ்டேசன் கடந்தது கூட தெரியாமல் பேசிக்கொண்டு வந்தார். ‘ஏய் இரும்மா இரும்மா, ஏர்போர்ட் வந்துடிச்சி, நான் அப்புறம் கூப்புடுறேன்’ என்று திரிசூலம் ஸ்டேசனில் இறங்கிக்கொண்டார்.

வியப்பில் சோனா விக்கித்துப்போயிருந்தாள். ‘எப்படி இவர்களால் இவ்வளவு சத்தமாகப் பேச முடிகிறது? ஒவ்வொருவரும் அவரவருக்கென்று ஒரு உலகத்தை வடிவமைத்து அதில் தனித்தனித் தீவில் இருப்பது போல் நினைத்துக்கொள்வார்களா? யாரும் யாரையும் ஏறெடுத்துப் பார்க்காமல் எப்படி இத்தனை நெருக்கமாக அமர்ந்து பயணிக்கிறார்கள்..’ என்று பலமாக யோசித்தாள்.

நடுவே ‘கடவுளே இன்னைக்குன்னு பார்த்து இந்த டிரெயின் இவ்வளோ மெதுவா போகுதோ.. தெரியலையே’ என்று மீண்டும் எதிரே பார்த்து, ‘அந்தப் பொண்ணும் பையனும் இங்கேயே இறங்கினா தேவலை, இல்லைன்னா செங்கல்பட்டு அடுத்தே வந்துடாதா’ என்று வேண்ட ஆரம்பித்தாள்.

சாய்ந்துகொள்ள தோள் கிடைக்காத தனிமையில் இருப்பவர்கள் அவ்வப்போது கடவுளைத்தான் துணைக்கு அழைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகிறார்கள்.

திரிசூலம் ஸ்டேஷன் கடந்தபோது.. மாற்றுத்திறனாளி ஒருவர் பாட்டு பாட.. தட தட சத்தத்தையும் மீறிக் காற்றில் கரைந்துகொண்டிருந்தது பாடல்.

“தட்டிப் பார்த்தேன் கொட்டாங்கச்சி

தாளம் வந்தது பாட்ட வச்சி

தூக்கி வளர்த்த என் அன்பு தங்கச்சி

தூக்கி எறிஞ்சா கண்ணு குளம் ஆச்சு..”

நினைவுகள் தப்பும்போது பார்வை ஓரிடத்தில் நிலைக்குத்தித்தான் நிற்கும். போதாக்குறைக்கு டி.ஆர். பாடல் சோனாவிற்குப் பழைய சம்பவத்தை நினைக்கத் தூண்டியதால் பார்வை ஓரிடத்திலும் சிந்தை வேறொன்றிலுமாக எதிரே இருந்த ஜோடியை அப்பட்டமாகப் பார்த்துக்கொண்டு இருந்தாள்.

அம்மாவும் அப்பாவும் மீனாவை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டு ஓடிய அந்த நாள் ஏதோ நேற்று நடந்தது போல இருந்தது. சிறு வயதில் மீனா மயக்கம் போடுவதும் மூச்சுத் திணறலுமாக இருக்க அடிக்கடி ஆஸ்பத்திரி போவதும் சரியாகி வருவதுமாக இருந்தது. நீண்ட நாள் சிரமத்திற்குப் பின்தான் அது “கீட்டோஅசிடோசிஸ்,” உயிரைப் பாதிக்கும் “டயாபடிக் கோமா” என்று கண்டுபிடித்தனர். அதற்கு ஒரே தீர்வு தினமும் இன்சுலின் போடுவது மட்டும்தான். அதுவும் குழந்தைகளுக்கான டயாபடிக் ஆதலால் மிகுந்த கவனத்துடன் இன்சுலின் போட்டுவிட வேண்டும். ஆரம்பத்தில்



மாட்டேன் என்று பிடிவாதம் செய்த மீனா நாளடைவில் அக்கா சோனாதான் இன்சுலின் போட வேண்டும் என்றும் பிடிவாதம் செய்தாள். அது விதியின் சதி என்று பின்னொரு நாளில்தான் தெரிய வந்தது.

அம்மாவும் அப்பாவும் செங்கல்பட்டில் இருந்து மேல்மருவத்தூர் சென்றவர்கள் அவசரவூர்தியில் வந்து சேர்ந்த அவலம் நடந்தது. விபத்து என்றார்கள். அதற்கான இழப்பீட்டுத் தொகை பெறுவதற்குத்தான் கோர்ட் கேசு என்று அலைந்துகொண்டிருக்கிறாள் சோனா.

விதி என்று நினைத்து, திருமணம் கடந்து காதல் காமம் எதுவும் கிடைக்காமலேயே தன் சுகம் மறந்து தாய்மையைத் தங்கைக்காக ஏற்றுக்கொண்டாள் சோனா.

எங்கோ ஏறியிருந்த பூக்கார அம்மா ஜாக்கெட்டில் இருந்து சத்தமாக, 'அதோ அந்தப் பறவை போல வாழ வேண்டும் இதோ இந்த..' என்று பாடல் ஒலித்தது.

முன் ஜாக்கெட்டின் உள்ளே கைவிட்டு எடுத்த வேகத்தில் அந்தப் பக்கம் யார் என்ன சொன்னார்களோ..

“தூத்தேரி கழிசடைலபோக.. வாய பெணாயில் ஊத்திக் கய்வு.. அவன வுட்டு வந்து எம்மா நாள் ஆவுது.. நா ஏய்யா அவன பாக்க போறேன்... சவாரிக்குப் போனோமா, ஊடு வந்து சேந்தோமான்னு வந்து சேரு.. சொம்மா எங்க போறேன் வர்றேன்னு, மோப்பம் புடிச்சிகினு திரிஞ்ச அறுத்துப் போட்டுப் போய்ட்டே இருப்பேன் ஆமா..” என்று எந்த லஜ்ஜையும் இல்லாமல் சத்தமாக ஃபோன் பேசிவிட்டு மீண்டும் கைப்பேசியை ஜாக்கெட்டுக்குள் திணித்துக்கொண்டாள்.

பாதையிலேயே அமர்ந்து பூக்கட்டத் தொடங்கி இருந்தவள் கழுத்தில் அறுத்துப்போட ஏதுமில்லை. சோனா பக்கம் திரும்பிய பூக்காரி ‘எதிர்க்க அந்தப் பிள்ளைகள வச்ச கண்ணு மாறாம அப்புடி பாக்குதே இந்தப் பொண்ணு... வெக்கம் மானம் இல்ல’ என்று எண்ணினாள்.

“அதுங்க ரெண்டுக்கும் ஊட்ல என்ன கஷ்டமோ.. எதோ வீடு போற வரைக்கும் சந்தோஷமா இருந்துட்டுப் போப்போதுங்க, இது ஏன் அதுகள மொரச்சிகினு இருக்கு” என்று முந்தானையில் கொட்டியிருக்கும் பூக்களைப் பார்த்துப் பேசியபடி இரண்டு பூக்களை எடுத்து நூலில் இறுகக் கட்டிச் சேர்த்துவைத்தாள். அப்படியே ஒவ்வொரு பூவும் தனக்குக் கிடைத்த ஜோடியை இறுகப் பற்றிக்கொண்டு சரமாகியது. இப்போது பூக்காரம்மா பாட்டு பாடுபவரைப் பார்த்து “ந்தா.. நெதோம் ஒரே பாட்டே பாடுறியே.. வேற பாட்டுதான் பாடுறது” என்று உரிமையாகப் பேச்சு கொடுக்க ரயில் கூடுவாஞ்சேரி கடந்திருந்தது.

பாட்டு நின்றதும் சட்டென நினைவு திரும்பியவளாக சோனா தன்னைச் சரி செய்துகொண்டு முந்தானையில் முகம் துடைத்தாள். யாரோ தன்னை உத்துப் பார்ப்பதாகத் தோன்றியது. வலது பக்கத்தில் ஒருவர், உடல் முழுவதும் கொப்பளங்கள் நிறைந்த வயதானவர், சோனா அருகில் இடமிருந்தும் உட்காராமல் அந்த இடத்தையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார். தன்னைப் பார்ப்பதாக நினைத்துக்கொண்ட சோனா முறைத்தபடியே மீண்டும் நேர் எதிரே பார்வையைத் திருப்பிக்கொண்டாள்.


காதல் ஜோடி எங்கு இறங்கினார்கள் என்று கவனிக்கவில்லை. இப்போது அங்கு அப்பா வயதொத்த ஒருவர் அமர்ந்து சோனாவையே பார்த்துக்கொண்டு இருந்தது கண்டு அவள் மனம் சமாதானமாகியது.

சோனாவைப் பார்த்துக்கொண்டிருந்த அவரோ, மூக்கும் முழியுமா பாக்குறதுக்கு ‘கேசு’ மாதிரி இருக்கா என்று நினைத்துக் கொண்டிருந்தார். இப்படித்தான் கண்களின் தோற்றப்பிழை கருத்தினில் தோற்றப்பிழையாகிச் சமுதாயத்தை வன்மங்கள் சுமந்து திரியும் மக்களாய் மாற்றிக்கொண்டு இருக்கிறதோ? மின்சார ரயில் சிங்கபெருமாள் கோயில் தாண்டி செங்கல்பட்டு நோக்கித் தண்டவாளத்தில் சுருதி பிசகாமல் தடக் தடக் தடக் தடக் என்று சென்றுகொண்டிருந்தது.

பூக்காரியின் வேண்டுதலுக்குச் செவி சாய்த்துக் ‘கண்ணிழந்த இரயில் பாடகர்’ தன் குரலால் இரயில் பெட்டியை நேர்மறை எண்ணங்களால் சுத்தம் செய்கிறார்..

“தென்றல் வந்து தீண்டும்போது
என்ன வண்ணமோ மனசுல..
திங்கள் வந்து காயும்போது
என்ன வண்ணமோ நினைப்பில..”

■




## எதுவெல்லாம் காதல்??

யார் மூலமாகவோ
உன் தற்போதைய இருப்பை அறிகையில்
எட்டிப் பார்க்கும் கண்ணீர்த் துளி...

எதிரெதிரே சந்தித்தும்
ஒரு வார்த்தை கூட பேச முடியாத
சூழ்நிலைக் கைதியின்
ஆழப் பெருமூச்சு...

உன் பெயர் கொண்ட
குழந்தையைக் கட்டியணைத்து
அழுந்தத் தரும்
முத்தத்தின் ஈரம்...

உனக்குப் பிடித்த பாடல்
ஒலிக்கும் போதெல்லாம்
யாருக்கும் தெரியாமல்
முணுமுணுக்கும் உதடுகள்...

புதிய பேனா வாங்குகையில்
அனிச்சையாய் உன் பெயரெழுதி
கசக்கிப் போடப்படும் காகிதம்...

மழையில் நனைகையில்
வானவில் ரசிக்கையில்
அரை நொடியில் தோன்றி
மறையும் மெய்நிகர் உருவம்...

உன் ஆதர்ச நாயகன்
காதல் கதைகளை மறந்து
ஆவேசமாய் துப்பாக்கி சுடுகையில்
எழும் குண்டு சத்தம்...

குட்டி சங்கு பார்க்கையில்
கடற்கரையில் நனைகையில்
வீடு வரை துணை வரும்
மணல் துகள்கள்...

இத்தனையையும் மீறி
நீ வீடு தேடி வந்த ஒரு நாள்
"உன்னை யாரென்று தெரியாதென"
சொல்லித் துரத்திய குற்றவுணர்வு...

~ பிரபுசங்கர் க




## கோமாளி விடைபெறும் நேரம்

கோமாளியைக் கண்டதும்
உடனே சிரித்து விடுகிறோம்
அல்லது அவன் சிரிப்பூட்டிவிடுகிறான்.

வியர்வையால் ஒருபோதும் நனையாத
தொப்பிக் குஞ்சத்தை
ஒருமுறை கூட அவன் வருட விடுவதில்லை

தன் பருத்த மூக்கின் வழி
அன்பின் சுகந்தத்தைக்
கடத்துவதாகச் சொல்வதெல்லாம்
தோல்வியடைந்த ஏதோவொரு நாடகத்தின்
மறக்கடிக்கப்பட்ட வசனமே.

குறுகிய கறுத்த உதடுகளை
அவனுக்கு இம்மியளவு கூடப் பிடிக்காத
சிவப்பால் நீளமாக்கியுள்ளான்.

பலகாலம் முன்பு ஒட்டிக் கிடந்த
அவனது வயிறு
அண்மையில் கிடைத்த
பஞ்சுப்பொதியால் தொப்பையாகியுள்ளது.

உங்களுக்குத் தெரியுமா?
உண்மையில் அவன் கோமாளியே அல்ல
நம்மைவிட மிகமிகச் சாதாரணன்.

அவனது உடை
அவனது நடை
அவனது உரை
அனைத்துமே நம்மிடம் களவாடியவை.

நிற்கும் மேடை
வட்டவடிவ ஒளிச்சிதறல்கள்
பின்னணி இசை
மறையத் தோதான திரைச்சீலைகள்
அடுத்தடுத்த காட்சிகளுக்கு
அவனைத் தயார்படுத்துகின்றன.

பார்க்கத் தவறியவர்களுக்காகவே
மீண்டும் மீண்டும்
மறுஒளிபரப்பு செய்யப்படுகின்றன
அவன் குசும்புகளும் சேட்டைகளும்.

நம் பொழுதுகளை விரயமாக்கிய கோமாளி
விடைபெறும் நேரம் வந்துவிட்டது...
எழுந்து நின்று கைதட்டலாமே?

~ மா. காளிதாஸ்

ஆதிரன்



# வெற்றியின் பரிமாணமும் பரிநாமமும்

அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை. (659)

நண்பர்களே.. குறிச்சொற்கள் பகுதி 'குலதெய்வங்கள்' பற்றிய சிறு சிந்தனையுடன் முடிகிறது. வானவில் வண்ண மின்னல் தொடரின் முதல் அத்தியாயத்தில் முன்னுரையாகச் சொன்னதைச் சுருக்கமாக இங்கு தருகிறேன்.

"வெற்றி என்பதுதான் வாழ்வின் குறிக்கோள் என்ற ஒரு பொதுவான கருதுகோள் மக்களிடையே இருக்கிறது. போலவே, ஏன் வெல்ல வேண்டும், யாரை வெல்ல வேண்டும், வெற்றியின் விளைவுகள் என்ன என்பது போன்ற துணைக் கேள்விகள் இதில் உள்ளடங்கியிருக்கின்றன. ஒட்டுமொத்தமாக இவற்றைப் புரிந்துகொள்ள நமக்குத் தேவை சமுதாயம் பற்றிய சரியான அடிப்படை அறிவு. (சரியான அறிவு என்றால் என்ன என்பது மற்றொரு துணைக் கேள்வி. இந்தக் கேள்விக்கு அனேகமாக இந்தத் தொடர் முடியும்போது உங்களுக்கு ஒரு பதில் கிடைக்கலாம்). இரண்டாவதாக வரலாறு, இதில் மனிதர்களாகிய நாம் யார் என்கிற வரலாற்று அறிவு அடிப்படையானது. சுவரிருந்தால்தான் சித்திரம் என்பது போலச் சமுதாயம் பற்றிய ஒட்டுமொத்தமானதொரு அடிப்படை அறிவு இருந்தால்தான் வெற்றி என்பதைப் பற்றிய சிந்தனைக்குள் நம்மால் போக முடியும். வாழ்வின் இயங்கு வெளியான மனித சமுதாயம் பற்றி விரிவாக தெரிந்துகொள்ளும் வழிமுறையை இந்தத் தொடரில் என்னால் இயன்றவரை கூற முயல்வேன். மூன்றாவதாக

பொறுப்புணர்வு. மனித சமுதாயம் பொறுப்புணர்வற்ற ஒரு மண்ணாந்தைச் சமூகமாக, கற்பனை செய்யமுடியாத வேகத்தில் மாற்றியமைக்கப்பட்டு வருகிறது. பொறுப்புணர்வு பற்றிய வரலாறு மற்றும் உளவியல் அடிப்படையிலான புரிதல் இருந்தால் மட்டுமே மேற்சொன்ன வரலாறு, வெற்றி ஆகியவற்றின் முழுமையான வீச்சை நாம் புரிந்துகொள்ள முடியும். எனவே என்னைப் பொறுத்தவரை பொறுப்புணர்வே அனைத்திற்குமான அடிப்படை.”

இந்த முன்னுரையின் சுருக்கத்தினூடாக இந்தத் தொடரின் அடுத்த பகுதியாக ‘வெற்றி’ என்பதின் கருத்தாக்கத்தைச் சற்றே ஆழமாக ஆய்வு செய்து எழுதுகிறேன். இது தனித் தொடராக இருக்கும். ஆகவே, நண்பர்களே.. வெற்றி என்கிற புலத்தைப் பகுத்தாய்வது என்பது ‘வெற்றி’ குறித்த விரிவான புரிதலுக்கு இட்டுச் செல்கிறது எனப் புரிந்துகொள்ளலாம். இந்தப் பகுப்பாய்வு மனித வாழ்வின் சாராம்சத்தை அடிப்படையாகப் புரிந்துகொள்வதற்கும் உதவுகிறது. வெற்றியின் கூறுகள் பல்வேறு தத்துவ மரபுகள், நெறிமுறை கட்டமைப்புகள் மற்றும் கலாச்சாரச் சூழல்களில் மாறுபடும் ஒரு பரந்த கருத்தாக்கத்தையும், வெற்றியின் தன்மை, பொருள் மற்றும் தாக்கங்களையும் உள்ளடக்கியது.

‘வெற்றி’ குறித்த பகுப்பாய்வு அதன் பொறுப்புகள், இருத்தலியல் மற்றும் நடைமுறைப் பரிமாணங்கள் பற்றிய கேள்விகளுக்குப் பதிலளிக்க முயல்கிறது. தனிப்பட்ட சாதனை, கூட்டு வெற்றி, போட்டியின் நெறிமுறைகள் மற்றும் வெற்றியின் விளைவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் சமூக அறிவியலாளர்கள் வெற்றியை ஆய்வு செய்துள்ளனர். வெற்றியை அடைவதற்கான வழிமுறைகள், வெற்றி அல்லது தோல்வியின் உளவியல் தாக்கம் மற்றும் வெற்றியின் மதிப்பு பற்றிய கேள்விகளை வெற்றி குறித்த இந்த ஆய்வு எழுப்புகிறது.

இந்த ஆய்வை முதலில் தத்துவப் பார்வையிலிருந்து தொடங்கலாம்:

1. **வெற்றி ஒரு நெறிமுறை தடுமாற்றம் (Ethical Dilemma):** வெற்றிக்கான செயல்பாடுகளுக்கும் அதன் எதிர்வினைகளுக்கும் இடையான குழப்பமான தடுமாற்றம் என்பது ஒரு தவிர்க்கவியலாத இயக்கமாக இருக்கிறது. வெற்றிக்கான வழிமுறைகள் சமூகப்பார்வையில் - அதை அடைய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் - பொதுவான நிலையை நியாயப்படுத்துகின்றனவா? ஒரு ‘வெற்றி’ அதிக மகிழ்ச்சி அல்லது நன்மையை விளைவித்தால், அந்த வழிமுறைகள் நியாயமானவை என்று ஒருசாராரும், என்ன இருந்தாலும் புறவயமான மற்றும் அகவயமான எதிர் விளைவுகளைப் பொருட்படுத்தாமல் இருப்பது ‘இயல்பாகவே தவறு’ என்று வேறு சிலரும் விவாதிக்கிறார்கள். போலவே, அரசியல் அடிப்படையில் குறிப்பாக வன்முறை மற்றும் போர் வகைப்பாடுகளில் உருவாக்கப்பட்டிருக்கும் நெறிமுறைகளுடன் வெற்றியின் செயல்முறைகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. போருக்குச் செல்வது தார்மீக ரீதியாக நியாயமான சூழ்நிலைகள் மற்றும் வெற்றியைப் பின்தொடர்வதற்கான வழிமுறைகளைக் கையாள்கிறது. பரந்த தார்மீக விதிகளின் பின்னணியில் வெற்றியை அடைவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விகிதாசாரமாகவும் நியாயமானதாகவும் உள்ளனவா என்பது முக்கியமான கேள்வி.
2. **வெற்றி என்பது ஒரு இருத்தலியல் பிரச்சனை (Existential issues):** வெற்றி என்பது தனிநபரின் சுய அடையாளப் போராட்டத்தின் ஒரு பகுதியாகப் பார்க்கப்படுகிறது. வெற்றி என்பது வெளிப்புற வெற்றி மட்டுமல்ல, தனிநபர்கள் தங்கள் சொந்த மதிப்புகள் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ப வாழ்வதற்கான தடைகளைக் கடப்பது என்று புரிந்துகொள்ள முடியும். இந்த உள்ளார்ந்த

வெற்றி உணர்வு தனிப்பட்ட சுதந்திரம் மற்றும் சுயஉணர்தலுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. மேலும், வெற்றி என்பது வாழ்க்கையின் படைப்பூக்கம் மற்றும் வெல்லும் சக்தியின் வெளிப்பாடு. இது மற்றவர்களின் மீதான ஆதிக்கம் மட்டுமல்ல, ஒருவரின் சொந்த வரம்புகள், அச்சங்கள் மற்றும் தடைகள் மீதான சுய வெற்றியாகும்."மனிதனில் உள்ள பெரிய விஷயம் என்னவென்றால், அவன் ஒரு பாலம், முடிவல்ல.." என்கிறார் நீட்ஷே. மனிதன் தன்னைத்தானே முறியடிக்கும் செயல்பாட்டின் ஒரு பகுதியாக வெற்றியைப் புரிந்துகொள்கிறான். அவன் தொடர்ந்து தனது 'தற்போதைய நிலையை' மீற முற்படுகிறான்.

3. **வெற்றி மற்றும் அறநெறிமுறைகள் (Victory and Virtue Ethics):** வெற்றி, அதன் அர்த்தத்தில், வெளிப்புற வெற்றி அல்லது பிறரைத் தோற்கடிப்பது அல்ல, மாறாக ஒருவரின் குணத்தை வளர்த்து, தார்மீக மற்றும் அறிவுசார் நல்லொழுக்கத்தை அடைவதாகும் என்கிறது அரிஸ்டடிஸ் தத்துவம். நல்லொழுக்க வாழ்க்கையை உருவாக்குவதும் செழிப்புற வாழ்வதும் வெற்றியின் உட்சபட்ச வடிவமாகும். உலகின் பல்வேறு பண்பாடுகளில், குறிப்பாக தமிழர், கிரேக்க மற்றும் ரோமானிய மரபுகளில், வெற்றி என்பது மரியாதை, பெருமை மற்றும் தனிப்பட்ட சிறப்பின் கருத்துக்களுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. முக்கியமாக தமிழ் மரபு மனிதர்கள் சாதனைகளின் மூலம் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதை முன்னெடுத்தனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் மூலம் புரிந்துகொள்ள முடிகிறது. அதே போல, சாதனைகள் அதிகப்படியான லட்சியம் மற்றும் ஊழலின் செல்வாக்கிற்கும் உட்பட்டதாக இருக்கக்கூடாது என்பதையும் சமுதாய நெறிமுறையாகக் கொண்டிருந்தார்கள். உலகின் பண்டைய காலப் பண்பாடுகள் இவைகளைக் கறாராக முன்வைத்தார்களென்று சொல்ல முடியாது, என்றாலும் கணிசமான நல்லொழுக்கக் கருத்தாக்கங்கள் முகிழ்ந்தெழுந்தன என்பதைச் சொல்லமுடியும்.

4. **வெற்றியின் சமூக மற்றும் அரசியல் பார்வை:** உலகின் சிறந்த சிந்தனையாளர்களில் ஒருவரான ஹெகல்ன் இயங்கியல் தத்துவம் 'வெற்றியின் செயல்முறை,' அதன் மோதல்கள் மற்றும் தீர்வுகள்





மூலம் வரலாறு மற்றும் யதார்த்த வாழ்வின் முறையைச் சமூகத்திற்கு எடுத்துக்காட்டுகிறது என்பதை விவாதிக்கிறது. வெற்றி குறித்த மார்ஸியப் பார்வையைத் தனிப்பத்தியில் பார்க்கலாம்.

5. **வெற்றியின் உளவியல் மற்றும் இருத்தலியல் விளைவுகள்**: ஆல்பர்ட் காம்யூ உட்பட சில சிந்தனைவாதிகள் வெற்றியின் முரண்பாடான தன்மையைப் பிரதிபலித்துள்ளனர். ஒருவர் அடிக்கடி வெற்றியைத் தேடிக்கொண்டாலும், அவரை வெறுமையாகவோ அல்லது அதிருப்தியாகவோ 'வெற்றி' உணர வைக்கலாம். காம்யூவின் இருத்தலியல்வாதத்தில், வெற்றியைக் காட்டிலும் போராட்டமே வாழ்க்கையின் அர்த்தத்தைத் தருகிறது என்று புரிந்துகொள்ளலாம். வெற்றி என்பது பெரும்பாலும் எதிர்மறை உணர்விற்கு இட்டுச் செல்லும் என்பது முரண்நகை. நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்த பிறகு, தனிநபர்கள் நோக்கம் அல்லது திசையை இழக்க நேரிடலாம், சில சமயங்களில் இருத்தலியல் நெருக்கடிகள் அல்லது மனச்சோர்வு ஏற்படலாம். இலக்கை அடைவதை விட நாட்டம் மிகவும் நிறைவானது என்று விவாதிக்கிறது இந்தப் பார்வை.

6. **வெற்றி மற்றும் வலுவத்தின் (அதிகாரம்) இயக்கம்**: வெற்றி பெரும்பாலும் வலுவத்தின் நடைமுறைப் பயிற்சியுடன் பிணைக்கப்பட்டுள்ளது. வெற்றி, குறிப்பாக அரசியலில், பெரும்பாலும் 'செயல்பாட்டின் நெறிமுறைகளைக்' காட்டிலும் 'விளைவுகளால்' தீர்மானிக்கப்படுகிறது. ஒரு முடிவுதான் செயல்முறையின் தார்மீகப் பொறுப்பைத் தீர்மானிக்கிறது. போலவே, வெற்றி என்பது பெரும்பாலும் ஒரு நுட்பமான செயல்முறையாகும். இது வெளிப்படையான ஆதிக்கத்தைப் பற்றியது மட்டுமல்ல, அதிகாரம் எவ்வாறு பேச்சு, விதிமுறைகள் மற்றும் நிறுவனங்களை

வடிவமைக்கிறது என்பது பற்றியது. இந்த அர்த்தத்தில், வெற்றியாளர்கள் இலக்குகளை வெற்றி பெற்றவர்கள் மட்டுமல்ல, சமூகத்தின் கதைகளையும் விதிகளையும் கட்டுப்படுத்துபவர்கள் எனலாம்.

7. **வெற்றியின் மத மற்றும் ஆன்மீகக் கருத்துக்கள்:** பொதுவாக 'வெற்றி' ஒரு ஆன்மீகப் பரிமாணத்தை எடுக்கலாம், அங்கு உண்மையான வெற்றி என்பது ஒருவரின் ஆசைகள், அகங்காரம் மற்றும் பற்றுகள் மீது உள்ளது. எடுத்துக்காட்டாக, இந்துக்கள், ஆசைகள், அகங்காரம் மற்றும் பற்றுகள் ஆகியவற்றினைத் துறந்து மறுபிறப்பு இல்லாமல் போவது நன்றெனக் கொள்கிறார்கள். மாறாக கிருத்துவம் அனைத்தையும் துறந்து மரணித்து மறுபிறப்பு கொள்வதென்பதை நம்புகிறார்கள். புத்தமோ வாழ்வில் அனைத்தும் செய் அளவாய்ச் செய்து மடி என்கிறது. இது போன்ற பல்வேறு மதங்களும் ஆன்மீகமும் வெற்றியைப் புரிந்துகொள்கின்றது. உண்மையான வெற்றி என்பது வெளிப்புற நிகழ்வுகளைக் கட்டுப்படுத்த முயற்சிப்பதை விட ஒருவரின் உள் நிலையைக் கட்டுப்படுத்துவதில் உள்ளது. ஒரு தீர்மானமான வெற்றி மற்றவர்களைத் தோற்கடிப்பதிலோ அல்லது வெளிப்புற வெற்றியிலோ அல்ல, ஆனால் தடைகளை எதிர்கொள்வதில் நல்லொழுக்கம், அமைதி மற்றும் பகுத்தறிவு ஆகியவற்றைப் பேணுவதில் காணலாம் என்று போதிக்கிறது திருக்குறள். பல தத்துவவாதிகள் வெற்றியின் கருத்தை அது போட்டி மற்றும் ஆதிக்கத்துடன் தொடர்புடையதாக விமர்சித்துள்ளனர். பிற்பாடு சில முக்கியமான சிந்தனையாளர்களின் பார்வைகளை விவாதிக்கலாம்.

வெற்றியின் தத்துவம், வெற்றியை அடைவதற்குப் பயன்படுத்தப்படும் வழிமுறைகள் பற்றிய நெறிமுறைக் கருத்தாய்வுகள், அதன் முக்கியத்துவத்தைப் பற்றிய இருத்தலியல் பிரதிபலிப்புகள், அரசியல் மற்றும் சமூகத் தாக்கங்கள் வரை பரந்த அளவிலான விளக்கங்களைக் கொண்டுள்ளது. தார்மீக அறம், அதிகாரம், தனிப்பட்ட நிறைவு மற்றும் கூட்டு நீதி ஆகியவற்றின் அடிப்படையில் தத்துவவாதிகள் வெற்றியை ஆராய்ந்துள்ளனர். உலகம் முழுவதும் இவ்வாறான பல்வேறு முறைகளில் வெற்றி குறித்த பல்வேறு தத்துவங்களை, விளக்கங்களை, வியாக்யானங்களைச் சொல்லி வந்திருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் ஒன்றரை வரியில் முடிவு சொன்ன வள்ளுவன் தன்னிகரில்லாத பேராசானாகத் திகழ்கிறான். அவனது குறள் ஒன்றை மேலே எடுத்துக் காட்டியிருக்கிறேன். 'அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும் பிற்பயக்கும் நற்பாலவை' என்ற அற்புதமான குறள் என்ன விளக்குகிறதென்றால்; ஒருவர் பிறர் அழத் திரட்டிய வெற்றி அழஅழ அவரை விட்டுப் போய்விடும், ஒருவருக்கு நல்வழியில் வந்த வெற்றியென்றால் அதனை அவர் இழந்தாலும் மீண்டும் வந்து பயன்தரும். போலவே, வெற்றியின் கருத்தாக்கம், பெரும்பாலும் சமூகத்தின் விரும்பத்தக்க முடிவாகக் காணப்பட்டாலும், அதன் உளவியல் விளைவுகள் மற்றும் அதன் சமூகத் தாக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தடுமாற்றங்கள் இல்லாமல் இல்லை. "வெற்றியின் தருணம், அதற்காக வாழும் நேரம் மிகவும் குறுகியது, வேறு ஒன்றும் இல்லை" என்ற மார்டினா நவரொட்லொவாவின் கூற்று உளவியல் அடிப்படையில் மிக முக்கியமானது. எனவே, நாம் வெற்றி குறித்த ஆய்வின் முதல் பத்தியை ஒரு சிறு முன்னுரையாக வைத்துக்கொள்ளலாம். வெற்றி குறித்தான மிக ஆழமானதொரு பகுப்பாய்வை இனி தொடர்ந்து பார்க்கலாம். ■

நூல் விமர்சனம்

ஹரிணி




# நுட்பமான பெண்ணிய வலிகளை நிலவெனச் சுமந்திருக்கும் கூடை

**நூல் : நிலாக்கூடை**

கவிஞர் அமுதா தமிழ்நாடன் எளிமையும், மிகுஅன்பும், நுட்பமும், விசாலமும், ஆழமுமான சமூகப் பார்வை கொண்டவர். இவையே இவரது கவிதைகளின் மையமும் உள்ளடக்கமும். ஒரு பெண்ணுக்கான வெளி என்பதில் குடும்பம், உறவுகள், சிக்கலான தருணங்கள், மகிழ்வான கணங்கள், காலங்காலமாகப் புனையப்பட்டிருக்கிற பெண்ணின் மீதான கருத்தாக்கங்கள், நல்ல நட்புகளைப் பேணுதல், சக மனிதர்களை எல்லாம் கடந்து நேசித்தல், உதவுதல் என்பனவற்றைத் தன் கவிதைகள் முழுக்கப் பேசிப்போகிறார். எங்கேயும் கர்வமில்லை, அசட்டுப் பேச்சில்லை, முன்பிரகடனமும் இல்லை, நீங்களும் நானும் கடந்துகொண்டிருப்பவைதான் இவை என்பதையே ஒவ்வொரு கவிதையிலும் காட்சிப்படுத்துகிறார். நீங்கள் கவனிக்கவில்லை, கவனித்தும் என்ன காரணமோ கடந்துபோகிறீர்கள், கடந்துபோகாமல் எண்ணினாலும் அதைப் பற்றிப் பேச ஒரு தயக்கத்தையும் அச்சத்தையும் உள்ளடக்கியிருக்கிறீர்கள், நான் அதைத் தவிர்த்துப் பேசியிருக்கிறேன் என்று கவிதைகளை அடையாளப்படுத்துகிறார்.

யாரும் பேசாத விசயத்தைப் பேசவில்லை. இயல்பானது என்று நகர்ந்துபோகும் செயல்பாடுகளை, இயல்பல்ல என்று அதனுள்ளிருக்கும் சூட்சுமத்தைக் கவிஞர் வெகு எளிமையாக எடுத்துரைக்கிறார். அழகியலாக இருந்தாலும், சாதாரணமாக இருந்தாலும் எதையும் சரியாகப் புரிந்து அதன்மீதான தன்னுடைய அனுபவத்தை அழகாக எடுத்துரைப்பது இயல்பாகவே கவிஞருக்கு வாய்த்திருக்கிறது. காரணம் அதனூடாகவே நாள் முழுக்க திங்கள் முழுக்க ஆண்டுகள் முழுக்கப் பயணித்து வருவதேயாகும்.

முடிவு என்பதற்குப் பல பொருள்கள் உண்டு. மரணம், இல்லாமல் போதல், உதிர்தல், நழுவுதல், விலகுதல், விடுபடல், அறுந்துபோதல் இப்படியாக. முதல் கவிதையில்,

நதியில் உதிர்ந்த
சருகின் பயணம்
ஆரம்பமா?
முடிவா?

என்கிறார். மென்மையில் நுட்பம் கலக்கிறார். வாழ்வின் விதியைப் பேசுகிறார். சருகின் உதிர்வு என்பதும் நதியில் அதன் பயணம்

என்பதும் சருகறிந்து நடப்பதில்லை. இயற்கையின் விதியது. முடிவெனில் முடிவு. ஆரம்பமெனில் ஆரம்பம். ஒன்றின் முடிவு இன்னொன்றின் தொடக்கம். ஒன்றின் தொடக்கம் இன்னொன்றின் முடிவு. ஓர் இடத்தை நிரப்புதல், வெற்றிடமாகச் செய்தல் என்பது போலத்தான். ஏதுமற்றிருத்தல் என்பதுவே இல்லை. அங்கே வெறுமையோ, தனிமையோ, அச்சமோ, கலக்கமோ ஒன்று நிரம்பியிருக்கிறது என்றுதான் பொருள். சருகு உதிர்ந்து நிரப்பவில்லையெனில் வேறொன்று நிரம்பியிருக்கிறது என்றுதான் பொருள். சற்றே நுட்பமாய்ப் பார்க்கவேண்டும். வாழ்வென்பது தொடக்கமும் முடிவும் அல்ல. அது ஓர் இயக்கம். ஓடிக்கொண்டேயிருக்கும் நதியில் ஆங்காங்கே இறங்கி நீராடுவதைப் போன்றதுதான் யாவும்.

ஒரு பெண்ணாக இருப்பதால் பெண்ணுக்கான எதையும் வேறு கோணத்தில் பார்ப்பது என்பது கவிஞருக்கு இயல்பாயிருக்கிறது. ஆதித்துரு என்னும் கவிதை சொல்லாடலிலும் பொருண்மையிலும் வாசிப்போரைச் சற்றே இறுக்கிவைத்து அசைக்கிறது. துரு ஒன்றின் மீது உருவாவதற்குக் காலம் பிடிக்கும். கவனிக்காமல் விட்டால் துரு, பிடித்த பொருளைச் சாப்பிட்டுவிடும். உருத்தேறாது. படைப்பு மனங்கொண்ட ஒழிந்த நேரத்தில் அல்லது எல்லாவற்றையும் முடித்தமரும் நேரத்தில் வாசிக்கலாம், எழுதலாம் எனும்போது உள்ளுக்குள் படிந்திருக்கிற பெண்ணை இயக்கும் ஆதித்துரு பிடித்திருக்கும் கடமைகள் நாளைக்குமான வேலைகளுக்கு வசதியானவற்றைத் தயார் செய்யும் மனோபாவத்திற்குத் தள்ளுகிறது. யாரும் வற்புறுத்தாமல் கட்டாயப்படுத்தாமல் செய்யவைக்கும் இந்நிலைக்கு ஆதித்துருவான பழக்கங்களே காரணம் என்பதை இக்கவிதையில் வலியோடு எடுத்துரைக்கிறார். உச்சமான துயரத்தில் சிரிக்கும் ஒரு புன்னகையின் வெளிப்பாடாய் இக்கவிதை அமைகிறது.

ஒரு பெண் எப்படி இருக்கவேண்டும்? எனக் கேள்வி கேட்டு அவரே விடை கூறுகிறார்.

காலம் நடந்த பாதையை
என் காலடிக்குத்
திருப்பும்
பெண்ணியத்தின்
பெரும்பயணம் நான்..

எத்தனை அழுத்தமான ஆழமான அற்புதமான சொல்லாடல்கள் இவை. பெரும்பயணம்தான். ராபர்ட் பிராஸ்ட் சொன்னதுபோலப் பெரும்பயணம்தான். நான் எப்படி இருக்கிறேன் என்று சொல்லும்போது,

வெறுமை அப்பிக்கிடந்த
அறைக்குள்
வெற்று மௌனம்
போர்த்திக்கிடந்தது
என் தனிமை

என்கிறார். இக்கவிதையின் தொடக்கச் சொற்கள் யாவற்றிலும் நிறைய அடர்த்தியான காலத்தின் ஒரு வரலாறு கிடந்து தவிக்கிறது. பின்வரும் சொற்களில் எப்படியான வாழ்வு வேண்டுமென்கிறார்..

உறவுகளை நேசிக்காத வீடும்
நட்புகள் வாராத இல்லமும்
செங்கல் சூளை அல்லவா?
என்றும்,
பறவைகள் அண்டாத
மரம்
மழலைகளின் பாதம்
படாத கடற்கரை
வாழ்தலின் சாபமல்லவா?

என்றும் கூறுகிறார். அவ்வளவுதான் வாழ்க்கை. எளிதானது. இப்படித்தான் வாழ்ந்துவிட்டுப் போகவேண்டும். இதுபோதும் வாழ்வானது எளிமையானது அழகானது என்பதை உணர்வதற்கு என்கிறார். அழகியலில் ஓர் மழலைத் தன்மையைக் கலந்து கவிதையாக்குகிறார். இது எல்லோருக்குமான தரிசனத்தில் கலப்படமில்லாத மகிழ்வைத் தருவதாகும்.

நிலா பாப்பாவுக்கு
யார் பவுடர் பூசியது?
இப்படி
திட்டுத் திட்டாய்?

அம்மாவையும் அப்பாவையும் பாடாத ஒரு கவிஞன் அன்றும் இல்லை இன்றும் இல்லை. என்றாலும் அன்று தொடங்கி இன்றுவரை யார் அப்பா, அம்மா பற்றிக் கவிதை எழுதினாலும் அது வாசிப்பவர் அப்பாவிற்கும் அம்மாவிற்கும் பொருந்தும் உயிர்ப்பே இவருக்கும் நேர்ந்திருக்கிறது.

அம்மா உறங்கும்போது
உடலைப் போட்டுவிட்டு
பறந்துபோன உயிர்ப் பறவையை
அடைத்துவைக்க மறந்துவிட்டாள்.
எதற்கும் வளைந்து கொடுக்காத
அப்பா நொறுங்கிக்கிடக்கிறார்
அம்மாவின் புகைப்படம் முன்பு

மனங்கசிய வைக்கிறது, இச்சொற்களில் அடங்கியிருக்கும் வலி.

மனிதாபிமானம் அற்றுப்போன சூழலை விவரிக்கையில்,

மனித வாடை
மரித்துக் கிடக்கும் தெருக்களை
அச்சத்தோடு பார்க்கிறது காலம்

அப்படித்தான் இன்று ஆகிவிட்டது. எண்பது விழுக்காடு மனிதமற்ற வாழ்வே இங்கு யாருக்கும் வாழவேண்டும் என்பது கட்டாயவிதியாகச் சொல்லாமல் சொல்லப்பட்டிருக்கிறது. என்றாலும் இங்குதான் வாழவேண்டும். இதை வேண்டாமென்று ஒதுக்கிப்போகும் வாழ்வொன்று இல்லை. அப்படி இருப்பதாக உணர்ந்தால் அது வாழ்வுமில்லை.

இந்த அவஸ்தையான
வாழ்க்கையை விட்டுவிட்டு
நிம்மதியான சூன்யத்திற்குள்
வரப் பிடிக்கவில்லை

இங்கு நிம்மதியே வேருருக் கொண்டிருக்கிறது. அது சூன்யமாகவே இருக்கிறது. இருந்தாலும் அதனுள்ளே வாழும் கலையையும் கற்கவேண்டியுள்ளது என்கிறார் கவிஞர்.

மழை எப்போதும் அற்புதமானது. வாழ்வோடு ஒன்றிணைந்து நிற்பது. நீரென்பது கருவின் குழந்தைத் தருணம் தொடங்கி இடுகாட்டின் கடைசித் தருணம் வரை தேவையானது. நீரின் எந்த வடிவமும் ஒதுக்க முடியாத வாழ்வே மனித வாழ்வு. இயற்கையின் எதையும் அனுபவிக்கவேண்டியது இயல்பான வாழ்வின் அடையாளம் என்பதையும் அழகாக வெளிப்படுத்துகிறார். இதற்காகப் புதிதாகப் புனையவில்லை. சின்ன எடுத்துக்காட்டில் உணர்த்துகிறார்.

குடைபிடித்து நடக்கிறேனாம்
முணுமுணுத்துக்கொண்டே
பின் தொடர்கிறது மழை.

போதுமே. இன்னொரு பரிமாணம்..

மழையை ரசிக்க
கையூட்டு கேட்கிறது மனசு
ஒரு குவளை
தேநீர்

வாழ்க்கை வாழ்வதற்கு நிரம்பவும் எளிதானது என்பதை உணர்த்துவதற்கு ஒரு சின்ன தடங்கலையும் தீர்வையும் வெளிப்படுத்துகின்றன மேற்சுட்டிய இக்கவிதைகள்.

விடிகாலை உறக்கத்தைச்
சிக்கலாக்குகிறது
இடியாப்ப வியாபாரியின் குரல்.

வியாபாரியின் இடியாப்பச் சிக்கலுக்கான வாழ்வு உறங்கும் மனிதர்களுக்கு இடியாப்பச் சிக்கல் என்பதைக் குறிப்பிடுகிறது இக்கவிதை. சிக்கலான வாழ்வின் தீர்வுகளில் ஒன்று உறக்கம். உறங்கும்போது நாம் எல்லாவற்றையும் மறக்கிறோம் தற்காலிகமாக. ஆனால் நிரந்தரமான தீர்வுக்காக உறக்கத்தைத் தொலைக்கவேண்டியுள்ளது இடியாப்பம் விற்பவனுக்கு. அதேசமயம் உறங்குவதால் சிக்கல்கள் மறக்கப்படுமே தவிர தீர்வதில்லை. ஆகவே உறக்கம் கலைந்தேயாக வேண்டும் சிக்கல்கள் தீர என்பதைப் பின்னணியில் நிழலாகத் தொடர்புறுத்தி இக்கவிதை உணர்த்துகிறது.

ஒவ்வொரு மனித வாழ்வும் இடர்களையும் சிக்கல்களையும் மையப்படுத்தியதுதான். அது மனிதர்களைப் பொறுத்து மாறுபடும் வேறுபடும் தன்மை கொண்டது. என்றாலும் இவற்றை வாழவேண்டிய கட்டாயம் விதிக்கப்பட்ட வாழ்வு. ஒவ்வொரு வாழ்விலும் பின்னணியாக இயல்புகளே நிற்கின்றன. இந்த

இயல்புத் தன்மைகளைக் கவிதைகளில் இருத்தி அவற்றின் புரிதலுக்காக இயற்கையின் பல்வேறு அம்சங்களை உத்தியாகப் பயன்படுத்துகிறார் கவிஞர், இத்தொகுப்பு முழுமையும். அதே சமயம் இவற்றைத் தெரிந்தும் அல்லது அறிந்தும் நகர்ந்துபோகிறவர்களுக்காகக் கொஞ்சம் சிரத்தையுடன் இக்கவிதைகளைப் புனைந்துள்ளார். ஒவ்வொன்றின் தீர்வும் ஒவ்வொரு வகையானது என்பதை உணர்ந்திருக்கும் கவிஞர் அதைச் சில கவிதைகளில் வெளிப்படுத்தினாலும் அன்பு ஒன்றே எல்லாவற்றுக்கும் இறுதியானது தீர்வானது என்பதையும் அழுத்தமாக எளிமையாக உரைப்பது இத்தொகுப்பின் சிறப்பு. ஒரு பெண்ணாக நின்று அவற்றின் வலிகளை உள்ளடக்கி அவற்றைப் பார்க்கும் பொருட்களிலும் தருணங்களிலும் வெளிப்படுத்தும் வல்லமை மிக்க கவிஞராக சகோதரி அமுதா தமிழ்நாடன் நிற்கிறார்.

தன்னுடைய எதிர்பார்ப்பை நம்பிக்கையாகத் தன் மகளிடம் சமர்ப்பிக்கிறார்.

விடியப்போகும்
நாளைகளிடம்
என் மகளின் சாயல்

என்கிறார். எல்லாவற்றையும் தரிசிக்கும்போது அதன் உண்மை வலிகள் நிறைந்த வலிமையாகவே இருக்கும். என்றாலும் அவற்றை எதிர்கொண்டு நிற்பதற்குக் கவிதையும் கற்பனையும் உதவும் என்றும் கூறுகிறார்.

கவலைகளிடமிருந்து
தப்பிக்கவும்
பயம்சூழ்உலகை
புறந்தள்ளவும்
இப்படியான கற்பனைக்குள்
அவ்வப்போது பதுங்குவது தவிர
வேறு வழி தெரியவில்லை

எனும்போது இன்னும் பயணிக்கவேண்டிய வாழ்வின் இலக்கை எடுத்துக் கூறுகிறார். இன்னும் இவ்வுலகு பெண்களுக்கான வலியைப் புரிந்துகொள்ளும் சூழலில் வலுப்படவில்லை என்பதையே வேறு வழி தெரியவில்லை என்று அங்கலாய்க்கிறார். எப்போதும் நம்பிக்கைகளும் துணிச்சல்களும் வலுவாக இருந்தாலும் அதனுள்ளும் வலுவற்ற சிலவற்றைத் தவிர்க்கமுடியாது. அது ஆதித்துருவின் மேலாதிக்கம் என்பதைத் தொடர்ச்சியில் உணர்த்துகிறார். இத்தகைய சூழலில்தான்,

எத்தனை
கவனமெடுத்தாலும்
ருசி ஏற மறுக்கும்
உணவு

என்கிறார். வேறு வழி தெரியவில்லை இவ்வாழ்வில், என்றாலும் வாழ்வதற்கு வந்துவிட்டோம். இனி இறப்பு மட்டுமே என்பது உறுதியாகிவிட்ட நிலையில்,

முதலில் இதயத்தை
எடைக் குறைவாய் வைத்துக்கொள்
உனை லேசாக உணர்வாய்

என்கிறார். வேறு வழியில்லை, இதுதான் வழி என்பதான ஆறுதல் இவை. இதுதான் ஒவ்வொருவருக்கான போதிச் சொல்.

நம்மை நாமே
ஒருசேரக்
கொண்டாடித் தீர்க்கலாம்
காலம் கனியும்
அதுவரை காத்திருப்போம்

காலம் கனியும். இந்த இரு சொற்களின் நம்பிக்கையில்தான் ஒட்டுமொத்த உலகமே அவரவர் இலக்கில் காட்சிகொண்டிருக்கிறது. வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அதுவரை காத்திருப்போம். காத்திருக்கவேண்டியதுதான். பிறப்புக்காகக் காத்திருந்தோம். இறப்புக்காகக் காத்திருக்கிறோம். வாழ்தலுக்காகக் காத்திருக்கிறோம். வாழ்வின் ஒவ்வொரு தருணத்திற்கும் காத்திருக்கிறோம். காத்துக்கொண்டே கடந்துபோகும் வாழ்வை வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

இயல்பு, எதார்த்தம், வலிகள், வாழ்தலின் எளிமை, இருப்பதை ஏற்றல், ஏற்றதைக் கொண்டாடுதல், கொண்டாடியதை வாழ்தலின் கணக்கில் சேர்த்தல்.. இவை யாவற்றையும் அன்பின் பெருவழியாக உணர்தலே இங்கு நமது மிச்சம் என்பதை இத்தொகுப்பு சொல்லாமல் சொல்கிறது.

■

## தமிழ் நிலத்து வீர மங்கையர்கள்

### தொடர் - 6

தி.கலையரசி

# குயிலி



முந்தைய பகுதியில் வேலு நாச்சியாரின் வரலாறு குறித்துப் பார்த்தோம். அதில் குயிலி எனும் வீரம் மிக்க பெண்ணின் பங்களிப்பு பற்றி எழுதியிருந்தேன். வேலு நாச்சியாரை நினைக்கும்போது நிச்சயமாகக் குயிலியின் வரலாற்றை மறக்கவும் முடியாது; மறைக்கவும் முடியாது. வேலு நாச்சியாரின் போர்ப்படையில் வாள் படை, வளரிப்படை மற்றும் பெண்கள் படை மூன்றும் முக்கியமானவை. வாள் படைக்குத் தலைவராக சின்ன மருதுவும் வளரிப்படைக்குத் தலைமையாக பெரிய மருதுவும் இருந்தார்கள். மூன்றாவதான பெண்கள் படைக்குத் தலைவியாய் இருந்தவர் குயிலி.

ஏற்கெனவே உடையாள் என்ற பெண் வேலு நாச்சியாரை ஆங்கிலேயரிடம் காட்டிக்கொடுக்க மறுத்ததால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டவள் என்பதை அறிந்திருந்தோம். அவள் நினைவாக பெண்கள் படைக்கு உடையாள் படை எனப் பெயரிடப்பட்டது. வேலு நாச்சியாரின் போர் பயிற்சிக்கான ஆசிரியர்களில் மிகவும் முக்கியமானவர் வெற்றிவேலு எனும் சிலம்பு வாத்தியார். வேலு நாச்சியாரைச் சிறுவயதிலிருந்தே அறிந்திருந்த அவர், நாச்சியாருக்குப் பாதுகாவலராக இருந்தார். அதேபோல் தன் கணவரைப் பறிகொடுத்த பிறகு திண்டுக்கல் விருப்பாச்சி பாளையத்தில் தங்கி இருந்து படை திரட்டிய காலகட்டத்தில் தன் மெய்க்காப்பாளராக வேலு நாச்சியார் சிலம்பு வாத்தியார் வெற்றி வேலுவையே நியமித்திருந்தார். இந்த அளவிற்கு நம்பிக்கைக்குரியவராக இருந்த சிலம்பு வாத்தியார் எதிரிகளால் ஒரு கட்டத்தில் விலை பேசப்பட்டார். வேலுவின் திட்டங்களை அன்றாட நிகழ்வுகளை எதிரிகளுக்குக் காட்டிக்கொடுத்து வந்தார்.

ஒருநாள் குயிலியின் தாயார் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் குயிலி சிவகங்கைக்குச் செல்ல ஆயத்தமானார். இதைத் தெரிந்துகொண்ட வெற்றிவேலு அவளிடம், “பெண்ணே உனக்கு எழுத, படிக்கத் தெரியுமா?” என்று கேட்டார். குயிலி எழுத, படிக்கத் தெரிந்திருந்தும் ‘தெரியாது’ எனக் கூறினார். அதை நம்பிச் சிலம்பு வாத்தியார் ஒரு கடிதத்தை அவளிடம் கொடுத்துச்

சிவகங்கை அரண்மனைக்கு அருகில் இருக்கும் மல்லாரிராயன் என்பவரிடம் ஒப்படைக்கச் சொன்னார். பிறகு குயிலி அதைப் படித்துப் பார்த்தபோது மிகவும் அதிர்ச்சி அடைந்தார். வேலு நாச்சியாரின் அன்றாட அசைவுகளையும் அவரைக் கொல்வதற்கு எதிரிகள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பற்றியும் சிலம்பு வாத்தியார் அதில் எழுதியிருந்தார். குயிலியின் உளவு பார்க்கும் திறமை இந்த இடத்தில் மிகவும் கவனிக்கத்தக்கதாகும்.

நம்பிக்கைக்குரியவராக இருந்த வெற்றிவேலு இராணியின் காலைச் சுற்றி இருந்த நச்சுப் பாம்பு என்பதை உணர்ந்த குயிலி விரைந்து சென்று அவரைப் படுகொலை செய்தார். சம்பவம் அறிந்த வேலு நாச்சியார் குயிலியின் செயலைக் கண்டு மிகவும் நெகிழ்ந்தார். கூட்டத்தில் வெறும் சாதாரணப் பெண்ணாகப் பார்க்கப்பட்ட குயிலி அன்றைய தினத்திலிருந்து ராணியின் மெய்க்காப்பாளர் ஆனார்.

இத்தகைய சூழலில் சிவகங்கைச் சீமையில் ஆற்காடு நவாப்பும் ஆங்கிலேயரின் கைக்கூலிகளான மல்லாரிராயனும், அவன் தம்பி ரங்கராயனும் குயிலியை மையப்படுத்திச் சாதிவெறிக்குத் தூபமிட்டுக் கொண்டிருந்தனர். அதாவது ஆதிக்க ஜாதியைச் சார்ந்த சிலம்பு வாத்தியாரை ஒடுக்கப்பட்ட பெண் குயிலி குத்திக் கொலை செய்திருக்கிறார். இதனால் சாதி கௌரவம் என்ன ஆவது என்ற நச்சுச் சிந்தனையை மக்கள் மத்தியில் விதைக்கத் தயாராகிக்கொண்டிருந்தார்கள்.

இவற்றைச் சிறிதும் பொருட்படுத்தாத வேலு நாச்சியார் குயிலியைப் பெண்கள் படைப் பிரிவுக்குத் தலைவியாக்கி அழகு பார்த்தாள். சில ஆண்டுகள் கழித்து ஆங்கிலேயரை எதிர்த்துப் போர் செய்யத் தேவையான தளவாடங்கள் வந்து சேர்ந்தன. பீரங்கி வண்டிகள், நூற்றுக்கணக்கான துப்பாக்கிகள் திப்பு சுல்தானால் வேலு நாச்சியாரிடம் ஒப்படைக்கப்பட்டன. 1780ஆம் ஆண்டில் சிவகங்கையை நோக்கி விருப்பாச்சி பாளையத்திலிருந்து வேலு நாச்சியாரின் படை புறப்பட்டது. உடையாள் பெண் படைக்குத் தலைமை ஏற்றுக் குயிலி கம்பீரமாக வந்து சேர்ந்தார்.

மல்லாரிராயன் மதுரை கோச்சடையில் வேலுநாச்சியாரின் படையை எதிர்த்து நின்றான். அந்தப் போரிலேயே அவன் குத்திக் கொலை செய்யப்பட்டான். வேலு நாச்சியாரின் படை வீர நடை போட்டது. பிறகு திருபுவனத்தில் மல்லாரிராயனின் தம்பி ரங்கராயன் எதிர்த்து நின்றான். மருது சகோதரர்கள் அவனைக் கொன்றனர். அடுத்ததாக வெள்ளைக்கார அதிகாரிகள் மார்ட்டின்ஸ், பிரைட்டன் மற்றும் நவாபின் படைத்தளபதி பூரிகான் ஆகியோர் தலைமையில் மானாமதுரையில் மாபெரும் படை எதிர்த்து நின்றது. வேலு நாச்சியாரின் பீரங்கிப் படை அதனை விரட்டி அடித்தது.

வேலு நாச்சியாரின் படையினர் சிவகங்கைச் சீமையில் வெற்றி நடை போட்டனர். ஆனால் அங்குதான் யாரும் எதிர்பாராத ஆபத்து காத்துக்கொண்டிருந்தது. ஆங்கிலத் தளபதி பாஞ்சோர் காளையார் கோவிலிலிருந்து சிவகங்கை அரண்மனை வரையிலும் அடிக்கு ஒரு போர் வீரனை நிறுத்தி இருந்தான். அனைவரது கைகளும் துப்பாக்கி ஏந்தி இருந்தன. பீரங்கிகளும் அரண்மனையைச் சுற்றி நிறுத்தப்பட்டிருந்தன. ஆயிரக்கணக்கான துப்பாக்கிகளும் வெடி பொருட்களும் அரண்மனைக் கிடங்கில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன. இத்தகைய போராட்டங்கள் இருந்தும் சிறிது கூட பின்வாங்கவில்லை வேலு நாச்சியாரின் படைகள். போரில் பின்வாங்கும் முடிவை அவர்கள் யாரும் யோசிக்கக் கூட இல்லை. ஆனால் ஆங்கிலேயரை முழுவதுமாக எப்படி முறியடிப்பது என்று குழம்பிக்கொண்டிருந்தார்கள். அப்போது குயிலி மகாராணியிடம் ஒரு யோசனை சொன்னாள். “நாளை விஜயதசமி திருவிழா. சிவகங்கையில் உள்ள ராஜராஜேஸ்வரி கோயிலில் பெண்கள் மட்டும் வழிபாட்டிற்காக அழைக்கப்படுவார்கள். அதை நமக்குச்

சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆங்கிலேயர்கள் நம்மை விட நவீன ஆயுதங்களை வைத்திருப்பதுதான் அவர்களுக்குப் பலம். அந்தப் பலம்தான் நம்மைப் பலவீனமாகவும் வைத்திருக்கிறது. அந்த ஆயுதக் கிடங்கை நாம் அழித்துவிட்டால் வென்றுவிடலாம்" என்று யோசனை சொன்னாள். அந்த யோசனையை அனைவரும் உற்சாகத்துடன் வரவேற்றனர். யார் அதைச் செய்வது எப்போது செய்வது என்று கேள்விகளும் அலைமோதின.

குயிலிக்கு எந்த குழப்பமும் ஏற்படவில்லை. அந்தப் பணியை அவள் மனதார ஏற்றுக்கொண்டாள். குயிலியின் தலைமையிலான உடையாள் பெண்கள் படை மறுநாள் ராஜராஜேஸ்வரி அம்மன் கோவிலுக்குள் நுழைந்தது. ஆயிரக்கணக்கான பெண்கள் கைகளில் ஆயுதங்களோடும் உள்ளத்தில் உறுதியோடும் வேலு நாச்சியாருடன் கோவிலுக்குள் நுழைந்தனர். கடுமையான போர் மூண்டது. அரண்மனைக்கு வெளியிலிருந்து மருது சகோதரர்கள் தாக்குதலைத் தொடங்கினார்கள். உள்ளிருந்து வேலுநாச்சியாரும் குயிலியும் தாக்குதலை நடத்தினார்கள். ஆங்கிலத் தளபதி பாஞ் சோர் நிலைகுலைந்து நின்றான். ஆனால் ஆங்கிலேயரின் நவீன ஆயுதங்களுக்கு முன்பு வேலுநாச்சியாரின் படை தாக்குப் பிடிக்க முடியவில்லை. இதனால் நாச்சியாரின் வீரர்கள் எண்ணிக்கை குறைய ஆரம்பித்தது. தோல்வியின் அருகில் சுதேசப்படை என்ன செய்வது எனச் சிந்திக்க முடியாத சூழலில் அந்தச் சம்பவம் நடந்தேறியது.


ஓர் உருவம் தன் உடலில் நிறைய சேலைகளைச் சுற்றிக்கொண்டு எரி நெய்யைத் தன் உடல் முழுவதும் ஊற்றிக்கொண்டு அரண்மனை ஆயுதக் கிடங்கில் தீப்பிழம்பாய்க் குதித்தது. நொடி கூட தாமதம் இல்லாமல் ஆயுதக் கிடங்கு வெடித்துச் சிதறியது. விழுந்த உடலின் சாம்பல் கூட மிஞ் சவில்லை. வேலு நாச்சியாரின் வெற்றிக்கு இந்த ஆயுதக் கிடங்கின் அழிப்பே மிக முக்கிய அடிப்படையாக இருந்தது. பல்லாயிரக்கணக்கானோர் மண்ணில் செத்து மடிந்தார்கள். ஆங்கிலத் தளபதி பாஞ்சோர் வேலு நாச்சியாரிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டு புதுக்கோட்டைக்கு ஓடினான். வேலுநாச்சியார் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. வெற்றியின் கொண்டாட்டத்தில் எல்லோரும் பங்கேற்று மகிழ்ந்திருந்தனர். அப்பொழுது குயிலியைத் தேடும்போது அவளைக் காணவில்லை. பிறகுதான் உண்மை புரிந்தது. அந்த ஆயுதக் கிடங்கில் குதித்தது தீரம் மிகுந்த அந்த வீராங்கனை குயிலி என்று உணர்ந்தார்கள்.

இழந்த நாட்டை மீட்டெடுத்த வேலு நாச்சியாருக்கு மிகப்பெரிய துணையாய் நின்ற குயிலியின் வரலாறு வியப்புக்குரியது. தனது உதிரம் சுண்டிய உணர்வுடன் அந்தத் தியாகிக்கு வீரவணக்கம் செய்தாள் வேலு நாச்சியார்.

அரசியல் நுண்ணுணர்வு கொண்ட தமிழ்ப்பெண்கள் இந்த மண்ணில் வாழ்ந்ததற்குச் சான்றாக குயிலி போல் ஏராளமானவர்களைச் சொல்லிக்கொண்டே போகலாம். ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் ஒற்றர்களாகவும், போர்ப்படைத் தளபதிகளாகவும் பொறுப்பேற்று இரத்தம் சிந்தியுள்ளனர். வாள் படை, வளரிப்படை, பெண்கள் படை, வெட்டரிவாள் படை, வீச்சரிவாள் படை, கவுண்கல் படை, ஒற்றர் படை என அனைத்திலும் கம்பீரமாக வலம் வந்தவர்கள் இந்த நிலத்தின் பெண்கள் என்ற வரலாற்றை யாராலும் மறைக்க முடியாது.

இந்தப் பட்டியலில் இடம்பெறும் குயிலி, மனிதர்களைப் படிக்கத் தெரிந்தவள்; வீரத்தையும் விவேகத்தையும் படிக்கத் தெரிந்தவள். வெற்றிகளைக் குவிக்க இவற்றை விட வேறென்ன வேண்டும் ஒரு படைத்தளபதிக்கு? சுதந்திரப் போரில் முதல் பெண் மனித வெடிகுண்டு அல்லது முதல் பெண் தற்கொலைப் போராளி என்ற முகவரி குயிலிக்கு அளிக்கப்பட்டிருப்பது தமிழுக்கான வீர அடையாளம். ■

# கவிச்சித்திரம்




அந்தக் கடவுளின் பெண்பால் நீ
ஆண்டாளின் ஆண்பால் நான்

அவள் காதலி
நான் காதலன்

அவளுக்கு கண்ணன்
எனக்கோ அம்மு நீ

அவள் பாடியது திருப்பாவை
நான் பாடுவதும் பாவையைத்தான்

மற்றபடி
இருவரின் தவமும்
காதலின் தரிசனம் வேண்டியே

தவம் மெச்சி
அகம் மகிழ்ந்த கடவுள்
வீடியோ காலில் வந்த போது
தொடர்பில் ஏதோ சிக்கல்

நொடிகளில் துண்டித்த
இணைப்பு சரியாகும் முன்
வேறு வேலைகள் கடவுளுக்கு
கடவுளல்லவா
ஆயிரம் வேலைகள் இருக்கும்
பக்தனுக்கு
தவமொன்றுதான் வேலை

அம்மு!
இன்றழைத்த வீடியோ காலில்
பதினைந்து நொடிகள் மட்டுமே
தரிசனம் தந்த கடவுள் நீ
அதிலும் சில நொடிகள்
இமைத்துத் தொலைத்துவிட்டு
தவத்தோடே வாழும் பக்தன் நான்

~ மணி அமரன்

■

# கவிச்சித்திரம்




## பாரதியும் யானையும்

மகாகவி என்று தெரிந்திருந்தால்
மண்டியிட்டிருக்கும்
ஒரு சகாப்தம் நிறைய
முற்றுப்புள்ளி வேண்டுமே
கிறிஸ்துவுக்கு யூதாஸ்
காந்திக்கு கோட்சே
பாரதிக்கு யானை
வனத்துக்குள் பிளிறும்போது
துண்டு துண்டாகக் கேட்கும்
தேங்கிக் கிடந்த கவிதையின் கதறல்
மிச்சக் கவிதைகளைக்
கொன்று குவித்துவிட்டு
ஆசீர்வதிக்கும் யானைகளைப்
பார்க்கும்போதெல்லாம்
சாவின் பக்கம் திருப்பிவிட்ட
சாமர்த்தியம் நொந்து
காடு கடத்திய தண்டனை சரிதான்
எனத் தோன்றும்
குரூரம் களைய முடிவதில்லை
காரணம் குற்ற உணர்வில்லா
யானையைவிட எனக்கு
பாரதி பிடிக்கும்...!

~

## பெண்ணாகும் பிரியங்கள்

உனக்கான என் பிரத்யேகப் பக்கங்கள்
இன்னும் நிரப்பப்படாமல்
அப்படியேதான் இருக்கிறது
வாழ்க்கை பற்றிப் பேசிப் பேசி
எப்படி விழுந்ததோ நேச விதை
சேமித்த எல்லாம் செம்பவளங்கள்
நீ நிற்பது சிகரமென்றால்
நான் கடலாகி எப்படி இணைந்தேனோ
உன் கரடு முரடு தாங்கும் நீர்வீழ்ச்சி
கொம்பு வைத்துத் திரியும் சொற்களோடு
வம்பிழுக்கும் வானம்பாடி
எப்படியோ போ எனக்கு வானம் நீ
பார் என் வருத்தமான வார்த்தைகளும்
வரிக்கு வரி பிரியம் பேசுவதை...!

~

~ கிறிஸ்டினா அருள்மொழி

■

வாசிப்பனுபவம்

விஜயராணி மீனாட்சி




# வாழ்வியல் தடங்களான கதைகள்

**நூல் : அப்பாவின் வாசம்** *(சிறுகதைத் தொகுப்பு)*

இதுவரை கவிதை நூல்களை வெளியிட்டுவந்த நூலாசிரியர் தெ.சு.கவுதமன் அவர்களின் முதல் சிறுகதைத் தொகுப்பு இந்நூல்.

தொகுப்பில் இடம்பெற்றுள்ள பத்தொன்பது கதைகளுமே அன்றாடம் நாம் கண்டு கடக்கும் வாழ்வியல் தடங்களும் தடயங்களுமே. நிகழ்கால அவலங்களையும் சூழல்களையும் அது அரசானாலும் அதிகாரியானாலும் வெகுஜன மக்களானாலும் சரி.. சுடச்சுடச் சுட்டிக்காட்டும் தைரியம் அவரது தகப்பனார் தோழர் சுந்தரமகாலிங்கம் அவர்களிடமிருந்து வந்ததாகக் கருதுகிறேன்.

மியாவ் என்ற சிறுகதையில் ஏசி பெட்டிக்கு அருகில் தாயைக் காணாமல் கத்தியபடி இருந்த பூனைக்குட்டிகளை அப்பார்ட்மெண்ட்டில் உள்ள செக்யூரிட்டியோ கார்ப்பரேஷன்காரர்களோ ப்ளூ கிராஸ் ஆட்களோ காப்பாற்ற மறுக்கிறார்கள். எல்லோருமே தங்களுடைய கடமையைச் செய்யத் தவறி உயிர்நேயமற்று இருந்ததை இந்தக் கதை மூலமாக உணர்த்துகிறார்.

வீட்டைக் கட்டிப் பார் கல்யாணத்தைப் பண்ணிப் பார் என்ற வரிகளுக்கு ஏற்ப வீட்டின் பின்புறத்துக் காலிமனையில் ஒரே ஒரு பாத்ரூம் கட்டுவதற்குள் படும் அவஸ்தையையும் மேஸ்திரியின் தகிடுதத்தத்தையும் மேஸ்திரி கதையில் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார்.

இப்போதெல்லாம் பெருநகரங்களில் கட்டிட வேலைக்கு மேஸ்திரிகள் வடஇந்தியர்களையே பெரும்பாலும் தேர்ந்தெடுக்கிறார்கள். ஏனெனில் குறைந்த கூலிக்கு அதிக வேலை வாங்கும் அநியாயம் நிகழ்ந்தேறுகிறது. வேறுவழியில்லாமல் வடஇந்தியப்

புலம்பெயர் மக்கள் எந்த வேலையானாலும் வயிற்றுப்பாட்டுக்குச் செய்யத் தயாராய் இருப்பதே காரணம். இந்தக் கதையிலும் வேலைக்கு ஆள் எடுப்பதில் தன்னுடைய கொள்கை என்று ஒன்றைச் சொல்லி அதற்கு ஏறுமாறாக மேஸ்திரி நடந்துகொள்ளும் ஏமாற்றுத்தனத்தை அறியமுடிகிறது. இவையெல்லாம் அரசாங்கத்திற்குத் தெரியாமலா இருக்கும். அரசே இந்தப் பணிகளையும் அதற்கான கூலியையும் ஒழுங்குபடுத்தலாமே.

அந்தக் காலத்து ஆசிரியர் மாணவர்க்கு இடையேயான மரியாதையும் உறவும் சம்முவம் வாத்தியார் கதையிலும் இறுதி யாத்திரை கதையிலும் நேர்மை தவறாத மொழியில் அழகாகச் சொல்லப்பட்டுள்ளன.

சம்முவம் வாத்தியாரின் கண்டிப்பும் கரிசனமும் பள்ளியையே உயர்த்தினாலும் வீடு மதிக்காத துயரம் ஒரு பக்கம் இருக்கிறது. அச்சூழ்நிலையிலும் அவருக்குள் இருந்த கனிவு ததும்பும் மனம் கனிந்தே இருக்கிறது.

மற்றுமொரு கதையில் தான் பயின்ற ஆசிரியரின் இறுதி யாத்திரைக்குப் போனால் அங்கே ஜாதிக்குள் பிரச்சனையும் கடன் வசூல் செய்வதுமாக இறந்தவருக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யவிடாமல் தடுக்கும் கேவலம் அரங்கேறுகிறது. இதையெல்லாம் காணப் பொறுக்காத அந்த முன்னாள் மாணவன் ஒரு கட்டத்தில் பொறுமையிழந்து தானே கடனைத் தீர்ப்பதாகச் சொல்வது ஆசிரியர் மீதிருந்த அதீத அன்பும் மரியாதையும் அன்றி வேறில்லை.

ஆன்ட்ராய்டு போன் வந்த பிறகு பேசவும் விவாதிக்கவும் பெறவும் இழக்கவும் கற்கவும் என எத்தனையோ வசதிகள் வந்துவிட்டன. பேஸ்புக் பிரபலம் கதை நல்ல பகடி.

அதே போல சாட்டிங் லேடி கதையும்... மனைவியை இழந்த ஒருவரின் மனத்தவிப்பையும் சலனத்தையும் சபலத்தையும் வார்த்தைகளில் தெளிவாகக் கையாண்டிருக்கிறார் நூலாசிரியர். பெண்ணுக்குப் பெண்தான் எதிரி என்பதை ஒரு சாட்டில் பதிவு செய்திருப்பார். சைபர் செக்ஸ் சாட் எப்படி இருக்கும், அதையும் முயற்சிக்கலாமா, வெளியே தெரிந்தால் அவமானமாகிவிடுமே என்று பதட்டத்தைக் கொடுத்து மனைவியை இழந்தவன்தானே என்ற பரிதாபத்தைப் பூசிவிடுகிறார். கதை முடிவில் அவரே தனக்கான வழியைத் தேர்ந்தெடுக்கிறார்.

கல்வியோ வேலையோ தொழிலோ சொந்தவீடோ.. இதற்காக மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாகும் ஒருவர் வைராக்கியம் உள்ளவராயின் வாழ்க்கை நிலை மாறுவது உறுதி என்பதை “வசவுக்கு நன்றி” சொல்லும்படி ஆகின்றது.


கருப்பூ என்றொரு கதை நாடோடி வர்க்கத்தினர் ஆங்காங்கே போடும் டேரா பற்றியது. நாகரிகத்தின் தொடக்கக் காலத்தில் இப்படித்தான் குழுக்குழுவாகச் சமூகம் வாழ்ந்து வந்தது. எப்போது வேண்டுமானாலும் மாநகராட்சி ஊழியர்களோ அதிகாரிகளோ நகரை அழகுபடுத்தும் திட்டத்துக்காக விரட்ட நினைத்தால் இந்நாடோடிகள் வேறிடம் பார்த்தாக வேண்டும். அழகுபடுத்துதல் என்பதை, ‘பார்வைக்கு விருந்தாக இல்லாதவற்றை ஒளித்துவைப்பது அல்லது எட்டடி சுவரெழுப்பியோ வேட்டித் துணிகளை நெடுகக்கட்டியோ கண்ணில் படாமல் மறைத்து வைப்பதுதானே நம் வழக்கம்’ என்று சொல்வதெல்லாம் உச்சகட்ட நேர்மையான தைரியமான பகடியும் சாட்டையடியும்.

தலைப்புக் கதையான “அப்பாவின் வாசம்” சிறுகதையில் தன் தந்தையின் நினைவாக அப்பா பிள்ளையாகக் கவுதமன் ஏதோ சொல்லப்போகிறார் என எண்ணி வாசித்தால்... வேறொரு சிறப்பான வாசிப்பு அனுபவம்.

இன்னுமிருக்கும் கதைகள் உங்கள் வாசிப்புக்குக் காத்திருக்கின்றன.

■

கனகா பாலன்




# பற்றுக்கோடு

"பத்து வருஷமா இந்த ஆளுக்கு ப்பீ, மூத்திரம் அள்ளிப்போட்டுட்டு இருக்கேன், ஒன்னு காப்பாத்தணும் இல்லன்னா கொண்டுபோய்ச் சேர்க்கணும், ரெண்டுக்கும் வழியில்லாமப் படுத்தியெடுக்கான் கடவுளு.."

சுமதியக்கா இப்படித்தான். பூசி மெழுகிப் பேசத் தெரியாதவள். வாசலுக்கு வந்து நின்ற என்னைப் பார்த்ததும் புலம்பத் தொடங்கிவிட்டாள்.

கோயிலுக்குக் கிளம்புகிறாள் போல, கையில் குட்டியாக வயர்க்கூடை வைத்திருந்தாள். சாமந்திப் பூச்சரத்தின் மீது நான்கைந்து விளக்குத் திரிகள் பொத்தினாற்போல் அமர்ந்திருந்தன. புதிதாக வாங்கிய மண் அகல்கள் சற்று ஓரமாக மேல் தெரியும்படியாக இருந்தன.

எந்நேரமும் வீட்டில்தான் இருப்பாளென்ற நம்பிக்கையில் முன்கூட்டித் தெரியப்படுத்தாமல் வந்துவிட்டேன். ஆனாலும் அவள் முகத்தில் அதிர்ச்சியோ ஆச்சரியமோ இல்லை. அடிக்கடி வருபவள்தானே இவள் என்ற அவளது அசட்டை நான் எதிர்பார்த்ததுதான். போன் தொடர்பு உண்டு என்பதால் எங்களுக்குள்ளிருந்த தூரத் தொலைவுகள் மிகச் சுருக்கமே.

பாதங்களுக்குச் செருப்பைத் தோதாக்கிக்கொண்டே, அவள் "இரு, அஞ்சு நிமிஷத்துல வந்துர்ரேன்" என்றபடி கிளம்பிப் போனாள். மணி மூணு நாற்பது, செவ்வாய்க்கிழமை என்பதால் துர்க்கை அம்மனுக்கு என நானாக நினைத்துக்கொண்டேன்.

உள்ளே செல்லாமல் வாசற்படியிலேயே அமர்ந்துகொண்டேன். சுமதி அக்காவுக்குக் குழந்தைகள் இல்லை. மிகப்பெரிய வீடு.

ஓவியங்கள் : அரூ.ரஜினிகாந்தன்

ஒருமுறை, நான், “தியான மண்டபம் மாதிரி ரொம்ப அமைதியாயிருக்கு உன் வீடு” என்றபோது அவள் “ஏன் மயானக்கரைன்னும் சொல்லலாமே..” என்று ஒற்றை வார்த்தையால் அந்த அமைதியென்ற சொல்லையே எரித்துவிட்டாள்.

நான் ஏழாவது படிக்கையில், கதிர் மாமாவுக்கு மனைவியாகி எங்கள் ஊர் மருமகளாக வந்தவள்தான் இந்த சுமதியக்கா. அவர்கள் இருவருக்குமிடையே பதினைந்து வயது வித்தியாசமிருக்கும். வலுக்கட்டாயமாக அவள் கழுத்தில் ஏறிய தாலியின் கனம் தாங்கமுடியாமல் சுமந்துகொண்டிருப்பது போல இறுக்க முகமாகவே இருப்பாள். மறதியாகக்கூட அவள் சிரித்து யாரும் பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால் நான் விதிவிலக்கு.

ஒருமுறை கதிர்மாமாவும் அவரது அம்மாவும் இல்லாதபோது, பக்கத்து வீட்டிலிருக்கும் என்னைத் தயங்கித்தயங்கி அழைத்தாள்.

“அடடா, யார்கிட்டயும் பேசாத அக்காவை நாம ஃபிரண்டு பிடிச்சிற வேண்டியதுதான்” என்று துள்ளலோடு ஓடினேன்.

அவள் “மாலு, இதைக் கொண்டுபோய் போஸ்ட் ஆபிசுல போட்டுட்டு வரமுடியுமா, ப்ளீஸ்..” என்று என்னைப் பெரிய மனிதியாக நினைத்து, அதுவும் அவளுக்குத் தெரியவே தெரியாதென நினைத்திருக்கும் என் பெயரைச் சொல்லிக் கெஞ்சியது எனக்குள் மகிழ்ச்சியை ஏற்படுத்த, அன்று அந்த வேலையைத் தட்டாமல் செய்துகொடுத்தேன். பதிலுக்கு அவள் வீட்டு சம்மடத்திலிருந்து உழுந்தமாவு லட்டு ஒன்றினை எடுத்துக்கொடுத்து, அங்கேயே அமர்ந்து திங்கச் சொன்னாள். என் இரட்டைச்சடை ரிப்பனுக்குக் குஞ்சம் கட்டிவிடுவாள். ஜிப் விட்டுப்போன கவுனுக்கு ஊக்கு மாட்டிவிட்டிருக்கிறாள்.

அதற்குப் பிறகான நாட்களில் கதிர்மாமா இருந்தாலுங்கூட தைரியமாக அவளோடு சென்று பேசிக்கொண்டிருப்பேன். ஊர்க்கிணறு, மந்தை, குளம், பசும்பால் வாங்கும் இடமென எங்கள் ஊரில் இருக்கும் மூலைமுடுக்கெல்லாம் அறிமுகப்படுத்தியது நானே. விளையாடுவதற்கு வெளியே செல்லக்கூடாதென்று, பெரியவர்களால் தடை செய்யப்பட்ட, என் குமரிப்பருவத்தில் சுமதியக்காவோடுதான் நாளெல்லாம் பேச்சு என்றாகிப்போனது.

சிரிக்க, குறைபட்டுக்கொள்ள, அழ, வம்பிழுக்கவென ஏதாவது ஒன்று எங்களிடையே கிடந்து பிணைப்பை வலுப்படுத்திக்கொண்டேயிருந்தன. ஒன்றைத் தவிர.. “வா..க்கா கோயிலுக்குப் போவோம்” என அழைத்தால் மட்டும் மறுத்துவிடுவாள். சில நேரங்களில் வலிக்கும் வார்த்தைகளால் திட்டக்கூடச் செய்வாள்.

திடமான கல்லே மண்ணாக மாறும்போது, நிலையில்லாத மனதை வைத்துக் கொண்டிருக்கும் மனித குணமென்ன மாறாமலா போகும்.. அன்று நான் நம்பியது வீண் போகவில்லை. கோயிலுக்குப் போகப் பழகியதுமுதல் நிறைய மாற்றம் அவளுக்குள்.

*

அக்காவுக்காகக் காத்திருந்த நேரத்தில் அந்த வழியாக வந்து போகிறவர்களும் நின்று பேசிச் சென்றனர்.

“ஏன்டீ, எம்புட்டு நேரம் வெளியிலயே உட்கார்ந்திருப்ப, எங்க வீட்டுக்கு வா.. கடுங்காப்பியாவது போட்டுத் தருவேன்ல” என்று வசந்தி அத்தை அழைத்தபோதும் மறுத்தேன்.

உள்ளே ஏதோ சத்தம் கேட்டது. கூர்ந்து கவனித்தபோதுதான் தெரிந்தது, அது தொட்டிலில் படுத்திருக்கும் குழந்தைகளுக்கு விளையாட்டு காண்பிக்கப் பயன்படுத்தப்படும் கிலுகிலுப்பைச் சத்தம். எழுந்து பார்க்கப் போனேன்.

அதற்குள்ளாக வந்துவிட்ட அக்கா “இங்கேயே நில்லு மாலு, இந்தாக் கூப்பிடுதேன்..” என்றவாறு என்னையும் தாண்டி மாமா இருக்கும் அறை நோக்கி ஓடினாள். அவளுக்கும் அந்தச் சத்தம் கேட்டிருக்குமா? அல்லது அவள் உள்ளுணர்வு அவளை முடுக்கியதாவெனத் தெரியவில்லை. வியப்பாக இருந்தது எனக்கு.

கதவைச் சாத்திக்கொண்டாள். கழிவறையில் நீரொழுகும் இரைச்சல் பத்து நிமிடத்திற்கு மேல் தொடர்ந்தது. புரிந்துகொண்டேன். அதன் பின்னரும் சிறிதுநேரம் காத்திருந்தேன்.



முட்டிவரை தூக்கிக் கட்டிய புடவையோடு அறையிலிருந்து எட்டிப் பார்த்து “வா மாலு” என்றதும் போனேன்.

அப்போதுதான் அடிக்கப்பட்டிருந்த ரூம் ஸ்பிரே வாசனை குப்பென்று முகத்தில் அறைய மூச்சுவிடச் சற்றுச் சிரமமாகயிருந்தது. வெளிக்காட்டிக்கொள்ளவில்லை.

மாமாவின் தலைமாட்டில் சன்னமாக ஒலித்துக்கொண்டிருந்த ரேடியோ பெட்டியினை அணைத்துவிட்டு, அவரிடம் குனிந்து “இங்க பாருங்க, உங்களைப் பார்க்க நம்ம மாலு வந்திருக்கா..” முந்தானையில் முடிச்சிட்டுக்கொண்டு வந்திருந்த, கோயில் திருநீற்றை அவர் நெற்றியில் பூசிவிட்டாள். எனக்கும்.

மெதுவாக ஏறிட்டார், தெரியும்படியாக நின்றேன். வலக்கையைச் சிரமப்பட்டுத் தூக்கி நான் பற்றிக்கொள்ளத் தந்தார். பேச முடியவில்லை அவரால், உச்சந்தலையில் தடவிக்கொடுத்தேன். கண் கிடங்கு நிறைந்திருப்பது போலத் தழுதழுத்திருந்தது கண்ணீர். தாளமுடியாமல் வழிந்து வெளியேறி காது கடந்து தலையணையை நனைத்தது. துடைத்துவிட்டு முதுகினைத் தட்டிக்கொடுத்தாள். அருகில் கிடந்த கிலுகிலுப்பை அவர் தேவைக்கு அக்காவை அழைக்க என்று நான் கேட்காமலே சொன்னாள். அடுத்த நிமிடம் “மாமா தூங்கட்டும், நாம இங்க இருந்தாத் தொந்திரவா இருக்கும், வா.. ஹாலுக்குப் போவோம்,” என அங்கிருந்து என்னைத் தள்ளாதகுறையாக இழுத்துக்கொண்டு போனாள் சுமதியக்கா.

அறையின் ஒரு சுவரில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டோம். சிறிதுநேர அமைதிக்குப் பின் அவள்தான் “எத்தனை மணிக்கு டிரெயின்?” என்று கேட்டாள்.

“ஒன்பது இருபது, முத்துநகர் எக்ஸ்பிரஸ்.”

“அக்கா நீ கிரேட்” என்றேன்.

அதைக் கண்டுகொள்ளாமல் “மாலு.. எனக்கு வாழ்ந்தாப்புலயே இல்லை..” விரக்தியாகச் சொல்லிவிட்டு எழுந்து உள்ளே போனவள், ஒரு காக்கி நிறத் துணிப்பையோடு வந்தாள். அதை அப்படியே முழுதாக என்முன் கவிழ்த்தி, அதிலிருந்து ஒன்றை மட்டும் எடுத்து என்னிடம் நீட்டினாள். பலமுறை படிக்கப்பட்டதாலோ என்னவோ மிக நைந்து சீவனற்ற நிலையில் எழுத்துக்கள் மங்கலாகிப் போயிருந்தன.

“அக்கா, இது உன்னோட பெர்சனல். என்ட்ட கொடுக்குற..” அவள் முகத்தைப் பார்த்தேன்.

“சும்மா படி, அதுல நானே வச்சிக் கொஞ்சிக்கிறாப்புல ஒரு பவுசும் இல்லை..”

மனமொன்றாமல் பிரித்து வாசித்தேன். அதில்..

“மதிப்பிற்குரிய சுமதி அவர்களுக்கு..

நான் பணிசெய்யுமிடம் மாற்றப்பட்டு விட்டது. இன்னும் இரண்டொரு நாளில் வேறொரு ஊருக்குச் சென்றுவிடுவேன். எங்குயென உங்களுக்குத் தெரியப்படுத்த விருப்பமில்லை. இந்த முகவரிக்கு இனி கடிதம் எதுவும் அனுப்பவேண்டாம்.

இப்படிக்கு

சிவக்குமார்”

என்றிருந்தது. வறட்டுப் புன்னகையோடு என்னைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

“ஏன்டி மாலு, உயிருக்குயிரா காதலிச்ச ஒருத்தன் எவ்வளவு தூரம் என்னை அசிங்கப்படுத்தியிருக்கான் பார்த்தியா. படிச்சவன். கவர்ன்மெண்ட் உத்யோகத்தான்னு நம்புனேன். நாற்பது வருசத்துக்கு முந்தின கதைதான் இது. ஆனாலும் மனசு ஆறமாட்டேங்குது. கட்டையில போற வயசுல காதலைப் பத்திப் பேசுதாளேன்னு நீ நினைச்சாக்கூட பரவாலடி. ஏன்டா பொறந்தோம்னு இருக்கு. எல்லாத்தையும் கழிச்சிட்டுப் பார்த்தா உருப்படியா எதுவுமே தேறாத வாழ்வுல இன்னும் எதுக்கு இருக்கணும்னு தோணுது. அவங்கவங்களுக்குள்ள உணர்வுகளைக் களையா நினைச்சி ஆரம்பத்துலயே அதுகளுக்குக் கொள்ளி வச்சி இல்லாமச் செய்றது எவ்வளவு கொடுமை தெரியுமா..”

“புரியுதுக்கா.. ஆனா அதெல்லாம் இப்போ எதுக்கு..”

“தெரியலடி, இப்பப்போ இவரைப் பார்த்தாலே பாவமா இருக்கு, எனக்குன்னு இருக்குற பிடிமானம் உருவி நழுவிப் போற மாதிரியே இருக்கு.”

“ம்ம்” பேசட்டுமென விட்டேன்.

“நான் காதலிச்சதுக்குத் தண்டனையா, வயசு வித்தியாசம் பார்க்காம இவரைத்தான் கட்டிக்கோன்னு சொன்னப்போ, எதிர்க்க முடியாம மேல்வயிறு வரை தொங்கத்தொங்க பதினோரு பவுனு தாலிச்சங்கிலியை இவரு கெட்டும்போது, மரம் மாதிரி கழுத்தைக் கொடுத்தேன். ச்சே.. ன்னு இருக்குடி, இப்போ நினைச்சாக்கூட..” என்றவள் தொடர்ந்து..

“உனக்கு ஞாபகம் இருக்கா, வந்த புதுசுல ஒருநாள் உன் கையில குடுத்தனுப்புனேனே ஒரு லெட்டர், அதுகூட அவனுக்குப் போய்ச் சேர்ந்திருக்காதுன்னு தெரியும். பயந்தாங்கொள்ளி அவன். விட்டுட்டுப் போயிட்டான். கோபத்தையெல்லாம் எழுதியெழுதி என்கிட்டயே வச்சிக்கிட்டதுதான் இத்தனையும்..”

“...”

“இதெல்லாங்கூடப் பரவாயில்லை. அந்தச் சனியனை விட்டொழிச்சி, நமக்கு இவர்தான்னு ஏத்துக்கிட்டு, இவரோட வாழ்க்கையைத் தொடங்க நினைக்கையில வச்சாம் பாரு வேட்டு. இந்த ஆளு இப்படிக் கிடந்துபோனாரு. என்னை மட்டும் ஏன் இப்படி வளைச்சி வளைச்சித் துன்பக்கயிறு சுத்திக்கெடக்கு மாலு..” அவ்வப்போது ஏதாவது ஒன்றைச் சொல்லி வருத்தப்படும் சுமதியக்கா, இன்று மொத்தமாக மனதைக் கழுவி வெளியேற்றிவிடும் முடிவோடிருந்தாள்.

மணி ஆறுக்கு மேல் ஆகியிருந்தது. அம்மா எதிர்பார்த்துக்கொண்டிருப்பாள். கிளம்புவதற்காக எழுந்த நான் “எல்லாம் சரியாகுங்க்கா, இப்போவெல்லாம் நீ நிறைய சாமி கும்பிடுதேல்ல. நல்லதே நடக்கும் பாரு” என்றேன்.

“அடப்போடி, கோயில், விரதம்ன்னு சொல்லிக்கிறதெல்லாம் என்னை நானே தெரிஞ்சே ஏமாத்திக்கிடுறது, வங்குவங்குன்னு சுரண்டியெடுத்த பிறகு வத்திப்போன மனசுல என்னத்தக் கொண்டு நிரப்பன்னு நானே இழுத்துப் போட்டுக்கிட்டேன் இதெல்லாம்..” சொல்லிக்கொண்டே, அந்தக் கடிதக் காகிதங்களை மொத்தமாக அள்ளிப்போட்டு மீண்டும் அதே பைக்குள் திணித்து உள்ளே கொண்டுபோகப் போனாள்.

நான், “அதை என்ட்ட கொடு, நான் எங்கேயாவது பத்திரமா வச்சிக்கிறேன். இதுலயிருந்து விடுதலையா இரு..” என்று கேட்க, முதலில் பிடிவாதமாகத் தர மறுத்தாள். அப்புறம் ஒருவழியாக அவளிடமிருந்து பிடுங்கிக்கொண்டேன்.

தெருமுனை வரை கூடவே வந்தவள், ஒரு சம்மடத்தைக் கையில் திணித்துவிட்டுச் சென்றாள். ஏதாவது தின்பண்டமாக இருக்கக்கூடும்.

*

நள்ளிரவு, முத்துநகர் எக்ஸ்பிரஸ் திருச்சி காவேரி ஆற்றின் பாலத்தில் போய்க்கொண்டிருந்தது. அந்தக் காகிதப்பையை இறுக்கிக் கட்டி வீசியெறிந்தேன். காட்டாற்று வெள்ளம் முடிவில் கடலுக்குச் சென்று ஆவியாகிவிடுவதைப்போல சுமதியக்காவின் கொந்தளித்த மனம் ஓர்நாள் நிதானமடையுமென நம்பத் தொடங்கினேன்.

■

கட்டுரை

பெ. ரவீந்திரன்



# மழைக்கஞ்சி

கடுமையான வறட்சி மற்றும் பஞ்ச காலங்களில் மழை வேண்டித் தங்களை உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் வருத்தி அதன் மூலம் வருணபகவானின் கருணையைப் பெற்று மழை பெறலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் உருவான ஒரு பண்பாட்டு நிகழ்வே "மழைக்கஞ்சி" என்பதாகும்.

முல்லை நிலமான கரிசல் பூமியில் வானம் பார்த்த மானாவாரி நிலங்களே அதிகம். இங்கு மழைநீர் சேமிப்பதற்கான பெரிய ஏரிகளோ, போதிய அளவிலான குளங்களோ இல்லாத நிலை. பருவ மழைகளை மட்டுமே நம்பிச் செய்யப்படும் மானாவாரி விவசாயமும் கால்நடைப் பராமரிப்புமே பிரதான தொழில்களாக இருந்தன.

அடிக்கடி பருவமழை பொய்த்துக் கடுமையான வறட்சியும் பஞ்சமும் பட்டினியும் ஏற்படுவதுண்டு. குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுப் பிழைப்பிற்காக வேறு நிலப்பரப்பைத் தேடிப் புலம்பெயர்வது இயல்பான ஒன்றாக இருந்துள்ளது. அதனால் பிழைப்புக்கு வழி தேடி வேறு நிலப்பரப்புக்குப் புலம்பெயர்பவர்களைக் குறிக்க "பஞ்சம் பிழைக்கப் போனவர்" என்ற பதம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

மழை பொய்த்துக் கடுமையான வறட்சியும் பஞ்சமும் ஏற்படும் காலங்களில் வீடுகளில் பாட்டிகள் குழந்தைகளுக்குச் சொல்லும் கதைகள் கூட பஞ்சம் பற்றியதாகவே இருந்துள்ளது. குறிப்பாக தாது வருசப் பஞ்சத்தைப் பற்றிக் கதைகதையாகச் சொல்லி இருக்கிறார்கள். அப்போது வருண பகவான் குறித்த கதைகளையும் சொல்லியிருக்கிறார்கள்.

அதில் ஒன்று, "வருணபகவான், பூலோகத்தில் நடக்கும் அநியாயங்களையும், அக்கிரமங்களையும் பார்த்துக் கொதிப்படைந்து கோபப்பட்டு, மாதம் மூன்று மழை பொழிந்து விவசாயம்

செழித்து வளமாக இருப்பதால்தான் பூலோகத்தில் மக்கள் இப்படியெல்லாம் அநியாயச் செயல்களிலும் அக்கிரமங்களிலும் ஈடுபடுகிறார்கள். அதனால் நாம் அவர்களுக்கு ஒரு நல்ல பாடம் புகட்டவேண்டும் என்று கருதினாராம்.

உடனே வருணபகவான் மேகக்கூட்டங்களை எல்லாம் அழைத்து.. "நீங்களெல்லாம் முறையாக மாதம் மூன்று மழை பொழிவதால்தான் பூலோகத்தில் மக்கள் நீதி நியாயங்களுக்குக் கட்டுப்படாமல் அநியாயங்களிலும் அக்கிரமங்களிலும் ஈடுபடுகிறார்கள். அவர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும். மக்கள் திருந்தும்வரை எந்த மேகமும் மழை பொழியக்கூடாது" என்று உத்தரவு போட்டுவிட்டாராம்.

வருணபகவானின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு எந்த ஒரு மேகமும் மழை பொழியவில்லையாம். சில நாட்கள் கழித்து ஒரு குட்டி மேகம் மட்டும் லேசாக மழை பொழிந்துவிட்டதாம். உடனே மேகங்கள் எல்லாம் வருணபகவானிடம் அந்தக் குட்டி மேகத்தின் மீது புகார் செய்தனவாம்.

அதனால் கோபமும் ஆத்திரமும் அடைந்த வருணபகவான் குட்டி மேகத்தை அழைத்து "என் உத்தரவுக்கு ஏன் கட்டுப்படவில்லை?" என்று கேட்டாராம். அப்போது அந்தக் குட்டி மேகம் சொன்னதாம்.. "பகவானே எந்த ஒரு மேகமும் மழை பொழியாததனால் பூலோகத்தில் வறட்சி ஏற்பட்டு யாரும் விவசாயம் செய்யவில்லை. அதனால் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. ஆனால் மழை பொழிந்தவுடன் விவசாயம் செய்வதற்காக மக்கள் விதை தானியங்களை எடுத்து வைத்திருந்தார்கள். நான் லேசாக மழை பொழிந்ததும் அவர்கள் அந்த விதை தானியங்களை எல்லாம் எடுத்து விதைத்துவிட்டார்கள். தொடர்ந்து மழை இல்லாததால் முளைத்த விதைகள் எல்லாம் முளையிலேயே கருகிவிட்டன. இப்பொழுது மக்களிடம் விதைப்பதற்குக்கூட தானியங்கள் இல்லை" என்றதாம்.

உடனே வருணபகவான் அந்தக் குட்டி மேகத்தைக் கட்டி அணைத்துக்கொண்டாராம்."

இது போன்ற வருணபகவானின் கதைகளைச் சொல்லித் தங்களது இயலாமையைத் தேற்றிக்கொள்வதோடு வருணபகவானின் கருணையைப் பெறவும் முயற்சித்துள்ளார்கள். அப்படிக் கோபமடைந்த வருணபகவானிடம் மழை பொய்த்ததால் மக்கள் படும் துன்பங்களை எடுத்துச்சொல்லி அவரது கருணையைப் பெறுவதன் மூலம் மழையைப் பெறலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்ததே "மழைக்கஞ்சி" என்ற வருணபகவான் வழிபாட்டு முறை.

அதன்படி மழை பொய்த்துக் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராம மக்கள் கூடி மத்தியானம் கடுமையான வெயிலில்,

"காடு செழிச்சிருக்க கம்மங்கஞ்சி ஊத்துங்க

மக்க செழிச்சிருக்க மழைக்கஞ்சி ஊத்துங்க"

என்றும், தென்மாவட்டங்களில் உள்ள தெலுங்கு பேசும் மக்கள்

"வான லேது வருச லேது வானகெஞ்சி பொய்யண்ட

நீலு லேது நிப்புலு லேது நிண்ட கெஞ்சி பொய்யண்ட"

(மழை இல்லை மழை இல்லை மழைக்கஞ்சி ஊத்துங்க தண்ணி இல்லை நெருப்பு இல்லை நிறைய கஞ்சி ஊத்துங்க)

என்று தெலுங்கிலும் பாடிக்கொண்டு வீடு வீடாகச் சென்று பெரிய பாத்திரங்களில் உணவைப் பிச்சையாகப் பெறுவார்கள். இங்கு 'வான' என்பதும் 'வருச' என்பதும் மழையைக் குறிக்கும் சொற்களாகும். அதேபோல் 'நிப்பு' என்பது நெருப்பு. அதாவது கடுமையான பஞ்சத்தினால் வீட்டில் அடுப்பு எரியவில்லை என்பதை 'நிப்பு லேது' (நெருப்பு இல்லை) என்று கூறிப் பாடுகிறார்கள்.

அந்தப் பெரிய பிச்சைப்பாத்திரங்களில் கம்மங்கஞ்சி, சோளக்கஞ்சி, கேப்பைக்கூழ், அரிசிச்சோறு என்று எல்லா வகையான உணவும் கலவையாக இருக்கும். அதை

அப்படியே எடுத்துச் சென்று ஊருக்கு அருகில் இருக்கும் சிற்றாறு அல்லது ஓடைகளில் இருக்கும் சுடுமணலில் ஊர் மக்கள் மழை வேண்டி அழுது புரளுவார்கள். அப்படி சிறிது நேரம் சுடுமணலில் புரண்டு தங்கள் உடலை வருத்தி அழுத பின்னர், ஊரில் சேகரித்து வந்த உணவுக் கலவையைத் தண்ணீர் ஊற்றிக் கஞ்சியாகக் கரைத்துக் கைகளில் ஊற்றுவார்கள். அனைவரும் இரண்டு கைகளையும் ஏந்தி வாயில் வைத்துக் கஞ்சியைக் குடித்துவிட்டு வீடு திரும்புவார்கள்.

அப்படி மூன்று நாட்கள் தொடர்ந்து ஊரில் ‘மழைக்கஞ்சி’ வாங்கி உடலை வருத்திக் குடித்தால் வருணபகவான் இரக்கப்பட்டுக் கருணை கொண்டு மழை பொழிவார் என்று நம்பிக்கை. அப்படித் தொடர்ந்து மூன்று நாட்கள் செய்தும் மழை பொழியவில்லை என்றால் மூன்றாம் நாள் இரவு அந்தக் கிராமத்தின் நாட்டாண்மை தன் குடும்பத்துடன் ஊரில் சொல்லிக்கொள்ளாமல் பஞ்சம் பிழைக்கச் செல்வது போன்று சிறிது தூரம் செல்வார். அப்போது அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சிலர் தற்செயலாக அதைப் பார்த்து வேகமாகச் சென்று அவர்களை வழிமறித்து நாட்டாண்மையிடம் ஏன் ஊரைவிட்டுச் செல்கிறீர்கள் என்று கேட்பார்கள். அதற்கு நாட்டாண்மை சொல்வார்.. “ஊர்ல மழை தண்ணி இல்லை, எங்க பார்த்தாலும் ஒரே வறட்சி, பஞ்சம். மூணு நாளா மழைக்கஞ்சி எடுத்தும் வருண பகவானைக் கும்பிட்டும் அவரு நம்மள ஏறெடுத்துப் பார்க்கல, அதனால வேற பொகல் இல்லாம பஞ்சம் பொழைக்கப் போறோம்” என்பார்.

அந்தப் பெரியவர்கள் நாட்டாண்மையைச் சமாதானம் செய்து “வருணபகவான் நம்மள கைவிட மாட்டார், இன்னிக்குச் சாயங்காலம் கூட லேசா மேகங்கூடிச்சி, மழைக்கான அறிகுறி தெரியுது. வருணபகவான் உறுதியா கண்ணத் திறப்பாரு, நமக்கு நல்லா மழை பெய்யும், ஊரு செழிக்கும்” என்று நம்பிக்கை ஊட்டி நாட்டாண்மையையும் அவரது குடும்பத்தாரையும் ஊருக்குத் திரும்ப அழைத்து வருவார்கள்.

இதற்கிடையில் ஊர் மந்தையில் ஆடு வெட்டி, உப்பில்லாத பச்சரிசியைப் (சர்க்கரை இல்லாத) பொங்கல் வைத்திருப்பார்கள். அதை நாட்டாண்மை குடும்பத்தாருக்கு முதலில் பரிமாறிப் பின்னர் ஊர்மக்கள் சாப்பிட்டுக் கலைவர்.

இதேபோல் அருப்புக்கோட்டை பகுதியில் “மழைக்கஞ்சி” நிகழ்வின்போது ஊர்மந்தையில் இருக்கும் பிள்ளையார் மீது மிளகாய்ப்பொடியை நன்கு தேய்த்துவிடுவார்களாம். பிள்ளையாருக்கு மிளகாய்ப்பொடியால் உடம்பெல்லாம் எரிச்சல் எடுத்து அந்த எரிச்சலைப் போக்க மழை பொழியச் செய்துவிடுவாராம். பிள்ளையார் மீது மழைபெய்து எரிச்சலைத் தணித்துக்கொள்வார் என்ற நம்பிக்கையாம் என்கிறார் எழுத்தாளர் கா.சி.தமிழ்க்குமரன்.

இந்த மழைக்கஞ்சி நிகழ்வில் பல்வேறு பண்பாட்டுக் கூறுகளை நாம் காணலாம். ஆதி பொதுவுடைமைச் சமூகத்தின் ‘போலச்செய்தல்’ என்ற பண்பாட்டு நிகழ்வின் நீட்சியாக இது காணப்படுகிறது. மேலும் தமிழக மக்களின் வழிபாட்டு முறைகளில் முக்கியமான ஒன்று. தங்களை மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் வருத்திக் கடவுளை வணங்குவதன் மூலம் அவன் கருணையைப் பெறுவது என்பது, உதாரணமாகச் சொன்னால் நேர்த்திக்கடன் என்று கைகளில் தீச்சட்டி ஏந்துவது, அலகு குத்துவது, வெறும் தரையில் உருண்டு வணங்குவது, தீக்குழி இறங்குதல் (நெருப்பில் நடத்தல்), முட்படுக்கையில் படுப்பது போன்று. ஆக மழைக்கஞ்சி என்பது வருணபகவானின் கருணையைப் பெறத் தங்களை உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் வருத்தி வணங்கும் முறை ஆகும். உளவியல்ரீதியாக அதை ஆங்கிலத்தில் “Sympathetic magic” என்பார்கள்.

இது முற்றிலும் ஆரிய வழிபாட்டு முறைக்கு நேர் எதிரானது. ஆரிய வழிபாட்டு முறையில்



உடலையோ மனதையோ வருத்துவது என்பது கிடையாது. மாறாக ஆரிய வழிபாட்டு முறையோ, யக்ஞங்கள் யாகங்கள் மூலம் கடவுளைத் திருப்திப்படுத்துவது. அந்த வழிபாட்டில் தங்கள் உடலை வளர்க்கச் செய்யும் பால், இறைச்சி முதலியவை கொடுக்கும் கால்நடைச் செல்வங்களின் பெருக்கத்திற்கான வேண்டுதலாகவே பெரும்பாலும் இருக்கும். ஆனால் தமிழர் வழிபாட்டு முறையில் தங்களது குறைந்தபட்சத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வேண்டுகோளாகவும் அது எல்லோருக்குமானதாகவும், "நாடு செழிக்க, நல்ல மழை பெய்ய வேண்டும், ஊரு செழிக்க உற்ற மழை பெய்ய வேண்டும்" என்பதாகவே இருக்கும். அது போலவே "மழைக்கஞ்சி"யும் உள்ளது.

அது மட்டுமல்லாது, பசுமைப்புரட்சிக்கு முன்பு சுயசார்பு விவசாயம் இருக்கும் வரை கிராமப்புறங்களில் விவசாயிகளிடம் தற்கொலை என்பது கிடையாது. என்னதான் வறட்சி, பஞ்சம், பட்டினி இருந்தாலும் தற்கொலை என்பது கிடையாது. "இந்த வருசம் விளையலன்னா என்ன? அடுத்த வருசம் விளையாமலா போகும்?" என்ற நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கையே "பஞ்சம் பிழைக்க ஊரைவிட்டுச் செல்லும் நாட்டாண்மையை ஊர் மக்கள் திரும்ப அழைத்து வந்ததை" நாம் இங்கே பார்க்க வேண்டியுள்ளது. மேலும் நாட்டாண்மை ஊரைவிட்டுப் பஞ்சம் பிழைக்கச் செல்வது என்பது ஊர்மக்கள் அனைவரும் பஞ்சம் பிழைக்க ஊரைவிட்டுச் செல்வதன் குறியீடு ஆகும். ஆக ஒட்டுமொத்த ஊருக்கும், மழை பொழிந்து ஊர் செழிக்கும் என்ற நம்பிக்கையை ஊட்டும் மிகச்சிறந்த பண்பாட்டு நிகழ்வே "மழைக்கஞ்சி".

■

# கவிஞர் விக்ரமாதித்யன்
## கடிதங்கள் - 10



# அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு...

**கடிதம் - 62**

**எழுதியவர் : கவிஞர் மீரா**

சிவகங்கை

11.2.74

அன்புள்ள தோழர் நம்பிராசன் அவர்களுக்கு,

வணக்கம். தங்கள் கடிதம் கிடைத்தது.

இடையில் சென்னை சென்றிருந்ததால் உடனே பதில் எழுத முடியவில்லை.

சொந்த ஊரில் இருக்கும் செய்தி அறிந்தேன். என்ன செய்கிறீர்கள்?

மதுரைத் தியாகராசர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தங்கள் நண்பர் அரங்கநாதனை சேரச் சொல்லலாம். அங்கு தமிழ் இலக்கியப் பிரிவினரும் சேரலாம். புதுக்கோட்டை அரசினர் கல்லூரியில் தமிழ் இலக்கியப் பிரிவு இருக்கிறது என்று சொன்னார்கள். விண்ணப்பிக்கச் சொல்லுங்கள்.

தென்காசி சென்றால் சித்தார்த்தனைக் கேட்டதாகச் சொல்லுங்கள்.

நெல்லை வரும்போது எழுதுகிறேன். சந்திக்கலாம்.

தாமரையில் எழுதுங்கள்.

அன்புள்ள
மீரா.

• •

**கடிதம் - 63**

**எழுதியவர் : கவிஞர் மீரா**

அகரம்,
சிவகங்கை

10.9.81

அன்புள்ள நண்பர் நம்பிராஜன் அவர்களுக்கு,

நலமறிய அவா.

தங்கள் கவிதைத் தொகுப்பு கிடைத்தது.

கவிதைகளை வந்த வேகத்தில் படித்தேன். புதிய தொனி. புதிய பார்வை.

ஸ்திதி III எடுத்துவிடலாமே...

தொகுதி சிறிதாயிருக்கும். இன்னும் சில கவிதைகள் அனுப்புங்கள்.

வண்ணநிலவனின் தொகுதியும் சிறிதாயிருக்கிறது. மேலும் சில கவிதைகள் கேட்டிருக்கிறேன்.

விரைவில் அச்சு வேலை தொடங்கும்.

கவிதைகள் இன்னும் சில கொஞ்சம் உள்ளதை அனுப்புக.

மீரா

• •

## கடிதம் - 64

எழுதியவர் : கவிஞர் மீரா

அன்னம் பி. லிமிடெட்,
சிவகங்கை
27.1.82

அன்புள்ள நம்பிராஜனுக்கு,

நலமறிய அவா.

கடிதம் கிடைத்தது. திருநெல்வேலி திரும்பிய செய்தி அறிந்தேன். சென்னை உங்களுக்குப் பொருந்த மாட்டேன் என்கிறதோ?

இன்றோடு மூன்று கவிதைத் தொகுதிகள் (வண்ணநிலவன் மெய்ப்பொருள் அனுப்பியிருப்பார்) முடிந்துவிட்டன.

நாலாவது தொகுதி உங்களது. பிப்ரவரி இரண்டாவது வாரம் அனுப்பிவைக்கிறேன்.

உங்கள் மனநிலை புரிகிறது. பல வேலைகளால் திட்டப்படி எதுவும் நடக்கவில்லை. பொறுத்துக்கொள்க - இன்னும் இரண்டு வாரங்கள்.

மீரா

• •

## கடிதம் - 65

எழுதியவர் : கவிஞர் மீரா

அகரம்,
சிவகங்கை
2.4.82

அன்புள்ள நம்பிராஜனுக்கு,

நலமறிய அவா.

நான் அதிகம் சோதித்துவிட்டேனோ? என் நிலை அப்படி. ஆசைகள் அதிகம். காரியம் சாதிக்க ஆள், பணவசதி, நேரம் எல்லாம் வேண்டுமே...

தங்கள் தொகுதி 52 பக்கங்கள் அச்சாகியும் மீதியை முடித்து அட்டையை மாட்ட முடியாத அளவுக்கு வேறு வேலைகள். அலைச்சல்கள்.. நிர்வாகச் சிரமங்கள்.

அடுத்த வாரம் எப்படியும் புத்தகம் வந்து சேரும். பொறுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

மீரா

• •

## கடிதம் - 66

எழுதியவர் : கவிஞர் மீரா

அன்னம் பி. லிமிடெட்,
சிவகங்கை
28.4.82

அன்புள்ள நண்பர் விக்ரமாதித்தன் அவர்களுக்கு,

தங்கள் கடிதம் கிடைத்தது.

எனக்கு சில பல சிரமங்கள். விளக்க நேரமில்லை. வியாபாரம் அது இது என்று. ஏதாவது எழுதுங்கள். உங்களுக்கு ஆத்திரமே வந்துவிட்டது. பரவாயில்லை.

கவிதைகளைத் தேர்ந்தெடுப்பதில் எனக்குப் பொறுமை இல்லாததுதான் தாமதத்திற்குக் காரணம். 52 பக்கங்கள் கொண்ட தங்கள் தொகுதி அட்டைக்காகக் காத்திருக்கிறது. இந்த வாரம் முழுதும் ஒரு முக்கிய அவசர வேலை. அடுத்த வாரம் புத்தகம் வெளியாகும். பிற பிறகு.

மீரா.

• •

## கடிதம் - 67

எழுதியவர் : கவிஞர் மீரா

அகரம்,
சிவகங்கை

14.5.82

அன்புள்ள திரு.நம்பிராஜனுக்கு,

நலமறிய அவா.

இன்று நூல் அஞ்சலில் 'ஆகாசம் நீல நிறம்' பத்துப் பிரதிகள் (ஆசிரியர் பிரதிகள்) அனுப்பிவைத்துள்ளோம். கிடைத்ததும் எழுதுங்கள். பல சிரமங்களால் அச்சிலும் அமைப்பிலும் அதிகம் கவனம் செலுத்த முடியவில்லை.

விற்பனைக்குப் பிரதிகள் தேவையென்றால் எழுதுங்கள்.

மீரா.

• •

## கடிதம் - 68

எழுதியவர் : கவிஞர் மீரா

அன்னம் பி. லிட்.,
சிவகங்கை

25.9.82

அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு,

நலமறிய அவா.

கடிதம் கிடைத்தது.

புத்தகக்கடைக்கு விவரம், மேலாளர் பார்த்து எழுதுவார். (நீங்கள் குறித்துள்ள கடிதப்படி சரிதான் என்று) 20 பிரதிகள் அனுப்பப்படுகின்றன. பெற்றுக்கொண்டதற்கு எழுதுக. புதிய புத்தகம் பற்றி இப்போது எதுவும் முடிவு சொல்ல முடியாத நிலை. ஜனவரிக்குப் பிறகுதான் யோசிக்க வேண்டும். எட்டயபுரம் அட்டையில் தாமதம்.

மீரா.

• •

## கடிதம் - 69

எழுதியவர் : கவிஞர் மீரா

அகரம்
சிவகங்கை

3.5.83

அன்புள்ள விக்கிரமாதித்யன்,

நலமறிய அவா.

கடிதம் கிடைத்தது.

1. நகுலன் கட்டுரை அச்சாகும். கொஞ்சம் பெரிதாக இருப்பது பற்றி யோசித்தேன். ஏதாவது குறைக்கலாமா?
2. தங்கள் தொகுதி கேட்டிருந்தீர்கள். ராயல்டி உங்களுக்கு வேண்டாமா? புத்தகமாக வாங்கிக்கொள்கிறீர்களா? கணக்குப் பார்த்துக்கொண்டிருக்கிறார். இதுவரை வாங்கியது போக மீதிக்குப் புத்தகங்களை அனுப்பச் சொல்கிறார்.
3. வேலை விவரம் இங்கு எல்லாம் இழுபறி. சமாளிப்பதில் எனக்கே ஒரு சலிப்பு ஏற்பட்டுவிட்டது. சென்னைதான் உங்களுக்கு வசதிப்படும் என்று நினைக்கிறேன்.

நேரில் பேசலாம். அடுத்த மாதம் தென்காசி வருவேன்.

மீரா.

• •

## கடிதம் - 70

எழுதியவர் : கவிஞர் மீரா

சிவகங்கை

16.3.84

அன்புள்ள நண்பர் நம்பிராஜனுக்கு,

நலம். நலமறிய அவா.

தங்கள் கடிதம் கிடைத்தது.

தங்கள் கடிதத்தின் ஒவ்வொரு வரியிலும் உங்கள் துயரமும் நிலையற்ற தன்மையும் புலப்படுகின்றன.

ஏதாவது ஓரிடத்தில் தாங்கள் தொடர்ந்து பணியாற்றப் பழகியிருக்க வேண்டும். இந்தச் சமூக அமைப்பில் கலைஞனுக்குரிய கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்வது அவ்வளவு எளிதல்ல. குடும்பத்துக்காகவாவது ஒரு வேலையில் இருந்தாக வேண்டிய நிர்ப்பந்தத்தைத் தவிர்க்க முடியாது.

இந்த முறை நம்பிக்கையோடு சென்னை செல்லுங்கள். ஏதாவது ஒரு பத்திரிகையில் அல்லது பதிப்பகத்தில் வேலை பெற முயலுங்கள்.

தங்கள் இரண்டாவது தொகுதி வெளிவர வேண்டும் என்று விரும்புகிறேன். எனினும் அன்னம் முடிக்காமல் வைத்திருக்கும் புத்தகங்கள் அதிகம். ஒரு வருடமாக அச்சாகாமல் உள்ள கையெழுத்துப் பிரதிகளை என்ன செய்வதென்று தெரியவில்லை.

முன்புபோல் என்னால் உற்சாகமாக நூல் வெளியீட்டுத்துறையில் கவனம் செலுத்த முடியவில்லை. பண நெருக்கடி வேறு. குடும்பச் சுமை வேறு.

பாக்கி வைத்துள்ள புத்தகங்களை முடிக்காமல் வேறு எந்த நூலையும் அச்சிடுவது பற்றி யோசிப்பதோ வாக்குறுதி கொடுப்பதோ தவறு என்று உணர்கிறேன். சங்கடமாக இருக்கிறது. பொறுத்திருங்கள்.

மீரா.

• •

## கடிதம் - 71

எழுதியவர் : கவிஞர் மீரா

அன்னம் விடுதூது,
சிவகங்கை

20.12.84

அன்புள்ள நண்பர் விக்கிரமாதித்யன் அவர்களுக்கு,

வணக்கம். நலமறிய அவா.

தங்கள் கடிதம் கிடைத்தது.

வெளியூர் சென்றிருந்தேன்.

'ஆகாசம் நீலநிறம்' புதுபதிப்பு வெளியிடுவதற்குச் சென்னையில் வேறு பதிப்பக நண்பர் முன்வருவதறிந்து மகிழ்ச்சி.

இன்னும் 100 பிரதிகளுக்கு மேல் விற்பனை ஆகாமல் உள்ளன.

பத்திரிகை தொடங்கிய பிறகு புத்தக வெளியீட்டில் என்னால் கவனம் செலுத்த முடியவில்லை. புத்தக விற்பனை முன்னைவிட நம்பிக்கையூட்டும் வகையில் இருந்தாலும் குறைந்த அளவு முதலீட்டை வைத்து ஆண்டுக்கு 20 புத்தகங்களுக்கு மேல் கொண்டுவர முடியவில்லை.

கைவசம் உள்ள புத்தகங்களை முடித்துக்கொண்டு மார்ச்சுக்குப் பிறகுதான் புதிய புத்தகங்கள் பற்றித் திட்டமிட முடியும்.

என்னால் தங்கள் தொகுதி வெளியீடு தாமதப்படக் கூடாது.

சென்னை நண்பரின் பதிப்பகத்தில் ஒப்படையுங்கள். பிறிதொரு சந்தர்ப்பத்தில் இயலுமானால் எழுதுகிறேன்.

தவறாக நினைக்க வேண்டாம்.

அன்புள்ள

மீரா.

• •

## கடிதம் - 72

எழுதியவர் : கவிஞர் மீரா,

அன்னம் விடுதூது,
சிவகங்கை

22.12.84

அன்புள்ள நம்பிராஜனுக்கு,

நலமறிய அவா.

நேற்றுமுன்தினம் எழுதிய கடிதம் கிடைத்திருக்கலாம்.

'முகத்துக்கு முகம்' தொடர்பான தங்கள் மறுப்புக் கடிதம் கிடைத்தது.

சிறந்த தமிழ்க்கவிஞர் என்பதால்தான் தருமுவைப் பற்றிய அந்தக் குறிப்புரை வெளியிடப்பட்டது. ஏதோ கொலைப்பாதகம் செய்துவிட்டது மாதிரி எந்த அடிப்படையில் வெளியிட்டீர்கள் என்று கேட்கிறீர்கள். தருமு பதில் அனுப்பியிருக்கிறார். அதை அப்படியே வெளியிட முடியாத நிலை. சில பதப் பிரயோகங்களை அப்படியே வெயிடுவது இங்கிதமற்ற செயல். எனவே edit செய்துகொள்ள அனுமதி கேட்டு எழுதியிருக்கிறேன். அவர் தராவிட்டால் உங்கள் கடிதத்தை வெளியிடலாம். நீங்களும் edit செய்துகொள்ள அனுமதி தந்தால்தான் முடியும். நயமான சொற்களாலே எதிரியை நடுங்கவைப்பதுதான் நல்ல எழுத்து. 'கடவுள் குருநாத்துக்கு நல்ல புத்தி கொடுக்கட்டும்' என்று எழுதும்போது சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் மாதிரி உயர்ந்துவிடுகிறீர்கள். இதுதான் நல்ல எழுத்துக்கு அடையாளம்.

மீரா.

• •

## கடிதம் - 73

எழுதியவர் : கவிஞர் மீரா,

சிவகங்கை

5.4.95

அன்புள்ள விக்ரமாதித்யன்,

நலம்தானே? நலமாகத்தான் இருக்க வேண்டும். நீங்களும் எல்லாவற்றிலும் 'இலக்கணங்களை' மீறாமல் இருக்க வேண்டும்.

சாதிக்க வேண்டியவை நிறைய. உங்களுக்குச் சில நல்ல நண்பர்கள் கிடைத்திருக்கிறார்கள். நல்ல வாசகர்கள் கிடைத்திருக்கிறார்கள். பிறகென்ன மேலே மேலே சிறகு விரிக்கலாமே?

நல்ல நாவல் ஒன்று எழுதுங்கள். அது உங்களையே புதுப்பித்துக் கொடுக்கும்.


'கவிமூலம்' வெளியிடலாம். விடுபட்ட சில கவிஞர்களையும் தொடலாமே... குழு மனப்பான்மையை எதிர்ப்பவன் நான். தங்கள் தேர்வில் வானம்பாடிக் கவிஞர்களுள் சிற்பியோ புவியோ இடம்பெற்றிருக்கலாம்.. அப்துல் ரகுமான், அபி இப்படிப் பாடியவர்கள் - இன்றைய புதியவர்கள் ஓரிருவரைத் தொடலாம் (ஏதோ ஏரிக்கு வலை வீசுகிறேன் என்று எண்ண வேண்டாம்...)

ஜூன் ஜூலையில் ஒழுங்குபடுத்தி அனுப்புங்கள்.

அடுத்த வாரத்துக்குப் பிறகுதான் கணக்குப் பார்ப்பான் கதிர். தங்களுடைய நிலைமை தெரியும். விற்றவரை என்பது மற்றவர்களுக்கு.. உங்களுக்கு 'விற்காதவரை' - அதாவது மொத்தமாக முடித்து அனுப்பச் சொல்கிறேன்.

மீரா.

■




வெறும் வண்டியாய் நகர்கையில்
அதிகம் கனக்கிறது
சைக்கிள் ரிக்ஸா.
*

எடையில் சேரவில்லை
பலாப்பழத்திலிருந்த
தித்திப்பு.
*

வெளியில் செல்ல
கதவைத் திறக்கிறேன்
உள்நுழைகிறது ஒளி.
*

மரத்தின் ஆணியில்
ஆடிக்கொண்டிருக்கிறது
தச்சனின் கைப்பேசி எண்
*


சவாரியின்றி வீடு திரும்பும் நாட்களில்
ஹாரன் அடிப்பதில்லை
அப்பாவின் ஆட்டோ.
*

குறி தவறிய அம்பு
கூடு கட்டுகிறது
சிட்டுக்குருவி.
*

~ ரகுநாத் வ

■

# கவிச்சித்திரம்




என்னைக் கேட்காமலே என்னை
ஏலம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள்

ஏலம் கேட்கக் கூடிநிற்கும்
கூட்டத்தில் ஒருவனாகத்தான்
நானும் நின்றுகொண்டிருக்கிறேன்

போட்டிப்போடும் வாடிக்கையாளர்கள்
பெரும்பாலும்
கோட்டிக்காரர்களாகவே இருக்கிறார்கள்

எப்பாடுபட்டேனும் இறுதியில்
என்னை நானே ஏலம் எடுத்துக்கொண்டு
வீடு திரும்பிவிடவேண்டுமென்று
உறுதிபூண்டு நிற்கிறேன்

ஒருதரம் ரெண்டுதரம் மூன்றுதரமென்று
நூறுதரம் இருநூறுதரமென்று தாண்டி
போய்க்கொண்டிருக்கிறது
ஏலமும் காலமும்

~ ஜெ.பிரான்சிஸ் கிருபா

■

படைப்பு

எழுத்தின் இணைப்பு

## சிறை வாசிகளுக்கு

# புத்தக தானம் செய்வீர்!

“ஒரு எழுத்து மனிதனின் வாழ்வை மாற்றி அமைக்கும்” என்ற உயரிய எண்ணத்தோடு புத்தகங்களை திரட்டிக் கொண்டிருக்கும் சிறைத்துறையின் ஒப்புதலோடு இலக்கிய படைப்பு குழுமம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறைச்சாலை நூலகங்களுக்கும் நூல்களை சேகரித்துக்கொண்டிருக்கிறது.

**புத்தகங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**இலக்கிய படைப்பு குழுமம்**

#3, அஜந்தா டவர்ஸ், தரைத்தளம், கார்ப்பரேஷன் காலனி தெரு,

கோடம்பாக்கம், சென்னை – 600 024

Ph: +91 7338847788

padaippu admin@padaippu.com www.padaippu.com